# ‘அங்கோர்’

## உலகப் பெருங்கோயில்



ஞா. பாலச்சந்திரன்

# ‘அங்கோர்’

## உலகப் பெருங்கோயில்

(கம்போடியப் பயண இலக்கியம்)

ஞா. பாலச்சந்திரன்

ஞானம் பதிப்பகம்

25ஆவது வெளியீடு

**நூல் :**
'அங்கோர்' உலகப் பெருங்கோயில்
(கம்போடியப் பயண இலக்கியம்)

**ஆசிரியர் :**
ஞா. பாலச்சந்திரன்

**பதிப்பு :**
முதலாம் பதிப்பு, மார்ச், 2013.

**பதிப்பகம் :**
ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 06,
இலங்கை.
தொலைபேசி: 0094 11 2586013
தொலைநகல்: 0094 11 2362862
மின்னஞ்சல்: editor@gnanam.info
இணையத்தளம்: www.gnanam.info

**கணினி வடிவமைப்பு :**
ஞா. பாலச்சந்திரன்
திருமதி. கோ.சுதர்சினி

**அச்சுப்பதிப்பு :**
தரன்ஜீ பிரின்ட்ஸ்
506, ஹய் லெவல் றோட், நாவின்ன,
மகரகம, இலங்கை
0094 11 2801308-9

**Book:**
'Ankor Ulaka Perungkoil'
(Angkor Wat - Cambodia - Travelogue)

**Author :**
G. Balachandran

**Edition** :
First Edition, March, 2013.

**Published by:**
Gnanam Pathippakam
3B, 46th Lane, Colombo 6.
Sri Lanka.
Tel: 0094 11 2586013
Fax: 0094 11 2362862
Email: editor@gnanam.info
Web: www.gnanam.info

**Type setted and Designed by:**
G. Balachandran
Ms. G. Sudharshini

**Printed by:**
Tharanjee Prints
506, Highlevel Road, Nawinna,
Magaragama. Sri Lanka
0094 11 2801308-9

**Pages: (X +** 118)
**Copies: 500**

**Price:**
SL Rs. 300/=
US $ 10

**ISBN: 978-955-8354-45-2**

This licensed work is free to use, share, remix, and redistribute with attribution, but does not permit for any commercial work.

# சமர்ப்பணம்

**காசிப கோத்ர**

**ஆபஸ்தம்ப சூத்ர**

**யஜூர் வேதி**

பிரம்மஸ்ரீ **குமாரசாமி ஐயர் மங்களம்மா** தம்பதிகளின் 4ஆம் கொள்ளுப்பேரனும்

பிரம்மஸ்ரீ **ஞானசேகர ஐயர்** தம்பதிகளின் 3ஆம் கொள்ளுப்பேரனும்

பிரம்மஸ்ரீ **ஐயாத்துரை ஐயர் மாணிக்கம்மா** தம்பதிகளின் 2ஆம் கொள்ளுப்பேரனும்

பிரம்மஸ்ரீ **துரைச்சாமி ஐயர் சின்னம்மா** தம்பதிகளின் கொள்ளுப்பேரனும்

பிரம்மஸ்ரீ **தியாகராஜ ஐயர் பாலாம்பிகை** தம்பதிகளின் பௌத்திரனும்

பிரம்மஸ்ரீ **ஞானசேகர ஐயர் ஞானலக்ஷ்மி** தம்பதிகளின் புத்திரனுமாகிய

**பாலச்சந்திரன்**

ஆகிய நான்

எனது முதல் நூலாகிய

**'அங்கோர்' உலகப் பெருங்கோயில்**

எனும் பயண இலக்கியத்தை

எந்தன் **முந்தையர்களின்** திருப்பாதங்களில்

சமர்ப்பிக்கின்றேன்.

# பதிப்புரை

‘ஞானம்’ பதிப்பகத்தின் ***‘வெள்ளி’*** வெளியீடாக ***‘அங்கோர்’ உலகப் பெருங்கோயில்*** (கம்போடியப் பயண இலக்கியம்) எனும் இந்நூல் வெளி வருகிறது.

இதுவரைகாலமும் நாம் பன்முகத் தன்மைகொண்ட நூல்களை வெளி யிட்டு வந்துள்ளோம். மரபுக்கவிதை, புதுக்கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், கூத்து, நேர்காணல், கட்டுரை, மொழிபெயர்ப்பு, ஆய்வு, போர் இலக்கியம், சமயம், அரசியல், பயண இலக்கியம், பண்பாடு, தொகுப்பு நூல்கள் என அவை அமைந்தன.

இந்நூல்களை எழுதிய எழுத்தாளர்களாக மலையக எழுத்தாளர்கள், வடபுல எழுத்தாளர்கள், ஏனைய பிரதேச எழுத்தாளர்கள், புலம்பெயர் எழுத்தாளர்கள், முஸ்லிம் எழுத்தாளர்கள், பெண் எழுத்தாளர்கள் எனப் பலதிறத்தினராய் அமைந்தனர்.

ஞானம் வெளியீடாக வெளிவரும் இந்த நூல் எமது வெளியீட்டுத் துறையில் ஒரு மைல்கல் என நாம் விதந்துரைக்கக்கூடிய அளவுக்கு பெரும் வாசகர்களாலும், அறிஞர்களாலும் பாராட்டினைப் பெற்ற ஒரு பயணத் தொடராகும். ஞானம் சஞ்சிகையில் இப்பயண இலக்கியத் தொடர் வெளியாகியபோது இத்தொடரே அதிக வாசகர்களின் வரவேற்பைப் பெற்றது. இப்பயண இலக்கியத் தொடரை நூலாக வெளிக்கொணர வேண்டும் என்ற கோரிக்கையையும் பல வாசகர்கள் முன்வைத்தனர்.

இதுவரை காலமும் இருந்துவந்த பயண இலக்கிய எழுத்து முறைமையை மாற்றியமைத்து, ஒரு பயண இலக்கியத்தை நேர்கோட்டுப் பாதையில் நகர்த்திச் செல்லாது நவீனத்துவ, பின் நவீனத்துவப் பாணி யில் அளிக்கை செய்யும் ஒருவகைப் படைப்பு முறைமையை ‘ஞானம்’ சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியர் ஞா. பாலச்சந்திரன் இத் தொடரில் அறி-முகம் செய்து புதுமை செய்துள்ளார்.

எமது நிறுவனத்தின் வெள்ளி வெளியீடாக இந்நூலை வெளிக் கொணர்வதன்மூலம் தமிழ் இலக்கியச் செல்நெறியில் ஒரு புதியவகை பயண இலக்கியப் படைப்பு முறைமையை அறிமுகம் செய்த பெருமையை நாம் அடைகிறோம்.

எமது சஞ்சிகைப் பணிக்கும் நூல் பதிப்புப் பணிக்கும் ஆதரவு நல்கிவரும் வாசக அன்பர்களுக்கு எமது இதயங்கலந்த நன்றியை இத்தால் தெரிவித்துக் கொள்கிறோம்.

***தி. ஞானசேகரன்***
*editor@gnanam.info*
*(17-03-2013)*

‘ஞானம் பதிப்பகம்’
3-B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06, இலங்கை.

# அணிந்துரை

உலக இலக்கியப் பரப்பில் **'சுற்றுலா இலக்கியம்'** என்பது தனித்துவமான ஒரு வடிவமாக எழுச்சி கொண்டுள்ளது. தொன்மையான வர்த்தக நடவடிக்கைகளும், நாடுகாண் பயணங்களும், சமயம் சார்ந்த நகர்வுகளும், பேரரசுகளின் ஆள்புல விரிவாக்கங்களும் நாடுகள் பற்றிய ஆவணப்பதிவுகளை ஏற்படுத்தின. அவற்றிடையே இலக்கியச்சுவையும் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடக்கூடிய ஒரு பரிமாணமாகும்.

அதுவே சுற்றுலா இலக்கியத்தின் தோற்றத்துக்குரிய அடிநிலை ஊற்றாக அமைந்தது. இலக்கிய ஆளுமை கொண்டோர் சுற்றுலாப் பதிவுகளை மேற்கொண்டவேளை அது தனித்த இலக்கிய வகைமையாக மேலெழுந்தது.

திரு. ஞானசேகரன் பாலச்சந்திரன் எழுதியுள்ள **'அங்கோர்' உலகப் பெருங்கோயில்** என்ற பயண இலக்கிய நூல், சுற்றுலா இலக்கியத்துறையிலே தனித்துவமானது. பல்வேறு தகவல் அலகுகளின் திரட்டல்களுடன் இணைப்பு விரிநிலை (COMPREHENSIVE) கொண்ட ஆக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒருவகையில் பின்னை நவீனத்துவத்திற் குறிப்பிடப்படும் மரபுவழி உருவம் நீங்கிய எதிர் உருவமாக அல்லது மாற்றுருவமாக இந்த ஆக்கம் மேலெழுகிறது. ஒருமையியல் பன்மையியலாகவும், கருத்துக்களின் ஒட்டுருப்பண்பு (HYBRID) கொண்ட ஆக்கமாகவும் எழுத்துரு நிலை மாற்றம் பெறுகின்றது. அந்த வகையில் சுற்றுலா இலக்கியத்துக்குரிய மேலெழும் தனித்துவத்துடன் நூலாக்கம் உருவாக்கம் பெற்றுள்ளது.

மையப்பொருள் எல்லைகள் கடந்த விளிம்புகளை நோக்கிச் செல்லலும், அதனூடே அறிபொருள் சுண்டியிழுக்கப்படுதலும் நிகழ்த்தப்பட்டுள்ளன. மரபுவழியான படிநிலை அமைப்பையும் மீறிய பலநிலைத் தொடர்புகள் சூழமைவுடன் இணைந்து நூலில் மேலெழுகின்றன.

சுற்றுலா இலக்கியத்துக்குரிய கட்டுமை புதிய தளங்களை நோக்கி நகர்த்தப்படுகின்றன. அந்நிலையிற் அவ்வகை இலக்கிய வடிவத்தின் அமைப்பு "உள்ளடக்கல்" (INCLUSIVE) என்ற நவீனத்துவச் செயற்பாட்டோடு இணைந்து கொள்கின்றது. புதியதொரு நிகழ்வு தொடக்கி வைக்கப்படுகின்றது. அந்நிலையில் மரபு வழியான அறிகைச்சட்டத்திலிருந்து இந்த ஆக்கத்தை வாசிப்போரின் உளநிலை கட்டுடைப்புக்கு உள்ளாக்கப்படுகின்றது. இதனை வேறுவிதமாகக் கூறுவதானால் இத்துறையில் ஒரு புதிய முகிழ்கோலம் (FASHION) தோற்றம் பெறுதலையே இந்நூலாக்கம் வெளிப்படுத்துகின்றது.

*புதிய கருத்து வினைப்பாட்டோடு எழுத்தாக்கம் நகர்ந்து செல்கின்றது. அறிவியலிலும் தமிழர் பண்பாட்டுக்கோலமும், செவ்வியல் மரபுகளும் அந்த நகர்ச்சியின் ஊக்குவிப்பு விசைகளாகின்றன. அந்நிலையிற் பொருள் கோடலுக்குரிய தளம் விரிவடைந்து செல்கின்றது.*

*"சூழலியல் திறனாய்வு" என்ற புதியபுலம் திறனாய்வுத்துறையில் வளர்ச்சி பெற்றுவரும் சமகாலத்தில் சுற்றுலா இலக்கியத்தின் அறிகைப்பரிமாணம் மேலும் விரிவடையத் தொடங்கியுள்ளது. மரபு-வழியான பௌதிகச்சூழல், பண்பாட்டுச்சூழல், வரலாற்றுச் சூழல் ஆகியவை நவீன சூழலியற் கண்ணோட்டத்தில் மீள்வாசிப்புக்கு உட்படுத்தப்படுகின்றன. அத்தகைய ஒரு வாசிப்புக்குரிய ஏற்புடைமைகளையும் நூலாசிரியர் கவனத்துக்கு எடுத்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வரலாற்றுச்சின்னங்கள் சூழலியல் வலுவையும் அறிகை வலுவையும் சுமந்து நிற்றல் இந்த எழுத்தாக்கம் வழியாக வெளிப்படுத்தப்படுகின்றது.*

*சுற்றுலா இலக்கியம் கருத்தியல் சார்ந்த தளத்துடனும் இணைந்தது. விபரிப்பு நிலையிலிருந்து செய்தியைக் கையளிப்புச்செய்யும் செயல் முறைவரை கருத்தியல் அல்லது கோட்பாட்டு நிலை ஊடுருவி நிற்கும். உளக்கவர்ச்சியியல் அல்லது மனோரதியத்திலிருந்து சமகாலத்தைய பின்னைய நவீனத்துவம் வரையிலான கருத்தியல்களின் அறிகைப் புலப்பாடுகள் மேலெழுந்துள்ளன. ஓர் ஆய்வறிவாளர் நிலையில் பல்வேறு கோட்பாடுகளில் இருந்தும் பெறப்பட்ட நல்ல பரிமாணங்களை உள்வாங்கி ஆக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிகழ்ச்சிகளையும், விபரணங்களையும், காலவளர்ச்சியில் இடம்பெற்ற பளிச்சீடுகளையும் தொடர்புபடுத்திக் காட்டுதலும், சான்றாதாரத் தரவுகளைத் தருதலும், தகவல்களுக்கு ஆற்றுப்படுத்துதலும் புலமை நிலையில் நிகழ்த்தப் பட்டுள்ளன.*

*தனித்துவமான ஒரு சுற்றுலா இலக்கியத்தைப் படிக்கும் அனுபவத்தோடு வாசிப்பு நகர்ந்து செல்வதை உணர முடிகிறது. நூலாசிரியரின் எழுத்தாளுமை பாராட்டுதலுக்கும் உற்சாகப்படுத்தலுக்கும் உரியது.*

*பேராசிரியர்* ***சபா. ஜெயராசா***
***15-02-2013***

கொழும்பு,
இலங்கை.

# தரிசனத்துக்கு முன்...

H

**சித்தி யுறுவார் தெளியுங் கலையுறுவார்**
**பத்தி யுறுவார் பயனுறுவார் – அத்திமுக**
**முன்னவனை யைங்கரனை முத்திதரும் புன்னைநகர்**
**மன்னவனை முன்போற்று வார்**

**– வித்துவசிரோமணி பிரம்மஸ்ரீ சி. கணேசையர்**

**வணக்கம் :**

*தமிழ்த் தாயின் திருவடிகளுக்கு என் சிரம் தாழ்ந்த வணக்கம்!*
*தமிழ் அன்பர்களுக்கு என் அன்பான வணக்கம்!*

**அறிமுகம் :**

***'அங்கோர்' உலகப் பெருங்கோயில்*** *எனும் இந்தப் பயண இலக்கியம் எனது முதலாவது நூலாகும். 'தம்பிரான் வணக்கம்' (1578) எனும் முதலாவது தமிழ் நூல் அச்சாகி 435 வருடங்களின் பின்னர் 'ஞானம்' பதிப்பகத்தின் 25ஆவது வெளியீடாக இந்நூல் வெளிவருகிறது (2013).*

**சுய விமர்சனம் :**

*2011ஆம் ஆண்டில், நான் மேற்கொண்ட கம்போடியப் பயணத்தை ஒன்பது அத்தியாயங்களாக ஒழுங்கமைத்துள்ளேன்.*

*இந்த அத்தியாயங்களை நகர்த்தும்போது கட்டுரைப் பாங்கைத் தளர்த்துவதற்காகப் பல பாத்திரங்களை உருவாக்கி உலாவவிட்டுள்ளேன். கடற்குதிரை, மீன், பாம்பு, ஆமை எனும் உயிரினங்கள் பாத்திரங்களாகியுள்ளன. சிறுவர்கள் தொடங்கி மன்னர்கள் உள்ளடங்கலாக துறவிகள் வரை பாத்திரமாக்கப்பட்டுள்ளார்கள். இறந்தவர்கள் பலருக்கு மீள உயிர் கொடுத்துள்ளேன். மகாவிஷ்ணுவிற்கும் ஒரு 'ரோல்' கொடுக்கப்பட்டுள்ளது.*

*இப்பாத்திரங்கள் கொண்டு, ஒன்பது அத்தியாயங்களைச் சூழ்ந்து நடக்கும் அனைத்து நிகழ்வுகளும் காலம் கடந்தவை, தேசம் கடந்தவை, மொழி கடந்தவை, திணை கடந்தவை. வாய்பாடுகளைத் தகர்த்துச் செய்த ஒரு பரீட்சார்த்த முயற்சியே இந்தப் பயண இலக்கியம்.*

*இத்தொடரானது 2011 டிசம்பர் மாதம் தொடங்கி 2012 ஆகஸ்ட் மாதம் வரை 'ஞானம்' சஞ்சிகையில் பிரசுரமானபோது ('ஞானம்' 139 - 147) வாசகர்கள் பலர் கடிதங்களை எழுதி ஊக்கமளித்துள்ளார்கள். அதேபோன்று என்னை நேரில் கண்டவர்களில் சிலர் விமர்சனங்களைத் தெரிவித்துள்ளார்கள். பொதுவாக முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களாவன, "சம்பந்தா சம்பந்தமில்லாமல் எழுதுகிறீர்கள்", "ஓட்டம் நன்றாக இல்லை", "பலவற்றை வலிந்து திணித்துள்ளீர்கள்", என்பனவாகும்.*

*அனைவருக்கும் என் பதில் "ஓமோம் - நன்றி!"*

**நன்றி:**

*2011ஆம் ஆண்டு கம்போடியாவிற்குச் செல்லும் தருணம் இத்தகையதொரு தொடரை நான் எழுதப்போகின்றேன் என்ற எண்ணம் எனக்கு இருக்கவில்லை. கம்போடியாவிலிருந்து என் தந்தை யாருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். கம்போடி யாவைப் பற்றிய ஒரு பயணத் தொடரை 'ஞானம்' கலை இலக்கியச் சஞ்சிகையில் எழுதவேண்டும் என்று உற்சாகப்படுத்தியவர் எனது இலக்கியக் குருநாதரான, என் தந்தை. சிறுவயதிலிருந்தே என் தமிழ் ஆளுமை கண்டு அகமகிழ்ந்து, அதனை வளர்த்தெடுத்தவர் என் அன்னை. இத்தருணத்திலே இவர்கள் இருவரினதும் பாதங்களைச் சிரம் தொட்டு வணங்குகின்றேன்.*

*என்னுடைய முதலாவது நூல் என்று தயக்கம்கொள்ளாது அணிந் துரையை எழுதித் தந்த பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்களுக்கு என் பணிவான நன்றி. அதேபோன்று பின்னட்டைக்கான குறிப்புகளைத் தந்த பேராசிரியர் துரை. மனோகரன் மற்றும் மூத்த திறனாய்வாளர் கே.எஸ்.சிவகுமாரன் ஆகியோருக்கும் என் மகிழ்ச்சியுடன் கூடிய நன்றி.*

*இக்கட்டுரைத் தொடரை வாசித்தவர்களுக்கும் விமர்சனங்களைத் தெரிவித்தவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றி.*

*கணினி வடிவமைப்பில் எனக்கு உதவிய திருமதி. கோ. சுதர்சினிக்கும் நூலைச் சிறப்புற அச்சுப் பதித்த 'தரன்ஜீ பிரின்ட்ஸ்' நிறுவனத்துக்கும் எனது நன்றி.*

*என் ஒவ்வொரு கட்ட வளர்ச்சியையும் கண்டு அகமகிழ்ந்து என்னை ஆதரிக்கும் சகோதரங்களான தமக்கையாரின் குடும்பத்தையும் (மிருதங்க வித்துவான் க. சுவாமிநாதன் - வசுந்தரா), தமையனாரின் குடும்பத்தையும் (ஞா. இராஜேஸ்வரன் - கிருபா) இத்தருணத்திலே நன்றியுடன் நினைவுகூருகிறேன்.*

*எனது முன்னைய பயணங்களைப் போலல்லாது இந்தக் கம்போடியப் பயணத்தை இலக்கியமாக்கிய என் அன்புக்கினிய மனைவி மதுராவுக்கும், மகன் தியாகராஜனுக்கும், கருவிலிருந்தே பயணத்தைச் சுகித்த என் மகள் ரோகிணிக்கும் என் மனம் நிறைந்த அன்பு என்றும் உரியது.*

**பயணம் :**

*சரி... சரி.... வாருங்கள் புறப்படுவோம் 'அங்கோர்' உலகப் பெருங் கோயிலை நோக்கி...*

*குறிப்பு : காலம் காட்டும் கடிகாரத்தைக் கழற்றி வைத்து விடுங்கள்!*

*நன்றி!*

***ஞா. பாலச்சந்திரன்***
*(17-03-2013)*
*3B - 46th Lane, Colombo - 06, Sri Lanka.*
*balag.lk@gmail.com*

# 1 திரிசங்கு நிலை

## கி.பி. 2011 – ‘பேங்கொக்’ (தாய்லாந்து)

*ஒக்டோபர் மாதம், ஒரு சனிக்கிழமை. நேரம் காலை **6:35.** ‘பேங் கொக்’கில் (Bangkok) மழை தூறிக்கொண்டிருந்தது. அன்று தூறத் தொடங்கிய மழைதான் ‘பேங்கொக்’கில் **2011**ல் ஏற்பட்ட பாரிய வெள்ள அழிவின் தொடக்கம் என்பதை நான் பின்னர் உணர்ந்து கொண்டேன். கம்போடியாவைப் பற்றிக் கூறாமல் தாய்லாந்தின் (Thai land) தலைநகர் ‘பேங்கொக்’கைப் பற்றிக் கூறுகிறேனே.. என உங்கள் புருவங்களைச் சுருக்குவது எனக்குப் புரிகிறது. உலக வரைபடத்திலே கம்போடியாவின் அமைவிடத்தைப் பார்த்தீர்களேயானால் நான் ‘பேங்கொக்’கில் இத்தொடரைத் தொடங்கிய காரணத்தை ஊகித் திருக்கலாம்.*

***கம்போடியா** (Cambodia) நாடு தென்கிழக்காசியாவில் அமைந்துள் ளது. மூன்று புறங்களிலே தாய்லாந்து, லாஒஸ் (Laos), வியட்னாம் (Vietnam) ஆகிய நாடுகளினாலும், தென்பகுதி கடலினாலும் சூழப் பட்ட இயற்கை வளம் நிறைந்த நாடு.*

*இதுதான் என் மனைவிக்கு முதல் வெளிநாட்டுப் பயண அனுபவம். இலங்கையின் **‘பண்டாரநாயக்க’** விமான நிலையத்திலிருந்து தாய்லாந்தின் **‘சுவர்ணபூமி’** (Suvarnabhumi) விமான நிலையத்திற்கு, அவளை விமானத்தில் அழைத்து வந்திருந்தேன். ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு நிலம் வழியாகப் பயணிக்கும் அனுபவத்தை இன்றுவரை இலங்கைத் தீவு அவளுக்குக் கொடுக்கவில்லை! ஆகவே கம்போடியாவிற்கு விமானத்தில் செல்லாமல், தாய்லாந்திலிருந்து*

*நிலம் வழியாகச் செல்வதற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தேன். பயணச் செலவைப் பலமடங்கினால் குறைப்பதும் இதன் மறைமுக நோக்கமாகும்!*

*“அடியே...... லேட் ஆகுது...”*

*அன்பிலே நான் அவளை அழைப்பது ‘அடியே’ என்றுதான். இதை யுணர்ந்த என் மனைவி பதட்டம் காட்டியதாகத் தெரியவில்லை.*

*“ஓமப்பா.... நான் ரெடி” என்று தலை சீவிக்கொண்டே பதிலளித் தாள்! ‘நேரத்திற்கு இயங்குபவன்’ என என் நண்பர்கள் மத்தியில் பெயர் பெற்றிருந்த நான், திருமணத்தின்பின் அம்மதிப்பை இழக்கத் தொடங்கினேன். மகன் பிறந்தபின் அப்படியொரு கூறு எனக்கிருந்த தையே நண்பர்கள் மறந்துவிட்டார்கள். இப்பொழுதெல்லாம் புறப் படும் நேரத்தை, அரைமணி நேரமோ ஒருமணி நேரமோ முன் கூட்டிக் கூறிவருகிறேன்.*

*அன்றுகூட 7:00 மணிக்குப் புறப்படவேண்டிய நேரத்தை 6:30 என்று மனைவியிடம் கூறியிருந்தேன். நான் செய்யும் இக் ‘கெட்டிக்கார’ச் செயலையும் அவள் உணரத் தொடங்கியிருக்க வேண்டும்.*

*6:45.*

*முதுகில் கொழுவும் பைகளை ஆளுக்கொன்றாக நானும் மனை வியும் கொழுவிக்கொண்டோம். 20 மாதங்கள் பூர்த்தியாகிய மகனை, மனைவி தூக்கிக் கொண்டாள். உருட்டிக் கொண்டுசெல்லக்கூடிய இரு பெரிய பொதிகளை நான் உருட்டத் தொடங்கினேன். நாம் தங்கியிருந்த விடுதி அறையை மூடிவிட்டு, விடுதியின் முன்புறத்தை நோக்கி நடந்தோம்.*

*விடுதியின் வாயிலை அடைந்தவுடன் அங்கு நின்றுகொண்டிருந்த ஒருவர் எம்மை அணுகினார். அணுகியவருக்கு தாய்லாந்தில் உள்ளவர் களைப் போன்ற முகத்தோற்றம் இருப்பினும், அவரின் உயரம் ஆறு அடிகளுக்கு மேலாக இருந்தது.*

*“ஸ்ரீ லங்கா?” என்று வினவியவாறு தன் கைத்தொலைபேசியை என்னிடம் காட்டினார். அதில் என் பெயர், கடவுச்சீட்டு (Passport) விபரங்கள் தெரிந்தன. தன் பெயர் **சிம்பொக்** (Simpok) என்றும் தானே நம்மை அழைத்துச் செல்லும் கார் ஓட்டுநர் என்றும் அறிமுகப் படுத்திக்கொண்டார்.*

*7 மணிக்கு வரவேண்டியவர் 10 நிமிடங்களுக்கு முன்பே வந்திருந் தார். அது எனக்குத் திருப்தியைத் தந்தது.*

அறைச் சாவியை கையளித்துவிட்டு முற்பணமாக வைப்புச் செய்திருந்த 1000 'பாட்' (Thailand Baht) பணத்தை விடுதி அலுவலரிட மிருந்து மீண்டும் பெற்றுக்கொண்டேன். அந்த விடுதியில் நாம் அறையைப் பெறும்போது 1000 'பாட்' (3000/=) பணத்தை முற்பண மாகப் (Deposit) பெறுவது அவர்களின் வழக்கம். நாம் ஏதாவது பொருட்களைப் பழுதாக்கினால் அல்லது உடைத்தால் அந்தப் பணத்திலிருந்து அவற்றிற்குரியதை அவர்கள் கழித்துக்கொள்வார்கள். 1000 'பாட்'ஐ திருப்பித் தந்தது மனைவியின் முகத்திலே திருப்தியைத் தந்தது. மகன் அறையிலுள்ள தொலைபேசியின் 'வயரை'ப் பிய்த்துச் சேதப்படுத்தியதை அவர்கள் கவனித்திருக்கவில்லை.

எம்மை உள்வாங்கிக்கொண்ட அந்தக் கார் கம்போடியாவை நோக் கிப் புறப்பட்டது.

மழை பெருக்கத் தொடங்கியிருந்தது.

❍ ❍ ❍

## கி.பி. 1185 – அநுராதபுரம் (இலங்கை)

தாத்தாவின் வலது கையைப் பிடித்தவண்ணம் அந்தச் சிறுவன் தன் முன்னால் விஸ்வரூபமாக வியாபித்திருக்கும் கட்டடத்தைப் பார்த்தான். அவன் விழிகளில் பிரமிப்புத் தெரிந்தது. பெரியவரோ பெருமிதத்துடன் தம்முன்னால் இருக்கும் **ஜேதவனராமய** (Jetavana ramaya) விகாரையைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"தாத்தா, இந்த விகாரையை எப்போது கட்டினார்கள்?"

"800 வருடங்களுக்கு முன்னர் 3ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உன் முன்னோரில் ஒருவரான **மகாசேன(ன்)** மன்னர் (கி.பி. 275-301) இதைக் கட்டினார். அப்போது இந்நகரம் தலைநகராக இருந்தது" [1-01].

"இப்பொழுது நீங்கள் ஏன் புலத்தி (தற்பொழுது - பொலன்னறுவை) நகரிலிருந்து அரசாள்கிறீர்கள்?"

இலங்கை மன்னர் **மகா பராக்கிரமபாகு** (Parakramabahu 1 - கி.பி. 1153-1186), பேரனின் கேள்வியைப் பொருட்படுத்தியதாகத் தோன்ற வில்லை. அவர் பிறிதொரு கேள்வியைச் சிறுவனிடம் கேட்டார்.

"இதன் உயரம் என்னவென்று உத்தேசிக்கிறாய்?"

"......"

"சுமாராக 400 அடி. இன்று உலகத்திலுள்ள அனைத்து சமய வழிபாட்டுத் தலங்களிலும் இதுதான் உயரமானது"

இதைக்கேட்ட சிறுவன் மேலும் பிரமித்துப் போனான். சிறுவன் மன்னரைப் பார்த்துவிட்டு மீண்டும் ஜேதவனராமய விகாரையைப்

*பார்த்தான். இப்பொழுது அவனது பார்வையில் மதிப்பும் பெருமித மும் கலந்துகொண்டன.*

*"இது நம் குருநாதர் கூறிய எகிப்து நாட்டு பிரமிட் சின்னத்தைவிட உயரமானதா தாத்தா?"*

*கற்ற விடயத்தை உரிய தருணத்தில் இணைத்துப் பார்க்கும் தன் பேரனின் ஆற்றலைக் கண்டு அகமகிழ்ந்தார் மகா பராக்கிரமபாகு மன்னர்.*

*"இல்லை, அந்த அடிப்படையில் பார்த்தாயேயானால், இன்று உலகத்திலுள்ள உயரமான கட்டடங்களில் இது மூன்றாம் இடத்தை வகிக்கின்றது [1-02]. உன் குருநாதர் கூறிய கீஷாவிலுள்ள **பிரமிட்** (Giza-Egypt) **481** அடிகளுடன் முதலாம் இடத்தையும், பாரோஸ் தீவிலுள்ள (Pharos-Alexandria-Egypt) **கலங்கரை விளக்கம் 420** அடிகளுடன் இரண் டாம் இடத்தையும் வகிக்கின்றன."*

*இருவரும் விகாரையின் வாயிலில் அமைந்துள்ள புத்தபகவான் சிலையின்முன் தாங்கள் கொண்டுவந்த தாமரை மலர்களை வைத்து வணங்கினார்கள்.*

*"தாத்தா உலகத்திலேயே பெரிய புத்த பகவான் சிலை எங் குள்ளது?"*

*"சீனாவில் (Leshan Giant Buddha) காணப்படுகிறது. அமர்ந்த நிலை யில் இருக்கும் அச்சிலையின் உயரம் **233** அடி. இற்றைக்கு **350** வருடங் களுக்கு முன்னர் **9**ஆம் நூற்றாண்டில் கட்டியுள்ளார்களாம்."*

*"நம் ஜேதவனராமய விகாரையின் உயரத்தின் அரைவாசியிலும் சற்று கூடியது என்று கூறுங்கள்..."*

*பராக்கிரமபாகு மெல்லியதாகப் புன்னகைத்து விட்டுக் கூறி னார்,*

*"அதையும் இதையும் ஒப்பிடமுடியாது பேரனே. அச்சிலையின் பிரமாண்டத்தை நான் பார்த்ததில்லை. ஒரு கண் புருவத்தின் நீளம் **18** அடி என்று பார்த்தவர்கள் கூறுகிறார்கள்" [1-03]*

*"தாத்தா, உலகத்திலேயே பெரிய வழிபாட்டுத்தலம் எங்கள் ஜேதவனராமய விகாரை. இதனருகில் உலகத்தின் பெரிய புத்தபகவான் சிலை அமைந்தாலல்லவோ பொருத்தமாக இருக்கும்..."*

*பராக்கிரமபாகு மன்னர் சிரித்தார்.*

*"நான் ஜேதவனராமய விகாரையை உலகத்திலேயே பெரிய வழிபாட்டுத்தலம் என்று கூறவில்லையே. உலகத்திலேயே அதிகூடிய உயரத்தைக் கொண்ட வழிபாட்டுத்தலம் என்றுதானே கூறினேன்."*

Borobudur

சிறுவன் துணுக்குற்றான்.

“ஆனால், உலகத்தில் செங்கல் கொண்டு ஸ்தாபித்த கட்டடங்களில் பெரிய கட்டடமாக ஜேதவனராமய விகாரை என்றென்றும் திகழும் என்று என் உள்மனது சொல்கின்றது.” எதிர்காலத்தை அறிந்தவர்போல் பராக்கிரமபாகு மன்னர் கூறினார். [1-03]

“அப்படியானால் உலகத்திலேயே பெரிய, பௌத்தமத வழிபாட்டுத் தலம் எது தாத்தா?”

“8ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ஜாவா தீவிலுள்ள **பொரபதூர்**” (Borobudur -Java-Indonesia) [1-04]

சிறுவனின் முகம் வாடிவிட்டது. அப்பெருமையைத் தனது நாடு பெறவில்லையே என்று அறிந்தவுடன் அவனில் பாயும் அரசகுல இரத்தம் கவலையைக் கொடுத்தது.

“எல்லாச் சமயங்களையும் எடுத்துக்கொண்டால், எது தாத்தா உலகத்திலேயே பெரிய வழிபாட்டுத்தலம்?”

“கம்போஜாவிலுள்ள (Cambodia) ‘**அங்கோர்**’ (Angkor). சில வருடங்களுக்கு முன்னர் **கெமர்** சாம்ராஜ (Khmer Empire) மன்னன் **இரண்டாம் சூரியவர்மனால்** (Suryavarman II-கி.பி. 1113-1150) கட்டப்பட்டது” [1-05]

“எந்தச் சமயத்திற்குரியது?”

“தற்பொழுது (?) இந்துசமயம்”

“தற்பொழுதென்றால்......!”

“.....”

இருவருக்குமிடையில் நீண்டதொரு அமைதி நிலவியது.

“தாத்தா... நீங்கள் அங்கோரைப் பார்த்திருக்கின்றீர்களா?”

“இல்லை. உன்னுடைய பெரிய தாயார் ஒருவர் அங்குள்ளார். அவர் எனக்குப் பல தடவைகள் அங்கோரைப் பற்றி ஓலையனுப்பியுள்ளார்.”

குருநாதர் கற்பித்த வரலாறு சிறுவனின் மனக்கண்முன் விரிந்தது.

இற்றைக்கு 20 ஆண்டுகளுக்கு முன்னர் பராக்கிரமபாகு மன்னர் இலங்கை இளவரசி ஒருத்தியை கம்போஜ மன்னனுக்கு மணவினை நோக்கோடு கப்பலில் அனுப்பி வைத்தார். பர்மிய (Burma - Myanmar) **அலவுங்ஸித்து** மன்னன் (Alaungsithu கி.பி.1113-1167) அவ்விளவரசியைச் சிறைப்பிடித்து விட்டான். கோபம்கொண்ட பராக்கிரமபாகு மன்னன் தன் தளபதிகளான ஆதித்தன், கீர்த்தி ஆகியோரைத் தலைமை தாங்க வைத்து பர்மா நாட்டுடன் போர் தொடுத்தான். பர்மாவின் குசுமித் துறைமுகத்திலும் பாபஹலத் துறைமுகத்திலும் இலங்கைப் படைகள்

Leshan Giant Buddha

*தரையிறங்கி போரிலே பர்மா மன்னனைக் கொன்றார்கள். இது சம்பந்தமாக இலங்கையிலுள்ள **தேவனகலக் கல்வெட்டி**லும் குறிக்கப் பட்டுள்ளது. [1-06]*

*அந்த இளவரசிதான், தாத்தா குறிப்பிடும் தனது பெரிய தாயாக இருக்கவேண்டும் எனச் சிறுவன் எண்ணிக்கொண்டான். இந்த வரலாற்றினை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அவன் பராக்கிரம பாகு மன்னரை நோக்கி "தாத்தா..." என்றான்.*

*மன்னனின் செவிகளில், பேரனின் அழைப்பு விழுந்ததாகத் தெரிய வில்லை. அவர் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிவிட்டார். சிறுவனால் தன் சந்தேகத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை. அவனும் சிந்தனையில் ஆழ்ந்தான். தான் மன்னனாகி உலகத்திலேயே பெரிய வழிபாட்டுத் தலத்தை இலங்கையிலே கட்டுவேன் என எண்ணிக் கொண்டான்.*

*ஆனால் காலம் இடமளிக்கவில்லை. முதலாம் மகாபராக்கிரமபாகு மன்னனுக்குப் பின்னர் இலங்கையின் அரசாட்சியோ அரசியலோ (!) என்றுமே சிறப்பானதாக அமையவில்லை.*

❍ ❍ ❍

## கி.பி. 1185 – சோழ மண்டலம் (இந்தியா)

*குலோத்துங்கனின் (**3ஆம் குலோத்துங்கன்** - கி.பி. 1178-1218) முகம் வாடியிருந்தது. மன்னனின் துயரத்தை அனுசரித்து அரச சபை யிலும் அமைதி நிரம்பியிருந்தது. செய்தி கொண்டுவந்த ஒற்றன் அவையின் நடுவே நின்றுகொண்டிருந்தான். கம்போஜாவிலிருந்து தமிழகம் நோக்கிய, நீண்ட தூரப் பயணத்தின் களைப்பு அவன் முகத்தில் குடிகொண்டிருந்தது. மன்னன் அவனைச் செல்லுமாறு கையசைத்தான்.*

*"மன்னா, இது காலத்தின் நியதி. தற்பொழுது உன்னால் இதற்கு ஒன்றும் செய்ய முடியாது." அனுபவம் நிறைந்த குருநாதர் குலோத் துங்கனைப் பார்த்துக் கூறினார்.*

*"குருநாதரே, விஷ்ணு கோயிலான அங்கோர் கோயிலில் புத்தரின் சிலைகளை வைக்க எவ்வாறு கம்போஜ மக்கள் ஆதரித்தார்கள்?" குலோத்துங்கன் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினான்.*

*குருநாதர் தன் இருக்கையிலிருந்து எழுந்து உலாவியவண்ணம் கூறினார். "**ஜயவர்மன்** (Jayavarman VII - கி.பி. 1181-1219) பௌத்த மதத்தைப் பெரிதும் ஆதரித்து வருகிறான். தற்போது '**பேயோன்**' (Bayon)*




**தென்கிழக்கு ஆசியா**

எனும் பெரிய பௌத்தமதக் கோயிலைக் கட்டுகின்றானாம். மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழியே...”

மன்னன் தன் ஆதங்கத்தைத் தொடர்ந்தான். “இந்தியாவில் ***தஞ்சைப் பெருங்கோயில்*** *(Thanjavur - Brihadeeswarar Temple)*, கம்போஜாவில் ***அங்கோர்*** *(Cambodia - Angkor Wat)*, ஜாவாவில் ***சிவகிரஹா*** *(Java-Indonesia- Shive-Grha - Prambanan Temple)* எனும் பெரிய இந்து சமயக் கோயில்களால் இந்து சமயம் பரந்திருக்கின்றது. கம்போஜாவில், தற்போது ஜயவர்மன் பௌத்தத்தை ஆதரிப்பது கவலையைத் தருகின்றது குருநாதரே”

“ஜாவா தீவிலுள்ள சிவன் கோயில் குறிப்பிடுமளவிற்கு பெரிய கோயிலா?” தலைமைப் படைத்தளபதி வியப்புடன் வினவினார்.

குருநாதர் அதற்கு விடை கூறினார்.

“ஆம் தளபதியாரே. எம் ***இராஜராஜ*** சோழப் பேரரசர் தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டும் முன்பே 9ம் நூற்றாண்டில், கருங்கல்லிலாலான பெரிய கோயிலொன்றை சிவனுக்கு ‘ஜாவா’ தீவில் கட்டிவிட்டார்கள். இதன் உயரம் அண்ணளவாக 155 அடி. பின்னர் 10ம் நூற்றாண்டில் எம் இராஜராஜர் 212 அடி உயரமான விமானத்தைக்

**சிவகிரஹா**




**தாய்லாந்தது – கம்போடியா தரை வழிப்பாதை**

*கொண்ட தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டினார்" [1-07]*

*"கம்போஜாவிலுள்ள அங்கோரின் உயரமென்ன குருநாதரே?" மன்னன் இடைமறித்துக் கேட்டான்.*

*"அங்கோர் கோயிலின் உயரம் **213** அடி, ஆனால்...."*

*"ஆனால்?!"*

*"நிலத்திலிருந்து மூன்று தட்டுக்களாக கட்டப்பட்டுள்ளதாம். உயரத்தைவிட அதன் பிரமாண்டம் அளப்பரியதாம்."*

*"அரசே, நாம் கம்போஜா மீது படையெடுத்தால் என்ன?" தளபதி ஆர்வத்துடன் கேட்டார்.*

*குருநாதர் தளபதியை பார்வையால் அடக்கினார். "எமக்கும் கம்போஜா நாட்டுக்கும் சுமுகமான உறவு இருந்து வந்துள்ளது தளபதியாரே. **முதலாம் குலோத்துங்கன்** (கி.பி. 1070- 1120) தில்லைச் **சிதம்பரம்** கோயிலைப் பெருப்பித்து புதுப்பிக்கும்போது, அங்கோர் கோயிலைக் கட்டிய **இரண்டாம் சூரியவர்மன்** (கி.பி.1113-1150) கம்போஜாவிலிருந்து கரியநிற கல்லொன்றினைப் பரிசாக அனுப்பியிருந்தான். இவ்வினோதமான பரிசைக் கண்ட குலோத்துங்கன் அதையும் பாவித்து கோயிலைக் கட்டினான். கம்போஜ மன்னனின் ஊக்குவிப்பை மதிக்கும் முகமாக சிதம்பரம் கோயிலிலுள்ள அக்கல்லிலே கம்போஜா மன்னன் அனுப்பியதாகப் பொறித்தும் உள்ளான்" [1-09]*

*நீண்டதொரு அமைதி மீண்டும் அந்த அரச சபையைக் கௌவிக் கொண்டது.*

*“எமது சோழ இராஜ்யத்தை முன்னர் போன்று, பாரிய சாம்ராஜ்ய மாக விரிவாக்கவேண்டும் குருநாதரே” என்றான் மன்னன்.*

*குருநாதர் அமைதி காத்தார். மூன்றாம் குலோத்துங்கன்தான் சோழ அரசைச் சிறப்பாக அரசாண்ட மன்னர்களுள் இறுதி மன்னன். அவனுக்குப்பின் சோழ அரசு மழுங்கும், பின் என்றுமே மீளாது என்பதை குருநாதர் ஞானதிருஷ்டியால் அறிந்திருந்தாரோ என்னவோ...*

❍ ❍ ❍

*கம்போடியாவிலுள்ள அங்கோர்......,*

*இரண்டாம் சூரியவர்மனால் 12ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட அங்கோர்.......,*

*கெமர் சாம்ராஜ்ய மன்னர்களால் வணங்கப்பட்ட அங்கோர்.....,*

*கருங்கல்லிலாலான பெரிய கோயில் அங்கோர்....,*

*உலகத்திலேயே பெரிய கோயில் அங்கோர்....,*

*அங்கோர்...!, அங்கோர்....!!, அங்கோர்....!!!*

*அத்தனை சிறப்புக்களைக் கொண்டதா கம்போடியாவிலுள்ள ‘அங்கோர் வாட்’ (Angkor Wat)? இவற்றையறிந்த நான் வியந்து போனேன். இத்தனை காலமும் இதைப்பற்றி அறியாமலேயே இருந்து விட்டேனே, என்று சுருங்கியும் போனேன்.*

*‘யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ எனும் அளப்பரிய பொதுநலத்தை, இச்சிறியவன் செய்யவிளைந்ததன் வெளிப்பாடே இப்பயண இலக்கிய முயற்சி.*

*வாருங்கள் என்னுடன் கம்போடியாவிலுள்ள உலகப்பெருங்கோயில் ‘அங்கோர் வாட்’ஐ நோக்கிப் புறப்படுவோம்......*

❍ ❍ ❍

## கி.பி. 2011 – தாய்லாந்து

*நாங்கள் ஏறிய கார் கம்போடியாவை நோக்கி விரைந்து கொண்டிருந்தது.*

*பேங்கொக்கிலிருந்து கம்போடியா நோக்கிய இப்பயணத்தை இணையத்தின் உதவியால் நான் இலங்கையிருந்தே ஒழுங்கு செய்திருந்தேன். கம்போடியாவிலுள்ள **‘கிரிஷ்’** (Kriss) என்பவரைத் தொடர்பு கொண்டிருந்தேன். எம்மை ‘பேங்கொக்’கில் ஏற்றி கம்போடியாவில் அங்கோரிற்கு அருகிலுள்ள **‘சியாம் ரீப்’** (Siem Reap) எனும் இடத்திற்கு*

காரில் கொண்டுசென்று விடுவதற்கு (420 கிலோமீற்றர்) 120 அமெரிக்க ‘டொலர்’களை ‘கிரிஷ்’ கேட்டிருந்தார். (இலங்கைப் பணத்தில் அண்ணளவாக 13500/-)

நான் கார் ஓட்டுநர் ‘சிம்பொக்’கிடம் கதை கொடுத்தேன். அவர் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்தவரென்றும், தாய்லாந்து-கம்போடிய கரையில் வாழ்வதாகவும், நேற்று இரவே தான் ‘பேங்கொக்’ வந்து தங்கியதாகவும் கூறினார். மேலும், அவர் மூன்று குழந்தைகளுக்குத் தந்தையென்பதையும், அவர் ஒரு ‘ரவல் ஏஜென்ஸை’ நடத்துவதையும், இந்தக்கார் உட்பட சில கார்களும் ஒரு சிறிய பஸ்ஸும் வைத்துள்ளார் என்பதையும் அறிந்து கொண்டேன். நான் தொடர்புகொண்டிருந்த கம்போடியாவிலுள்ள ‘கிரிஷ்’ஷை அவருக்குத் தெரியவில்லை! அவரைத் தாய்லாந்திலுள்ள, கம்போடியாவிற்கு ‘விசா’ எடுத்துக் கொடுக்கும் ஓர் ‘ஏஜென்ற்’ தொடர்பு கொண்டதாகக் கூறினார்.

நான் இலங்கையிலிருந்து கம்போடியாவிலுள்ள ‘கிரிஷ்’ஷைத் தொடர்புகொண்டிருந்தேன். என்னையோ நான் தொடர்புகொண் டிருந்த ‘கிரிஷை’யோ அறியாதவர் தாய்லாந்தில் வாழும் ‘சிம்பொக்’. ஆனால் ‘சிம்பொக்’ துல்லியமாக நான் இருக்கும் இடத்திற்கு 10 நிமிடங்களுக்கு முன்னரே வந்து எம்மை அழைத்துச் செல்கிறார். அவர்களின் தொழில் ஒழுங்கமைப்பைக் கண்டு நான் மலைத்துப் போனேன்.

எமது இப்பயணம் மூன்று கூறுகளைக் கொண்டது என்பதைப் பின்னர் புரிந்துகொண்டேன். முதற் பகுதி ‘பேங்கொக்’கிலிருந்து காரிலே தாய்லாந்தின் கரையிலுள்ள Aranyaprathet எனும் கிராமத்தை அடைவது. இது ‘பேங்கொக்’கிலிருந்து அண்ணளவாக 215 கிலோ மீற்றர் தொலைவிலுள்ளது. அடுத்த கட்டம் கம்போடிய ‘விசா’வைப் பெற்று, தாய்லாந்து ‘இமிகிரேஷ’னூடாக (Immigration) வெளியேறி, கம்போடிய ‘இமிகிரேஷ’னூடாக கம்போடியாவிற்குள் செல்வது. இப்பகுதியை நடந்து கடக்க வேண்டும். 500 மீற்றர் இடைவெளியில் இரு நாடுகளின் கரைகளும் வேறுபடுத்தப்பட்டுள்ளன. கம்போடியா வின் ‘இமிகிரேஷ’னைத் தாண்டியவுடன் கரையில் Poi Pet எனும் ஊர் உள்ளது. மூன்றாம் கட்டம் Poi Pet லிருந்து ‘சியாம் ரிப்’ற்கு வேறொரு காரில் செல்வது.

தொடர்ந்து பெய்த மழை, மூன்று மணித்தியாலப் பயணத்தை ஐந்து மணித்தியாலங்களாக நீட்டிவிட்டது. 11:45அளவில் Aranya prathetit க்கு நாம் வந்தடைந்தோம். சிறந்த பாதையமைப்பும் காரின்

வசதியும் எம்மைக் களைப்படையச் செய்யவில்லை. ‘சிம்பொக்’, ஒரு விடுதியின் வாயிலில் காரை நிறுத்தினார். அங்கு எமக்கு கம்போடிய ‘விசா’வை எடுத்துத் தருபவர் எம்மை வரவேற்றார்.

அறிமுகங்கள் முடிந்தவுடன் எமது கடவுச் சீட்டுகளைப் பெற்று அவரே ‘விசா’ விண்ணப்பப் படிவங்களை நிரப்பினார்.

இலங்கையிலே கம்போடிய நாட்டுக்குரிய குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் இல்லை. ஆகவே தாய்லாந்து, மலேசியா நாடுகளுக்கான ‘விசா’க்களைப் பெற்றதுபோன்று கம்போடிய ‘விசா’வை என்னால் இலங்கையிலே பெறமுடியவில்லை. போரினால் ஏற்பட்ட பின் விளைவுகளில் இதுவும் ஒன்று. ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், பாகிஸ்தான், இலங்கை என 10 நாடுகளைக் கம்போடியா ஒதுக்கி வைத்துள்ளது. கம்போடியா ‘விசா’ பற்றிய விபரங்களைத் தெரிந்து கொள்வதற்கு, கம்போடியா சென்று வந்தவர்களை இலங்கையிலே தேடிப்பிடிப்பது மிகவும் சிரமமாக இருந்தது. நான் இலங்கையிருந்து பலமுறை தொலைபேசியில் கம்போடியாவின் தலைமைக் குடிவரவு குடியகல்வு திணைக்களத்துடன் தொடர்பு கொண்டிருந்தேன். ‘நான் கம்போடியாவிற்கு வரமுடியுமா?’ என்ற கேள்விக்கு தகுந்த பதில் கிடைக்கவில்லை. அவர்கள் ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ளவே சிரமப்பட்டார்கள். அதிஷ்டவசமாக நான் எழுதிய மின்னஞ்சலிற்கு கம்போடிய தலைமைக் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினர் ‘நான் வரமுடியும்’ என்று பதிலளித்திருந்தார்கள். ‘அங்கோர் வாட்’ஐ பார்க்க வேண்டும் என்ற என் ஆர்வம் பல வழிகளில் என்னை முயற்சி செய்ய வைத்திருந்தது.

‘விசா’க் கட்டணத்தையும், தங்கள் சேவைக் கட்டணத்தையும் சேர்த்து இரு கடவுச்சீட்டுகளுக்கும் மொத்தமாக 2400 ‘பாட்’ (7200/=) தருமாறு எமக்கு ‘விசா’ எடுத்துத் தரவிருப்பவர் கேட்டார். மகனுக்கு தனியான கடவுச்சீட்டு இல்லை. மகனின் விபரம் மனைவியின் கடவுச்சீட்டிலே உள்ளடக்கப்பட்டிருந்தது. நான் 600 ‘பாட்’ஐயும் 60 அமெரிக்க ‘டொலர்’களையும் சேர்த்துக் கொடுத்தேன். அவர்கள் கணக்குப்படி ஒரு அமெரிக்க ‘டொலர்’ முப்பது (30) ‘பாட்’ என்பதை தாய்லாந்தில் நான் தங்கியிருந்த நாட்களில் தெரிந்திருந்தேன்.

பணத்தையும் எமது கடவுச்சீட்டுக்களையும் பெற்றுக்கொண்ட அவர், தன்வேலையாள் ஒருவனிடம் கையளித்தார். அவன் ‘மோட்டார் சைக்கிள்’ஒன்றில் ஏறி ‘விசா’வைப் பெறுவதற்காக பறந்தான். நாங்கள் மீண்டும் காரில் ஏறிக்கொண்டோம். காரை ‘சிம்பொக்’ ஒரு சந்தியில்

நிறுத்தினார். நாம் 'விசா'வைப் பெறச் சென்றவனுக்காகக் காத்திருந் தோம். மழை இன்னமும் சினந்து கொண்டிருந்தது.

பதினைந்து நிமிடங்கள் சென்றிருக்கும். அவனது மோட்டார் சைக்கிள் எங்கள் கண்களில் பட்டது. வந்தவன் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு காரின் முன்பக்கம் ஏறினான். நான் அவன் கரங்களை கடவுச் சீட்டுகளுக்காகப் பார்த்தேன்.

"ஸ்ரீ லங்கா, நோ விசா?" என்று ஆங்கிலத்தில் கூறினான். என் மனம் வாடிவிட்டது. எனக்குக் கம்போடிய தலைமைக் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அனுப்பிய மின்னஞ்சலின் பிரதியைக் காட்டி அவனுக்கு விளங்கப்படுத்தினேன். ஆங்கிலத்தில் நான் கூறி யது 50 சதவீதம்கூட அவனுக்கு விளங்கவில்லை என்பதை அவன் முக பாவத்தில் தெரிந்துகொண்டேன். 'சிம்பொக்' அவனிடம் 'தாய்' (Thai) மொழியில் ஏதோ நீண்டதாகக் கூறினார். அதைத் தொடர்ந்து அவன் தொலைபேசியில் தன் அதிகாரியுடன் நீண்டநேரம் கதைத்தான்.

என் மகனும் மனைவியும் அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந் தார்கள்!

அவன் 'சிம்பொக்'கிடம் ஏதோ கூறிவிட்டு இறங்கித் தன் மோட்டார் சைக்கிளில் ஏறினான். கார் மெதுவாக நகர்ந்தது. நான் அடுத்து என்ன செய்வது என எண்ணிக்கொண்டிருந்தேன். கொண்டு வந்திருக்கும் மின்னஞ்சலை உரியவர்களிடம் காட்டி விளங்கப்படுத்தினால் விடயம் இலகுவாகும் என என் உள்மனது கூறியது. கார் 'ரவல் ஏஜென்ஸ்' ஒன்றின் முன்னால் நின்றது. எங் களுக்கு முன்னதாகவே எமக்கு 'விசா' எடுக்கச் சென்றவன் அங்கு மோட்டார் சைக்கிளில் வந்து சேர்ந்துவிட்டான். எங்களை இறங்கி அந்த 'ரவல் ஏஜென்ஸு'க்கு வருமாறு கூறினான். நாங்கள் இறங்கி அலுவலகத்தினுள் சென்றோம். எங்கள் எல்லாப் பொருட்களையும் இறக்கி அங்கு வைத்தார்கள்.

"கம்போடியாவிற்கு வந்திட்டோமா?" என்று என் மனைவி கேட்டாள்!!

"நான் குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு வரவா?" என்று அவனிடம் கேட்டேன். 12:00 மணியுடன் மூடிவிடுவார்கள் இப் போது நேரம் 1:00 மணி என்று அவன் கூறினான். "நீங்கள் இப்போது சென்று வந்தீர்களே?" என்று கேட்டபோது அவன் சிரித்துவிட்டு எமது கடவுச்சீட்டுகளை என்னிடம் தந்து தொலைபேசி அழைப்பு வரும்வரை காத்திருக்குமாறு கூறி வெளியேறினான்.

நாம் அறையிலே தனியே விடப்பட்டோம். கண்ணாடியூடாக வெளியே பார்த்தபோது 'சிம்பொக்' போய்விட்டதைக் கண்டேன்.

அவரிடம் முறையாக விடைபெறவில்லையே எனக் கவலையாக இருந்தது. எம் நிலையைக் கண்டு அவரால் ஒன்றும் செய்யமுடியாது. ஆகவே விடைபெறாமலே சென்றுவிட்டார் என உணர்ந்து கொண்டேன்.

கம்போடியாவிற்கு செல்ல மூன்று விதங்களில் 'விசா'க்களை அவர்கள் வழங்குகின்றார்கள். அனேகமான நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு முன்பே 'விசா' எடுக்கத் தேவையில்லை. கம்போடியாவினுள்ளே நுழையும்போது அவர்கள் 'விசா'வை குத்துவார்கள். அடுத்து இணையத்தின் மூலம் முன்னதாகவே 'விசா'வைப் பெறலாம். இது கம்போடியாவிற்குள் உட்செல்வதைத் துரிதப்படுத்தும். இவ்விரு முறைகளிலும் இலங்கை உட்பட 10 நாடுகளுக்கு விசாவைப் பெற அனுமதியில்லை. இலங்கை மக்கள் வேறொரு நாட்டிற்குச் சென்று அங்குள்ள கம்போடிய குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் மூலம் 'விசா'வைப் பெறவேண்டும். எமக்கு 'விசா' எடுக்கச் சென்றவர் தாய்லாந்தின் Aranyaprathet விலுள்ள கம்போடிய திணைக்களத்தின் மூலம் முயற்சி செய்துள்ளார். அத்திணைக்களத்தில் 'விசா' விண்ணப்பிக்கும் பிரிவை 12 மணியுடன் 'சாதாரண' மக்களுக்கு மூடிவிடுவார்களாம்.

வேறு சில நாடுகளுக்குப் பயணித்த அனுபவங்களை ஒன்றிணைத்து தற்போதுள்ள வழிகளை என்மனம் எண்ணத் தொடங்கியது. இன்று Aranyaprathetலிலுள்ள விடுதியொன்றில் தங்கிவிட்டு நாளை கம்போடியா 'விசா'விற்கு முயற்சிக்கலாம். நாளை, ஞாயிற்றுக்கிழமை 'விசா' விண்ணப்பிக்க முடியுமோ தெரியாது. 'விசா' கிடைக்காவிடில் கம்போடியாவைப் பார்க்காமல் மீண்டும் 'பேங்கொக்' சென்று, அங்கிருந்து நாங்கள் அடுத்துச் செல்லவிருக்கும் நாடான மலேசியா விற்குச் செல்லலாம்.

ஏதோ பிரச்சினை என்பதை என் மனைவி ஊகித்துவிட்டாள். நான் அவளருகில் அமர்ந்து பிரச்சினையைக் கூறத்தொடங்கினேன். அந்நேரம் தொலைபேசியைக் கையில் ஏந்தியவாறு விசாப் பெறச் சென்றவன் ஓடிவந்தான்.

தொலைபேசியில் கம்போடியாவிலிருந்து 'கிரிஷ்' கதைத்தார்.

தனக்கு இலங்கை சார்ந்து இதுதான் முதல் அனுபவம் என்றும் தனக்கு இப்படியொரு பிரச்சினை இருப்பதாக முன்னமே தெரியாது என்றும் கூறினார். நான் என்னிடம் இருக்கும் மின்னஞ்சல் பற்றியும் 'விசா' விண்ணப்பிக்க நானே நேராக நாளை செல்லவிருப்பது பற்றியும் தெரிவித்தேன். அதற்கு 'கிரிஷ்' கூறினார், தான் 'விசா' எடுத்துத்தரும் 'ரவல் ஏஜென்ஸ்' அதிகாரியிடமும் குடிவரவு

குடியகல்வு திணைக்கள அதிகாரியிடமும் கதைத்ததாகக் கூறினார்! தான் உத்தரவாதம் கொடுத்து, 800 'பாட்' 'வைப்பாக' ஒருவருக்குக் கொடுத்தால் 'விசா' இப்பொழுது பெறமுடியும் என்றும் கூறினார்! நான் சிரித்துக்கொண்டு சரியென்று கூறிவிட்டு தொலைபேசியை அவனிடம் கொடுத்தேன்.

என் சிரிப்பைக் கண்டு மனைவி தானும் சிரித்தாள்.

"என்னப்பா ஏதும் பிரச்சினையே....?"

"ஒன்றுமில்லை, 800 'பாட்' வைப்புச் செய்தால் எம்மை கம்போடி யாவுக்குள்ளே செல்லவிடுவார்கள்."

"அப்படியென்றால் நாம் கம்போடியாவை விட்டு வெளியேறும் போது 800 'பாட்'ஐத் திருப்பித் தருவார்களா?"

நான் சிரித்தேன். மனைவிக்குப் புரியவில்லை. அவள் என்னைப் பார்த்தபடி இருந்தாள். என் மகனுக்கு புரிந்திருக்கவேண்டும் அவன் பெரிதாகக் கைதட்டிச் சிரித்தான். அவன் சிரிப்பதைப் பார்த்து மனை வியும் சிரித்தாள்.

நான் 55 அமெரிக்க 'டொலர்'களையும் (1600 'பாட்' - 6000/=) கடவுச்சீட்டுகளையும் அவனிடம் கொடுத்த 20 நிமிடங்களில் அவன் விசாக்களுடன் வந்தான். 'விசா'க்களைப் பார்த்த எனக்கு அவை திருப்தியளிக்கவில்லை. 'விசா'வில் மனைவியின் பெயர் பிழையாக எழுதப்பட்டிருந்தது. எனக்குரிய 'விசா'வில் கடவுச்சீட்டு இலக்கமே எழுதப்படவில்லை, அதற்குரிய இடம் காலியாக இருந்தது. நான் இதுபற்றி அவனிடம் பேசிப் பயன் இல்லை என்பதை உணர்ந்தேன்.

எங்களுடைய பெரிய பையொன்றை எடுத்தவாறு செல்வோமென்று அவன் கூறினான். ஐம்பது மீற்றர் தொலைவில் இருக்கும் தாய்லாந்து 'இமிகிரேஷ'னை நோக்கி எங்கள் ஊர்வலம் ஆரம்பமானது.

தாய்லாந்து 'இமிகிரேஷ'னில் நீண்டதொரு வரிசை இருந்தது. எமது விபரங்களைப் பரிசீலித்துவிட்டு நாம் தாய்லாந்திலிருந்து வெளியேறிவிட்டதாக எமது கடவுச்சீட்டில் குத்தித் தந்தார்கள். அத்துடன் எமது தாய்லாந்து 'விசா' முடிந்துவிட்டதால் மீண்டும் தாய்லாந்தினுள் எம்மை அனுமதிக்கமாட்டார்கள். 500 மீற்றருக்கு அப்பாலிருக்கும் கம்போடிய 'இமிகிரேஷனை' நோக்கி நடக்கத் தொடங்கினோம்.

எமது நாட்டில் 2002, 2003களில் முகமாலையில் அரசின் எல்லை யைத் தாண்டி இயக்கத்தின் எல்லைக்குள் சென்ற எண்ணம் என் மன தைக் கௌவிக்கொண்டது.



அவன் பையைத் தூக்கியவண்ணம் முன்னே நடந்தான். நான் பொதியை உருட்டிய வண்ணம் அவனைத் தொடர்ந்தேன். நான் உருட்டிய பொதியின் சில்லு பெரிதாகச் சத்தம் போட்டது. மகனைத் தூக்கியவாறு மனைவி என்னைத் தொடர்ந்தாள். ஊர்க்கோயிலில் தேர் செல்லும்போது இருமருங்கிலும் மக்கள் நின்று பார்ப்பதுபோல தாய்லாந்து மக்களும் கம்போடிய மக்களும் எம்மை விடுப்புப் பார்த்தார்கள்.

தேர் மெதுவாக நகர்ந்தது.

நின்று திரும்பிப்பார்த்தேன். என் மனைவி 50 குழந்தைகள் புடைசூழ வந்துகொண்டிருந்தாள். எல்லாக் குழந்தைகளும் மனைவியிடம் பிச்சை கேட்டபடி வந்துகொண்டிருந்தார்கள். மனைவி வறுமையின் நிலைகண்டு திகைத்துப் போனாள்.

நாம் கம்போடிய ‘இமிகிரேஷனை’ வந்தடைந்தோம். எம்மை ஒரு வாங்கில் இருத்திவிட்டு எமது கடவுச்சீட்டுகளை குறித்த அதிகாரியிடம் எம்முடன் வந்தவன் கொடுத்தான். அந்த அதிகாரிதான் ‘வைப்பு’ பெறும் அதிகாரி என நான் எண்ணிக்கொண்டேன்.

அவ்வதிகாரி என்ன நினைத்தானோ தெரியாது எமது கடவுச்சீட்டுகளைப் பார்த்துவிட்டு ஏதோ காச்சு மூச்சென்று பெரிதாகக் கத்தினான். அங்கிருந்த அனைவரும் ஸ்தம்பித்து எம்மையும் அந்த அதிகாரியையும் பார்த்தார்கள். அவன் எமது கடவுச்சீட்டுக்களை மேசையில் தூக்கி எறிந்துவிட்டு ‘சிகரட்’டைப் பற்ற வைத்துக்கொண்டான். எம்மை அழைத்துவந்தவன் என்னருகில் வந்து மௌனமாக அமர்ந்தான். அவன் முகம் வெளிறிப்போயிருந்தது. விடயம் கைவிட்டுப் போவதை நான் உணரத் தொடங்கினேன். தனியாக நான் பல நாடுகளுக்குச் சென்று பல இன்னல்களைச் சந்தித்திருக்கிறேன். மனைவி, மகன் என்று வரும்போது வழிகளின் விசாலம் குறைந்துவிடுகிறது. எனக்குள் பயம் மெதுவாகப் பரவத் தொடங்கியது.

2004 ஆம் ஆண்டு வெளியான Tom Hanks நடித்த ‘The Terminal’ எனும் ஆங்கிலப் படம் என் மனக்கண்ணில் மின்னற்கீற்றாகத் தோன்றி மறைந்தது. Krakozhia நாட்டில் இருந்து அமெரிக்காவிற்கு விமானத்தில் Tom Hanks வந்திறங்குவார். அவர் விமானத்தில் பயணித்த தருணம் Krakozhiaவில் ஏற்பட்ட புரட்சி காரணமாக அமெரிக்கா Krakozhia நாட்டிற்கு தடை விதித்துவிடுகின்றது. இதன் காரணமாக அமெரிக்காவினுள் அவரை அனுமதிக்கமாட்டார்கள். அதே தருணம் தடை விதிக்கப்பட்டதால் Krakozhia பிரஜாவுரிமையுடைய அவர்

அமெரிக்காவிலிருந்து வெளியேறவும் முடியாது. இதன் காரணமாக பல மாதங்களாக அவர் விமான நிலையத்தினுள்ளேயே வாழ்வார்.

*'Mehran Karimi Nasseri'* என்பவர் பிரான்ஸ் (France) நாட்டு பாரிஸ் (Paris) மாநிலத்திலுள்ள விமான நிலையமொன்றில் 18 வருடங்கள் வாழ்ந்த உண்மைச் சம்பவத்தின் பாதிப்பால் எடுக்கப்பட்ட அருமையான நகைச்சுவைப் படம்.

சில நிமிடங்கள் கழிந்தன.

உள்ளிருந்து ஒருவன் 'வீடியோ'க் 'கமெரா'வுடன் வந்தான். 'சிகரட்' கட்டையை வீசிவிட்டு அவ்வதிகாரி எம்மைக் காட்டிவிட்டு உள் நோக்கி நடந்தான்.

எம்மை அழைத்து வந்தவன் எழுந்து எம்மைவிட்டு நகர்ந்து நின்றான். 'கமெரா'வினால் எம்மை 'வீடியோ' செய்தார்கள்.

என் மகன் வழமைபோல் 'கமெரா'வைப் பார்த்துப் 'போஸ்' கொடுத்துச் சிரித்தான்.

எமக்கோ திரிசங்கு நிலை!

❍ ❍ ❍



Tom Hanks **நடித்த**
'The Terminal' **திரைப்படம்**


[1-01] "நம்முன்னோர்அளித்த அருஞ்செலவம் - பாகம் I" (1969) - ஜி.ஸி.மென்டிஸ்

[1-02] http://en.wikipedia.org/wiki/Jetavanaramaya

[1-03] http://www.sacred-destinations.com/china/leshan-giant-buddha

[1-04] http://www.sacred-destinations.com/indonesia/borobudur

[1-05] "Ancient Angkor" (2011) - Michael Freeman & Claude Jacquse

[1-06] "இலங்கைச் சுருக்க வரலாறு" (2008) - க. குணராசா & கமலா குணராசா

[1-07] http://en.wikipedia.org/wiki/Prambanan

[1-08] http://www.hindu.com/mag/2009/03/29/stories/2009032950240800.htm

# 2 கம்போடியாவில் அகத்தியரின் வம்சம்

**கி.பி. 7ஆம் நூற்றாண்டிற்கு முன்.. (கம்போடியா)**

*சோதிப்பிழம்பு வானத்தினுள்ளே மறையத் தொடங்கியது.*

*பரம்பொருளாகிய சோதிப்பிழம்பு எங்கு செல்லும்? எங்கிருந்து வரும்? அண்டத்திலிருந்தா?*

*மாணிக்கவாசகப் பெருமான் தந்தருளிய திருவாசகத்தின், திருவண் டப்பகுதியின் முதல் பாடலிலே நாம் வாழும் இந்த அண்டமானது விரிந்து செல்கிறது என்கிறாரே!*

**அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்**
**அளப்ப ருந்தன்மை வளப்பெருங் காட்சி**
**ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்**
**நூற்றொரு கோடியின் மேம்பட விரிந்தன.**

*மாணிக்கவாசகர் கூறிய அண்டத்தின் தொடக்கப் பெருவெடிப்பை யல்லவா பின்னர் 20ம் நூற்றாண்டில் வெள்ளையர்கள் BigBang என்று ஏதோ தாம்தான் கூறியதாகத் தம்பட்டமடிக்கிறார்கள்!*

*சோதியானது இவ்விரிந்து செல்லும் அண்டத்தின் அப்பாலும் செல்லுமோ?*

*சோதிப்பிழம்பு மறைந்து விட்டது.*

***அகத்திய மாமுனி,*** *பரம்பொருளின் இருப்பிடம் பற்றி அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. சோதிப் பிழம்பை வணங்கி கமண் டலத்தைத் தூக்கிக்கொண்டு தமது ஆசிரமத்தை நோக்கி நடந்தார்.*

*ஆசிரமத் திண்ணையில் குறுமுனியின் வாரிசு* **நரேந்திரவர்மன்** *விளை யாடிக் கொண்டிருந்தான். அகத்தியர் வந்த அரவம் கேட்ட அவரது*

மனைவி ***யசோமதி*** உள்ளிருந்து வெளியே வந்தாள். அவளைப் பார்த்த மாத்திரமே அவள் தமிழ்ப் பரம்பரையைச் சார்ந்தவளல்லள் என்று கூறிவிடலாம். காலைக் கழுவிக்கொண்ட அகத்தியர் திண் ணையில் அமர்ந்தார்.

யசோமதி அருந்துவதற்கு செம் பில் ஜலம் கொடுத்தாள்.

“யசோமதி, நான் தெற்கு நோக்கி பயணிக்கும் தருணம் வந்து விட்டது.”

யசோமதி தன் பிராணநாதனை ஏறிட்டாள்.

“சற்று முன்னர் பரம்பொருள் என் முன்னால் காட்சியளித்து ஞாபகமூட்டினார். கம்போஜாவில் என் பணி முடிந்துவிட்டது. தெற்கே ‘ஜாவா’த் தீவை நோக்கி இனிச் செல்லவேண்டும்.”

தாய் தந்தையரின் உரையா டலைப் புரிந்து கொள்ள முடியாத, கம்போஜ மன்னர் பரம்பரையின் ஆணிவேரான இளங்குருத்து நரேந்திரவர்மன் அகத்தியரின் மடியில் ஏறிக்கொண்டான்.

யசோமதியின் கண்கள் குளமாயின.




**‘ஜாவா’த் தீவில் கண்டெடுக்கப்பட்ட அகத்தியர் சிலை**

❍ ❍ ❍

## கி.பி. 2011 – கம்போடியா இமிகிரேஷன்

கையடக்கத் தொலைபேசியில் கதைத்தவண்ணம் அவ்வதிகாரி உள்ளிருந்து வெளியே வந்தான். அவன் முகம் மகிழ்ச்சியால் நிறைந் திருந்தது. மறுமுனையில் ‘கிரிஷ்’ அல்லது எமக்கு ‘விசா’ எடுத்துத் தந்தவர் பேசுகிறார் என்று அனுமானித்துக் கொண்டேன். எனக் கென்னவோ அவ்வதிகாரியின் கண்களின் கருமணிகள் வட்டமாகக் காட்சியளிக்காமல் ‘டொலர்’ குறியீடு ($ $) போலக் காட்சியளித்தன!



மேசையில் வீசியெறிந்த எமது கடவுச் சீட்டுகளை கையிலெடுத்த படி அவ்வதிகாரி தொடர்ந்து பேசினான். உரையாடலை முடித்துக் கொண்ட அவன் என்னை அழைத்து "டொக்கியுமென்ட்ஸ்?" (Documents?) என்று வினாவினான்.

நான் ஆயத்தமாக வைத்திருந்த, கம்போடியா குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் எனக்கு அனுப்பியிருந்த மின்னஞ்சல், கம்போடியாவிலிருந்து வெளியேறி மலேசியாவிற்குச் செல்வதற்கான விமான 'டிக்கட்', இறுதியில் நாம் இலங்கை திரும்புவதற்கான விமான 'டிக்கட்' போன்றவற்றைக் காண்பித்தேன். அவை நாம் கம்போடியாவில் தங்கிவிடமாட்டோம் என்பதற்கான ஆதாரங்கள். நாம் மீண்டும் எமது தாயகம் திரும்புவதற்கான ஆதாரங்களைத்தான் அனைத்து நாட்டின் குடிவரவு குடியகல்வுத் திணைக்களங்களும் எதிர்பார்க்கும் என்பதை நான் அனுபவத்தில் தெரிந்திருந்தேன்.

அவ்வதிகாரி எமது விமான 'டிக்கட்'டில் ஆங்கிலத்திலிருந்த மலேசியாவின் தலைநகர் 'கோலாலம்பூரை'ப் (Kuala Lumpur) பார்த்து "கூ... அ... ல... லு... பூ.....ர்" என்று ஒலிகளை எழுப்பினான். அதைக் கேட்ட என் இருவயது மகன் வினோதமாக அவனைப் பார்த்தான். தன் பாஷையில் ஏதோ பேசுகின்றாரே... என எண்ணியிருப்பானோ என்னவோ.

அவ்வளவு நேரமும் அவ்வதிகாரி ஏன் எமது கடவுச்சீட்டுகளை வாசிக்க முயலவில்லை என்ற பரிதாப நிலை எனக்கு அப்போதுதான் புரிந்தது. அவனை அதிகாரியாகக் கொண்ட அவ்விடத்தைத் தாண்டி கம்போடியாவிற்குள் செல்லலாம் என்ற நம்பிக்கை எனக்குள் மெதுவாகத் துளிர்விடத் தொடங்கியது. அவனுக்குத் தெரியும் ஒரே ஊடக மொழி இலக்கங்கள்தான். அதில் நான் ஏற்கனவே கதைத்துவிட்டேன்!!

கைரேகைகள் பெறும் சம்பிரதாயங்களையெல்லாம் ஒருவழியாக முடித்துக்கொண்டு எமது கடவுச்சீட்டில் அனுமதி 'சீல்' முத்திரையைக் குத்தினார்கள். நாம் கம்போடியா நாட்டில் அதிகபட்சமாக ஏழு (7) நாட்கள் தங்கலாம்.

எனக்கு நிம்மதியாக இருந்தது. மனைவியின் முகத்தைப் பார்த்த போது, 'இனி என்னதான் செய்வது, காவடியைத் தூக்கியாயிற்று, ஆடித்தானே இறக்க வேண்டும்' என்ற மனோநிலை தெரிந்தது. எது/யார் காவடியென்பது அவளுக்கு மட்டுமே தெரிந்த உண்மை!

கம்போடிய 'இமிகிரேசனி'லிருந்து Poi Pet கிராமத்திற்கு, கம்போடிய அரசாங்கம் இலவச பஸ் வசதியை செய்துள்ளது. எம்மையும் சில வெள்ளைக்காரர்களையும் உள்வாங்கிய அந்த பஸ் ஒரு கிலோமீட்டர்

தொலைவிலுள்ள கிராமத்தை நோக்கி ஊர்ந்தது. எனக்கருகில் எமக்கு உதவியாக தாய்லாந்து நாட்டுக் கரையிலிருந்து வருபவன் அமர்ந்து கொண்டான். அவன் முகத்திலும் நிம்மதி தெரிந்தது.

*Poi Pet* ஒரு சிறிய கிராமம். எமக்கு உதவிக்கு வந்தவன் ஒரு வாடகைக் கார் ஓட்டுநருடன் பேரம் பேசி எமது பொருட்களை ஏற்றிக்கொண்டிருந்தான். இன்னமும் மூன்று (3) மணித்தியாலப் பிரயாணம் இருப்பதை உணர்ந்த நான் ஏதாவது உணவு பெற முடியுமா என்று கடைகளை நோக்கிச் சென்றேன்.

பல்வேறு நாடுகளிருந்து வெளிநாட்டவர்கள் வருவதால் பலவித உணவு வகைகள் அங்கு காணப்பட்டன. ஆனால் மரக்கறி உணவுகள் தெரியும்படியாக இருக்கவில்லை. "வெஜிடேரியன்?" என்று நான் கேட்பதும் அவர்களுக்குப் புரிவதாகத் தெரியவில்லை. குளிர்சாதனப் பெட்டியிலிருந்த மாம்பழ மென்பானமொன்றை எடுத்து 'எவ்வளவு?' என்று அங்கிருந்த பெண்ணிடம் கேட்டேன்.

*"3000"* என்றாள். நான் வெலவெலத்துப் போனேன்.

*"3000 ரியால்"* என்று அவள் மீண்டும் கூறியதும் என் சுயநினைவு திரும்பியது. நான் இலங்கையில் கம்போடியா நாட்டு பணத்தைப்பற்றி வாசித்தது நினைவில் வந்தது. இலங்கை 100 ரூபாய் அண்ணளவாக 3500 கம்போடியா 'ரியாலி'ற்குச் சமம். நான் இதுவரை பார்த்த நாடுகளில் இலங்கைப்பணத்தின்பெறுமதி கூடிய நாடு கம்போடியாதான். என்மனதில் ஒருவித மமதை உட்கார்ந்துகொண்டது. இரு மென்பானங்களையும் சில 'பிஸ்கட் பைக்கெற்று'களையும் வாங்கிக் கொண்டேன்.

என்னிடமிருந்த 20 தாய்லாந்து 'பாட்' பணத்தை இதுவரைநேரமும் எமக்கு உதவியவனுக்குக் கொடுத்துவிட்டு மகிழ்ச்சியுடன் விடை பெற்றேன். எம்மை உள்வாங்கிய அந்தக் கார், எமது இறுதிக்கட்டப்

**கம்போடியாப் பணம் – 50000 'ரியால்'**



**கிரீன்விச் கோட்டின்மேல் பிடிக்கப்படும் 'இடம் காட்டும் கருவி' பூச்சியப் பெறுமானத்தைக் காட்டுவதில்லை (நெட்டாங்குப் பெறுமானம்)**




பயணமான, உலகப் பெருங்கோயில் 'அங்கோர் வாட்' உள்ள 'சியாம் ரீப்' (Siem Reap) ஐ நோக்கிப் புறப்பட்டது.

கம்போடியா நேரம் மதியம் 2:20.

தாய்லாந்திற்கும் கம்போடியாவிற்கும் ஒரே நேரம். இலங்கை நேரத்துடன் 1 ½ மணித்தியாலத்தைக் கூட்டவேண்டும்.

பாடசாலை நாட்களின் ஆரம்ப வகுப்பு புவியியல் பாடத்தில், கிழக்கு நாடுகளுக்கு இலங்கை நேரத்துடன் கூட்டவேண்டும் என்றும் மேற்கு நாடுகளுக்கு இலங்கை நேரத்துடன் கழிக்கவேண்டும் என்றும் கற்ற பொதுவிதி உங்களுக்கு ஞாபகம் வரலாம். சாதாரண உலக வரைபடத்தைப் பார்த்தீர்களேயானால், கம்போடியாவானது இலங்கைக்கு கிழக்கில் உள்ளது. இதில் வேடிக்கை என்னவென்றால் உலக வரைபடத்திலே மலேசியாவானது இலங்கைக்கு கிழக்கிலும் கம்போடியாவிற்கு மேற்கிலும் உள்ளது. ஆனால் மலேசியாவிற்கு இலங்கை நேரத்துடன் 2 ½ மணித்தியாலத்தைக் கூட்டவேண்டும். இந்தச் சிக்கலை கேத்திர கணிதத்தினால் (Geometric) விளங்கிக் கொள்ளலாம். முப்பரிமாண கோளவடிவ புவியை இருபரிமாண படத்தில் காட்ட விளைவதால் (Stereographic Projection) கம்போடியாவானது மலேசியாவைவிட அதிக தூரம் கிழக்கில் இருப்பதுபோன்ற தோற்றமளிக்கின்றது.

எமது விஞ்ஞானிகளின் இத்தகைய சாமர்த்திய செயல்களை மெச்சாமல் இருக்கமுடியாது. இருப்பினும் இயற்கையானது விஞ்ஞானிகளுக்கு விடும் சவால்களைக் கண்டு திகைக்காமலும் இருக்க முடியாது. விஞ்ஞானிகள் நேரக் கணிப்பீட்டிற்கு இலகு




**முப்பரிமாண புவியை இருபரிமாணத்தில் காட்டல் –**
Stereographic Projection

வாக நெட்டாங்கு பூச்சியமான 'கிரீன் விச்' (Greenwich) கோட்டை 1851 இல் நியமித்தார்கள். ஆனால் உண்மை 'கிரீன் விச்' நெட் டாங்கு பூச்சியம், இயற்கை மாற் றங்களால் ஆண்டிற்கு 2.5 சென்றிமீற்றர் கிழக்கு நோக்கி நகர்ந்து தற்போது அடையாள 'கிரீன்விச்' கோட்டி லிருந்து 100 மீற்றர் தொலைவிலுள்ளது. அகலாங்கு-நெட்டாங்கு காட்டும் கருவியை 'கிரீன்விச்' கோட்டின்மேல் வைத்துப் பார்த்தால், நெட்டாங்கு அளவானது பூச்சியத்தைக் காட்டாது. இன்னும் கூறப் போனால், நாங்கள் தற்போது கடிகாரத்தில் பார்க்கும் நேரமானது சரியானதன்று. புறக்கணிக்கத்தக்க இச்சிறிய நேர மாற்றம் எம் நாளாந்த




**மலேசிய நேரமும் கம்போடிய நேரமும்**

நடவடிக்கைகளைப் பாதிக்காததால் இன்னமும் பிரச்சினையில்லை. [2-01]

'இமிகிரேஷனி'ல் ஏற்பட்ட மன உளைச்சல் புதிய கார் ஓட்டுநருடன் அளவளாவ என்னை இடமளிக்கவில்லை. நான் ஏதும் ஆங்கிலத்தில் கேட்டுவிடுவேனோ என்ற சங்கடத்துடன் 'ஸ்டியரிங்' ஐப் பிடித்து அவர் காரை ஓட்டுவதுபோல் இருந்தது. நான் ஜன்னலுக்கு வெளியே கவனத்தைச் செலுத்தினேன். வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதைப்போன்ற சூழல் காணப்பட்டது.

கம்போடியா இலங்கையைப் போன்று அண்ணளவாக மூன்று மடங்கு (69,898 சதுர மைல்) நிலப்பரப்பைக் கொண்ட நாடு. ஆனால் இலங்கையின் சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கான 14 மில்லியன் மக்கள்தான் அங்கு வாழ்கின்றார்கள். 95 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் **தேரவாத பௌத்த** சமயத்தைப் பின்பற்றுகின்றார்கள். நாடு முழுவதும் ஏறத்தாழ 4,392 தேரவாத பௌத்த கோயில்கள் காணப்படுகின்றன. சாதாரணமாக 2 மில்லியனுக்கும் அதிகமான வெளிநாட்டு மக்கள் சுற்றுலாவிற்காக ஆண்டு தோறும் வருகின்றார்கள். பிரான்ஸ் நாட்டின் தென்கிழக்காசிய இந்தோ-சைனா குடியேற்றத்திலிருந்து 1953 ஆம் ஆண்டு கம்போடியா சுதந்திரமடைந்தது. ஆனாலும் பிரான்ஸ் நாட்டின் தாக்கங்களை இன்றும் அதிக அளவில் அங்கு காணக்கூடியதாக இருக்கின்றது. [2-02]

இலங்கையில் வாகனம் ஓட்டிப் பழகியவர்களால் கம்போடியாவில் வாகனத்தை ஓட்டமுடியாது. பிரான்ஸ் நாட்டைப்போல் பாதையின் வலப்பக்கத்திலேதான் வாகனத்தை ஓட்டவேண்டும். கம்போடியாவில் 2001ஆம் ஆண்டிற்கு பின்னர் உத்தியோகபூர்வமாக இடப்பக்கம் சாரதி இருக்கை கொண்ட வாகனங்களை மட்டும்தான் அனுமதிப்பார்கள். இலங்கையில் எமது வாகனங்களில் நாம் இடது கையினால் 'கியர்' போடுவோம். ஆனால் கம்போடியாவில் ஓட்டும் வாகனங்களில் வலப்பக்கம்தான் 'கியர்' காணப்படும்.

"அப்பா..., இவர்களைப் பார்த்தால் இந்துக்கள் போன்றோ, தமிழர்களைப் போன்றோ தெரியவில்லையே." மனைவி மௌனத்தைக் கலைத்தாள்.

"இவர்கள் பௌத்த மதத்தினர், பார்த்தால் பௌத்தர்களாகத் தெரிகிறார்களா?"

"இவர்கள் சிங்களம் கதைப்பார்களா?"

"பொதுவாகச் சிங்களவர்கள் எல்லோரும் பௌத்தர்கள்

*என்றாலும், பௌத்தர்கள் எல்லோரும் சிங்களவர்கள் அல்லர். முன்னைய காலத்தில் எத்தனையோ தமிழ் மன்னர்கள் பௌத்தர்களாக இருந்திருக்கிறார்கள்; பௌத்தத்தை வளர்த்திருக்கிறார்கள்"*

*இலங்கையின் பௌத்தச் சின்னங்கள் அனைத்தும், சிங்களப் போர்வை மட்டும் கொண்டு போர்த்திய கடந்த **60** வருட அரசியல் சதுரங்க ஆட்டத்தில் உண்மையும் போர்த்தப்பட்டுவிட்டது. தற் பொழுது இலங்கையில் வாழும் தலைமுறையினருக்கு 'பௌத்தர் என்றால் சிங்களவரே!'.*

*"அங்கோர் உலகப்பெருங்கோயிலைக் கட்டிய மன்னன் யார்?" மனைவி கதையோட்டத்தை மாற்ற முயன்றாள்.*

*"இரண்டாம் சூரியவர்மன்"*

*"தமிழ்ப் பெயராக இருக்கிறதே...!"*

*"சமஸ்கிருதப் பெயர். 'வர்மன்' என்ற பெயரடியை கம்போடியாவில் தொடக்கி வைத்தவர் அகத்தியர் என்கிறார்கள்"*

*"என்னப்பா.. எங்கட அகத்தியரே?!"*

*"யார் எங்கட அகத்தியர்?"*

*"அவர்தான், சிவபெருமானின் 'வெடிங்கில' சமநிலை குழம்ப, தெற்கு நோக்கிப் போனவர்." தானும் இருந்து ஆசீர்வதித்து அர்ச்சதை போட்ட தொனி மனைவியின் குரலில் தெரிந்தது!*

*புராணங்களின்படி கயிலையில் நடந்த சிவபெருமானின் திருக்கல் யாணத்தின்போது அனைவரும் ஓரிடத்தில் ஒன்றுகூடியதால் வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. சமநிலையைப் பேண மாமுனி அகத்தியரைத் தென் திசைக்குச் செல்லுமாறு சிவபெருமான் கட்டளையிட்டார். தென் திசைக்கு வந்த அகத்தியர் பொதிகை மலையில் தங்கி முருகக் கடவுளின் ஆணைப்படி **'அகத்தியம்'** என்னும் நூலை இயற்றினாராம். அகத்தியமே தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்திற்கும் முதன்நூல் என்கின்றார்கள்.*

**"ஆனாப்பெருமை அகத்திய னென்னும்**
**அருந்தவ முனிவனாக்கிய முதனூல்**
**பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோர்**
**நல்லிசை நிறுத்த தொல்காப்பியன்"**

*- பன்னிருபடலப் பாயிரச் சூத்திரம்*


*"ஔவையார் அகத்தியர் எல்லோரும் தனி மனிதர்கள் அல்லர். ஔவையார் என்ற பெயரில் பலர் இருந்திருக்கின்றார்கள். அதேபோல அகத்தியர் என்ற பெயரில் பலர் இருந்திருக்கின்றார்கள் [2-03]. பக்தி இலக்கியங்களிலிருந்து முழுமையான வரலாற்றினைப் பெற முடியாது."*

மனைவிக்கு என் விளக்கங்கள் பிடிபடவில்லை. ஆனாலும், அவள் நினைத்திருந்த அகத்தியர் வேறு, கம்போஜாவிலிருந்த அகத்தியர் வேறு என்பது மட்டும் அவளுக்குப் புரிந்துகொண்டது.

5:00 மணி.

'சியாம் ரீப்' இல் 'அங்கோர் ஸ்டார்' எனும் நாம் தங்கவுள்ள விடுதியின் முன்னால் கார் நின்றது. 'கிரிஷ்' எம்மை வரவேற்றார். நான் அவருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்தேன். தாய்லாந்திலிருந்து 'சியாம் ரீப்' இற்கான பயணத் தொகை 120 அமெரிக்க 'டொலர்'களை அவரிடம் கொடுத்தேன். அவர் அடுத்த நாள் காலை 8:30க்கு எம்மை வந்து சந்திப்பதாகக் கூறினார். நான் அவரிடமே 'அங்கோர்' சுற்றுலா முழுவதையும் ஒழுங்கு செய்திருந்தேன்.

எமக்கு அறை எண் 318 கொடுக்கப்பட்டது. மிகுந்த களைப்புடன் அறைக்குள் நுழைந்தோம்.



❍ ❍ ❍

## கி.பி. 811 – கம்போடியா

இரண்டாம் சூரியவர்மன் உலகப் பெருங்கோயில் அங்கோரைக் கட்டுவதற்கு 400 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த, சூரியவர்மனின் மூதாதையரில் ஒருவரான **இரண்டாம் ஜெயவர்மனே** முதலாவது கெமர் சாம்ராஜ்ய மன்னனாவான். இரண்டாம் ஜெயவர்மனே கெமர் சாம்ராஜ்யத்தை உலகிற்கு முதன் முதலில் கி.பி. 802ல் பிரகடனப் படுத்தியவன் [2-04].

கர்ப்பிணியாக இருக்கும் தன் மனைவியை இரண்டாம் ஜெய வர்மன் Prah Bat எனும் இடத்திலுள்ள சாசனமொன்றைக் காட்டுவதற்கு அழைத்து வந்துள்ளான். தமக்கு பிறக்கப்போகும் குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம் என்பதை விளக்க ஜெயவர்மன் தன் மனைவியை அங்கு கூட்டிவந்துள்ளான்.

சாசனத்தை மனைவிக்கு காட்டியபோது கர்ப்பிணியாக இருக்கும் அரசி சிரமத்துடன் குனிந்து சாசனத்தை வாசித்தாள். அவள் நெற்றியில் வியர்வை முத்திட்டது.

சாசனத்தை வாசிக்கையில் "அகத்தியர்.... வேத...... யசோமதி...." என மகாராணியின் உதடுகள் முணுமுணுத்தன...

"யார் இந்த அகத்தியர்?"

1. Majumdar, R.C., *IK*, No. 60, p. 76, verse 5
"Atha dvijo Agastya itti pratīto,
Yo veda vedāṁga vidāryyadeśe.
Labdhodayo ya mahiṣīddhavaṁśā,
Yaśomatīti prathitā Yaśobhiḥ."

**கி.பி. 811 இல் பொறிக்கப்பட்ட சாசனம்** - Prah Bat Stele

*"இந்த சாசனத்தில் குறித்துள்ளது போன்று வேதங்களில் சிறந்த பிராமணர்" [2-05]*

*"அவரைப் பற்றி வேறு என்ன தெரியும் மன்னா?"*

*"அவர் கம்போஜாவில் இருந்தபோது ஸ்ரீ பட்டீஸ்வரம் எனும் சிவலிங்கத்தை பக்தியுடன் பூஜித்து வந்துள்ளார். அகத்திய முனிவர் யசோமதி எனும் இளவரசியை மணந்துள்ளார். அவர்களின் மகன் பெயர் நரேந்திரவர்மன்" [2-03]*

*"இதனாலா.. எமக்கு பிறக்கும் ஆண் குழந்தைகளுக்கு 'வர்மன்' என்ற பெயரடியை வைக்க வேண்டும் என்கிறீர்கள்?"*

*"அகத்திய முனிவருக்கும் இளவரசி யசோமதியிற்கும் பிறந்த நரேந்திரவர்மனின் வம்சத்தில் நான் வந்திருக்கின்றேன். நானே கெமர் சாம்ராஜ்யத்தின் முதல் மன்னன். எனக்கென்று சில தார்மீகப் பொறுப்புக்கள் இருக்கின்றன மகாராணி. எனக்குப் பின்னால் வரும் தலைமுறையினருக்கு நான் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். ஆதலால் 'வர்மன்' என்ற பெயரடி எனது வம்சத்தில் தொடர வேண்டும்."*

*அரசி ஜெயவர்மனின் மார்பில் சாய்ந்து கொண்டாள்.*

❍ ❍ ❍

---

[2-01] http://en.wikipedia.org/wiki/Prime_Meridian
[2-02] http://en.wikipedia.org/wiki/Cambodia
[2-03] "அகத்தியர்" (1948) – ந.சி.கந்தையாப்பிள்ளை
[2-04] "Ancient Angkor" (2011) – Michael Freeman & Claude Jacquse
[2-05] "Studies in Sanskrit inscriptions of ancient Cambodia" (1974)– M.K.Sharan

# 3 'அங்கோரி'ல் அடங்கிய காலப் பிரமாணம்

## கி.பி. 2011 ஒக்டோபர் 9ஆம் திகதி – கம்போடியா

*'அங்கோர் வாட்' கோயிலின் முன்னால், தமிழ் அணங்கு அங்கும் இங்குமாகப் பதற்றத்துடன் அல்லற்பட்டுக் கொண்டிருந்தாள்.*

*அவளைக் கூர்ந்தேன்; திகைத்தேன்!*

*அவள் தமிழ்த்தாய்! அங்கோரின் பிரமாண்டத்தைக் கூற, தமிழில் வார்த்தைகள் இல்லையே என அவள் பதறியிருக்கவேண்டும்!*

*மொழியின் வார்த்தைகளால் அனைத்தையும் அடக்க முயல்வது எவ்வளவு சிறுபிள்ளைத்தனம் என்பதை, அன்று நான் மீள உணர்ந்தேன்.*

*'அங்கோர் வாட்' இன் பிரமாண்டத்தை வார்த்தைகளால் கூற முயல்வது, வெறும் சொற்சிலம்பமாகிவிடும்.*

*இருந்தும் முயற்சிக்கின்றேன்....*

*கோயிலின் மதில் அண்ணளவாக ஒரு கிலோமீற்றர் நீளமும் ஒரு கிலோமீற்றர் அகலமும் கொண்டது. கோயிலின் மதிலைச் சூழ்ந்து பெரிய அகழி காணப்படுகிறது. அகழியையும் சேர்த்துக் கணக்கிட்டால், கிழக்கு மேற்காக 1500 மீற்றர் நீளமும் வடக்குத் தெற்காக 1300 மீற்றர் அகலமும் கொண்டுள்ளது. வெளி வீதியால் கோயிலை சுற்றிவர அண்ணளவாக 6 கிலோமீற்றர் தூரம் நடக்க வேண்டும்.*

*"Time Life Lost Civilizations Series: Southeast Asia: A Past Regained" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளதற்கு அமைய, தற்காலக் கட்டடக்கலை நிபுணரொருவர் 'அங்கோர் வாட்' கோயிலை, 20ஆம் நூற்றாண்டில் கட்டுவதனால் 300 ஆண்டுகள் தேவைப்படும் என்று கணக்கிட்டுக் கூறியுள்ளார். [3-01]*



'அங்கோர்' உலகப் பெருங்கோயில் முகப்புத் தோற்றம்

இரண்டாம் சூரியவர்மனோ அதனை 40 வருடங்களுக்குள் கட்டி முடித்துவிட்டான்.

"ஆர் யு புறொம் இன்டியா?" அக்கேள்வி என் கோயிலினுடனான உணர்ச்சி ஆட்கொள்ளலைக் கலைத்தது.

கோயிலின் வாயிலைப் பார்த்தபடி இளநீர் அருந்திக்கொண்டிருந்த நானும் மனைவியும் திரும்பிப் பார்த்தோம். எமக்கு பின்னாலுள்ள மேசையொன்றில் வயதான தம்பதியினர் காணப்பட்டனர். அவர்கள் தாங்கள் கொண்டுவந்த உணவுப் பொதியை மேசையில் வைத்துப் பிரித்துக்கொண்டிருந்தனர். அருகே நின்ற 'வெய்ட்டர்', அவர்கள் கொண்டு வந்த உணவைத் தன் கடையில் வைத்துப் பிரிப்பதைப் பார்த்து திகைத்துப்போய் நின்றுகொண்டிருந்தான்.

"இல்லை, நாங்கள் இலங்கையர்" என்று ஆங்கிலத்தில் பதிலளித்தேன்; கை குலுக்கி அறிமுகம் செய்துகொண்டேன். என்னுடைய பெயரைக் கேட்டு, தமிழன் என்று தெரிந்ததும், சென்னையிலிருந்து வந்திருந்த அந்தத் தமிழ்த் தம்பதியினருக்கு பெரிய குதூகலம்.

அன்று அந்த அம்மாளின் 60 ஆவது பிறந்தநாள் என்றும் அதன் பரிசாக அவர்கள் இந்தியாவிலிருந்து அங்கு வந்துள்ளார்கள் என்றும் தமது மகிழ்ச்சியைப் பகிர்ந்தனர்.

60ஆம் பிறந்தநாளை முக்கியத்துவப்படுத்தி மணிவிழாவென்றும், ஷஷ்டியப்ப பூர்த்தியென்றும் இலங்கை இந்தியத் தமிழர்கள் விமர்சையாகக் கொண்டாடுவார்கள்.

மனிதனுக்கும் நேரத்திற்குமான தொடர்பைப் புரிந்துகொண்டாலே இம்முக்கியத்துவத்தை உணரலாம்.

'Stephen Hawking' எனும் விஞ்ஞானி 1988ல் எழுதிய 'A Brief History of Time' எனும் நூல், என்னை அதிகம் சிந்திக்க வைத்த நூல்களில் ஒன்று. அதிக பிரதிகள் விற்பனையாகிய நூல்களின் பட்டியலில் இன்றும் இதன் பெயர் இடம்பெற்றுள்ளது. 10 மில்லியன் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகிய அரிய விஞ்ஞான நூல். 1942ல் பிறந்த 'Stephen Hawking' விஞ்ஞானிகளில் தலைசிறந்தவராகக் கணிக்கப்படுகின்றார். 21 வயதில் ஏற்பட்ட நரம்பு நோய் காரணமாக கை, கால், குரல் என ஒவ்வொன்றாகச் செயலிழந்து வாழ்நாளின் பெரும்பகுதியை சக்கர நாற்காலியில் கழித்தவர்.[03-02]

இந்நூலிலே இவர் கூறிய கருத்தின்படி 'நேரம் என்பது என்றுமே தொடங்கவில்லை. எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது. நாம்தான் இலகு கருதி நேரத்தை வரையறுக்கின்றோம்.' என்கிறார்.

நேர வரையறையிலே இந்திய வானியல் சாத்திரம் 60 எனும் எண்ணினை முக்கியமாகக் கருதுகின்றது.

60 தற்பரை ஒரு விநாடி

60 விநாடி ஒரு நாடி (நாழிகை)

60 நாடி ஒரு நாள்

60 வருடங்கள் ஒரு சுழற்சி.

1951 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி பிறந்து, அன்று தனது 60 ஆம் பிறந்தநாளைக் கொண்டாடும் அந்த அம்மாளின் முகம் நிறைந்திருந்தது.

அவரிடம் "அம்மா, உங்களுக்குத் தெரியுமா 1752ம் ஆண்டு, செப்டெம்பர் மாதக் கலண்டரில் 11 நாட்கள் விழுங்கப்பட்டுவிட்டன. 1752ஆம் வருடக் கலண்டரை எடுத்துப் பார்த்தீர்களேயானால், அதனடிப்படையில் உங்கள் உண்மையான பிறந்தநாள் ஒக்டோபர் 9ஆம்திகதி அல்ல" என்று கூற எண்ணினேன். ஆனாலும், அன்று அதைக்கூறி அவர் மனதைச் சீண்ட எனக்கு விருப்பமில்லை.



Stephen Hawking

ஐரோப்பாவில் Julian கலண்டர் முறை பாவனையில் இருந்துவந்தது. இக்கலண்டரின்படி 365.25 நாட்கள் ஒருவருடமாகக் கருதப்பட்டது. ஆனால் உண்மையில் அச்சொட்டாக 365.25 நாட்கள் அல்ல. புவியின் சூரிய சுழற்சி அடிப்படையில் கணக்கிட்டால் வருடத்தில் 365.25 நாட்களிலிருந்து 11 நிமிடங்களைக் குறைக்கவேண்டும். [3-03]


புவியின் இந்த சுழற்சியை அடிப்படையாகக் கொண்ட Gregorian கலண்டரை1752 ஆம் ஆண்டு ஐரோப்பா நடைமுறைப்படுத்தும்போது அதுவரை காலமும் அதிகமாகச் சென்றிருந்த 11 நாட்களைக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால், 1752ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதியை அடுத்து 14ஆம் திகதி என நிர்ணயிக்கப்பட்டது. (படத்தில் உள்ள கலண்டரைப் பார்க்க)

“இவ்வளவு பெரிய கோயிலை எப்படித்தான் கட்டினார்களோ?.....” பிரமிப்பை ஜீரணிக்கமுடியாத அப்பெரியவர் கூறினார்.

“கட்டுவது ஒருபுறம் ஐயா..... 40 வருடங்களில் கட்டியுள்ளார்கள் என்றால், எவ்வளவு முன்னோடித் திட்டங்களை வகுத்திருக்கவேண்டும் (planning) என்று எண்ணிப் பாருங்கள்...!” அவரின் ஆச்சரியத்தை மேலும் வளர்த்துவிட்டேன்.

அந்தத் தம்பதியினர் என் மகனுடன் விளையாடினார்கள். நாங்கள் நால்வரும் மிகவும் அன்னியோன்யமாகிவிட்டோம்.

அங்கு இளநீரின் விலை ஒரு அமெரிக்க ‘டொலர்’. நான் 10 ‘டொலரை’ நீட்டி நாம் அருந்திய இரண்டு இளநீர்களுக்கான




**1752 ஆம் ஆண்டு கலண்டர்**

பணத்தை ‘வெய்ட்டரி’டம் கொடுத்தேன். மனைவி மீதியைப் பெற்று எண்ணிவிட்டு “மீதி 12005” என்று என்னிடம் நீட்டினாள்.

நான் குழப்பத்துடன் மீதியைப் பார்த்தேன் 5 அமெரிக்க ‘டொலர்’களும் 3 அமெரிக்க ‘டொலர்’களுக்குப் பெறுமதியான 12000 கம்போடியா ‘ரியாலு’ம் காணப்பட்டன. மனைவியை நிமிர்ந்து பார்த்தேன். அவள் அம்மையாருடன் அளவளாவிக் கொண்டிருந்தாள். மனைவியைப் பொறுத்தவரையில் 12 ஆயிரம் ‘ரியாலு’ம் 5 ‘டொலரு’ மாக மீதி 12005!

கம்போடியாவில், ‘ரியாலை’யும் ‘டொலரை’யும் கலந்து பாவிப்பார்கள். இதேபோன்று ‘யூரோ’வையும் ‘பிரெஞ்ச் பிராங்’ நாணயத்தையும் கலந்து பாவிப்பதை நான் சுவிட்ஸர்லாந்து நாட்டிலுள்ள பசல் (Basel) என்னும் இடத்திற்குச் சென்ற சந்தர்ப்பத்தில் அவதானித்தேன்.

❍ ❍ ❍

## கி.பி. 1110 – கம்போடியா

“வாருங்கள் ஸ்தபதியாரே, உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.”


மன்னன் **இரண்டாம் சூரியவர்மன்** எழுந்து நின்று வேதியரும், ஜோதிடரும், கட்டடக்கலை ஸ்தபதியுமான (சிற்பி) **பண்டிதர் திவாகரரை** வரவேற்றான். [03-04]

மன்னர் எழுந்ததைத் தொடர்ந்து சபையிலுள்ள அனைவரும் எழுந்து நின்றனர். அந்த வரவேற்பு திவாகரின் அறிவையும் மதிப்பை யும் பறை சாற்றியது. அரச சபையின் நடுவே வந்த பண்டிதர் திவாகர், மன்னனை வணங்கினார். மன்னர் அமர்ந்ததும் தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

மன்னன் சபையைக் கலைத்தான். சில மந்திரி பிரதானிகளைத் தவிர அனைவரும் சபையை விட்டு வெளியேறினர்.

திவாகர், தான் கொண்டுவந்த ‘அங்கோர் வாட்’ இன் உத்தேச வரை படத்தை மன்னனிடம் கொடுத்தார். சூரியவர்மன் வரைபடத்தை வெகுநேரம் ஆராய்ந்துவிட்டு “ஸ்தபதியாரே, விளக்கிக் கூறுங்கள்” என்றான்.

“மன்னா மேற்குத் திசையிலே பிரதான வாயில் அமையும். அகழியின் அகலம் 432 முழம். மேற்கு வாசல் முதலாம் வெளிப்படியிலிருந்து கோயிலின் உள்மதில் தொடக்கப் படிமட்டும் 864 முழமும், மத்திய கோபுர தொடக்கப் படி வரைக்கும் 1296 முழமும் மத்திய கோபுர அச்சு மையம் வரையில் 1728 முழமும் அமையப்பெறும்”




**அங்கோர் – மேற்புறத்திலிருந்தான வெட்டுமுகம்**
*1* Cubit = **1 முழம்** = **அண்ணளவாக** *45*cm

*“இந்த எண்கள் எதைக் குறித்து நிற்கின்றன ஸ்தபதியாரே?”*

*“கால வாய்ப்பாட்டின்படி நான்கு யுகங்கள் உள்ளன. நாம் தற் பொழுது வாழும் கலியுகம் நான்காவது யுகமாகும். இது 432 ஆயிரம் (432 000) வருடங்களைக் கொண்டது. முதலாம் யுகம் 1728 ஆயிரம் (1728 000) வருடங்களுடன் கிருத யுகமென்றும், இரண்டாம் யுகம் 1296 ஆயிரம் (1296 000) வருடங்களுடன் திரேதா யுகமென்றும், மூன்றாம் யுகம் 864 ஆயிரம் (864 000)வருடங்களுடன் துவாபர யுகமென்றும் வகுக்கப்பட்டுள்ளன. இந்த யுகங்களின் வருட எண்ணிக்கைகள்தான் கோயிலின் நிர்ணய அளவுகளாகக் குறிக்கப்பட்டுள்ளன”. [03-04]*

*“பேஷ், அற்புதம். இங்கு மத்திய கோபுரத்தில் குறித்துள்ள எண்கள் எதைக் குறிக்கின்றன?” மன்னன் மத்திய கோபுரத்தை ஆள்காட்டி விர லால் தொட்டபடி கேட்டான்.*

*“மத்தியகோபுரத்தின் கிழக்கு-மேற்கு அச்சு 189 முழமும் வடக்கு-கிழக்கு அச்சு 176 முழமும் குறிக்கப்பட்டுள்ளன.”*

*அமர்ந்திருந்த அமைச்சரொருவர் மற்றைய அமைச்சரின் காதில் கிசுகிசுத்தார். “கிழவனுக்கு நன்றாக அறளை பெயர்ந்து விட்டது. கோபுரத்தை சமச்சீராக அமைக்காமல்.... பொறிந்து விழுந்துவிடப் போகிறது.....”*


மன்னன் அமைச்சர்களைப் பார்த்தான். அவர்கள் கிசுகிசுத்தது மன்னனின் காதில் விழுந்திருக்கவில்லை. "பார்த்தீர்களா அமைச்சர் களே, எங்கள் ஸ்தபதியின் மதிநுட்பத்தை. **189**ம் **176**ம் கூட்டினால் **365.** பூமி சூரியனைச் சுற்ற எடுக்கும் காலமான **365** நாட்களை எத்தகை சூட்சுமமாக கோயிலில் குறியிடுகிறார்!" [3-05]

இரு மந்திரிகளும் தம் கபாலங்களை அவசரமாக மேலும் கீழுமாக ஆமோதிப்பதற்காக அசைத்தனர்.

"ஸ்தபதியாரே ஏன் **189**ம் **176**ம் ஆக **365** ஐப் பிரித்தீர்கள். அதிலும் ஏதும் மர்மம் உண்டோ?" திவாகரின் ஆழம் தெரிந்த மன்னன் கேட்டான்.

"மன்னா, பூமியானது சூரியனை வட்டப் பாதையில் சுற்றாமல் நீள்வட்டப் பாதையில் சுற்றுகிறது. அதனால் ஒரு தருணம் சூரியனுக்கு அருகிலும் பிறிதொரு தருணம் சூரியனுக்கு தொலைவிலும் செல்கிறது. சூரியனுக்கு அருகில் வரும்காலத்தில் சூரியனின் ஈர்ப்புத்தன்மை அதிகம் பாதிப்பதனால் பூமி விரைவாக நகர்கின்றது. அதேபோன்று தொலைவில் இருக்கும்போது மெதுவாக நகர்கின்றது. இதனால் நீள்வட்டத்தின் ஒருபாதியை **176** நாட்களிலும் மறுபாதியை **189** நாட்களிலும் கடக்கின்றது. அதைத்தான் இந்த மத்திய கோபுரத்தின் அச்சிலே பிரதிபலித்தேன்."

மன்னனின் கண்கள் கலங்கின. "ஐயா பெரியவரே, இந்த உலகப் பெருங்கோயில் கட்டிமுடியுமட்டும் தாங்கள் உயிர் வாழவேண்டும் என்பது என் பேராசை"




**பூமியின் சுழற்சி – நீள்வட்டப் பாதை**

“மன்னா. எனக்கு இப்போது வயது 60. என் ஜாதகத்தின்படி 85ஆவது (கி.பி. 1135) வயதில் நான் இறப்பேன். தாங்கள் கோயிலைக் கட்டத்தொடங்கும் போது (கி.பி. 1113) நான் உயிருடன் இருப்பேன். ஆனால் முடிப்பதற்கு (கி.பி. 1150) பல ஆண்டுகளுக்கு முன்னரே நான் இறந்துவிடுவேன். ஆனாலும் கவலை வேண்டாம். கோயில் உங்கள் விருப்பப்படியே அமையும்.” என்றார் ஸ்தபதியும் ஜோதிட விற்பன்னருமான பண்டிதர் திவாகர். [03-04]

❍ ❍ ❍

## கி.பி. 2011 – கம்போடியா

வயதான தம்பதிகளிடம் விடைபெற்றுக்கொண்டு ‘அங்கோர் வாட்’ கோயிலினுள் நுழைய மேற்கு வாயிலை நோக்கி நகர்ந்தோம்.

என் முன்னால் ‘ஓங்கி’ வியாபித்திருக்கும் உலகப் பெருங்கோயிலான ‘அங்கோர் வாட்’டை ஒரே பார்வையில் அடக்க முயன்று திணறித் தோற்றேன்.

“ஓங்கி” வியாபித்திருக்கும் என்று நான் கூறக் காரணமிருக்கிறது. பாரதி தன் ‘சின்னஞ் சிறு கிளியே’ கவிதையில் **‘உச்சி தனை முகர்ந்தால் – கர்வம் ஓங்கி வளருதடீ’** என்று பாடியுள்ளான். எனக்கென்னவோ இதில் ‘ஓங்கி’ எனும் சொல் வலிந்த செருகலாகவே இருந்து வந்தது. அதென்ன பாரதி ‘ஓங்கி’ என்கிறான், எனப் பல தடவைகள் வேகாத கருத்துக்களுடன் பிதற்றியிருக்கிறேன். நான் என் மகனின் உச்சியை முகர்ந்ததும், என் கர்வம் ‘ஓங்கி’ வளர்ந்தபோதுதான் பாரதியின் ‘ஓங்கி’ எனும் சொல்லை உணர்ந்தேன். இந்தக் கவிதை வரியில் ‘ஓங்கி’ என்ற சொல்லை புரிய முடியாது. உணர மட்டுமே முடியும்.

அவன் மகாகவி.

அவனே மகாகவி!!

பிரமாண்டம், தெய்வீகம், கலைநுட்பம், நுணுக்கம், வானியல், சாத்திரம், கணிதம், ஒழுங்கு, உழைப்பு, தியாகம், இன்னும் என்னென்னவோ எல்லாம் கொண்டு எம்மவர்கள் படைத்த உலகப் பெருங்கோயிலின் பிரமாண்டம் ‘ஓங்கி’த்தான் என்முன்னே வியாபித்திருந்தது.

கோயிலின் மேற்கு வாயிற்படியை நெருங்க நெருங்க எனக்குள் ஒருவித பயபக்தி தொற்றிக் கொண்டது. இந்தியாவிலுள்ள இராஜ ராஜன் கட்டிய தஞ்சைப் பெருங்கோயிலிற்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் நான் சென்றிருந்தபோது, கோயிலின் வாசலில் நான் பார்த்த துவாரபாலகரின் சிலை என் மனதில் வந்து சென்றது.

துவாரபாலகர் சிலை அனைத்துக் கோயில்களின் வாயில்களிலும் காணப்படும். தஞ்சையில் பார்த்த துவாரபாலகரின் சிலை மிகவும் விசித்திரமாகப் படைக்கப்பட்டிருந்தது.

ஒரு பாம்பு யானையை விழுங்குகின்றது. அந்தப் பாம்பை துவார பாலகர் மிதித்த வண்ணம் உள்ளார். அவர் ஆள்காட்டி விரலை 'கவனம்' என்பதுபோல் காட்டிக் கொண்டிருந்தார். யானை பெரிய தோர் மிருகம். அதனையே பாம்பு விழுங்குவதென்றால் பாம்பின் பிரமாண்டத்தை எண்ணிப்பாருங்கள். அத்தகைய பெரிய பாம்பை துவாரபாலகராகிய நான் காலில் இலகுவாக மிதித்து அடக்குகின்றேன் என்றால் நான் எத்தகைய பெரிய மனிதன். நான் காவல் காக்கின்றேன் எனும்போது உள்ளிருக்கும் இறைவன் எத்தகைய பெரியவன். ஆகவே 'கவனமாக உள்ளே செல்', எனும் செய்தியை சிற்பி அழகாகச் செதுக்கி யிருப்பதாக தஞ்சையில் ஒருவர் எனக்கு விளக்கமளித்தார்.

என் மகனைத் தூக்கியவண்ணம், 'அங்கோர் வாட்' வாயிலின் தொடக்கப்படியின் முன்னால் நின்று தயங்கிக் கொண்டிருந்தேன். 'உலகப் பெருங்கோயில் அங்கோரின் அற்புதங்களை என்னால் சரியாகப் புரிந்துகொள்வதற்கு, அவற்றை இனங்கண்டு கொள்ள வாவது முடியுமா?' என்ற தயக்கம் கலந்த பயம் என் மனதில் பரவிக் கொண்டிருந்தது. என் மனதிலே தஞ்சைப் பெரியகோயில் துவார பாலகரின் 'கவனம்' எனும் ஆள்காட்டி விரல் மட்டும் பெரிதாக வளர்ந்து வளர்ந்து அங்கோரைவிட உயரமாகத் தெரிந்தது!

"அப்பா.... எத்தின மணிக்குப் பூசை?" எனக் கேட்டபடி, எங்கேயோ பார்த்துகொண்டு வந்த என் மனைவி, என் பின்னால் இடிபட, நிலை தடுமாறிய நான் கோயிலின் படியில் என் வலது காலை வைத்தேன்.

உலகப் பெருங்கோயில் அங்கோரினுள் ஆட்கொள்ளப் பட்டேன்!!

❍ ❍ ❍

---

[3-01] - http://en.wikipedia.org/wiki/Angkor_Wat
[3-02] - http://en.wikipedia.org/wiki/Stephen_Hawking
[3-03] - http://en.wikipedia.org/wiki/Gregorian_calendar
[3-04] - Time, Space, and Astronomy in Angkor Wat - Aug. 6, 2001 by Subhash Kak
[3-05] - Indian Journal of History of Science - 1999 - 34(2) by Subhash Kak
[3-06] - http://it-soyang.blogspot.com/2012/06/angkor-wat-temple.html

# 4 சிற்பங்களில் அவதாரங்கள்

## கி.பி. 1131 – ஸ்ரீ வைகுண்டம்

*"சுவாமி............"*

*அனந்த சயனத்திலிருந்த விஷ்ணு பகவான் கண்களைத் திறந்து லக்ஷ்மி தேவியை நோக்கினார்.*

*"அங்கே பாருங்கள் சுவாமி, தங்களுக்காக இரண்டாம் சூரியவர்மன் கட்டும் அங்கோர் கோயிலில் தங்களின் அவதாரக் கதைகளைச் செதுக்குகிறார்கள்....."*

*நாராயணன் புன்னகைத்தார்.........*

*"எனக்கென்றா கட்டுகின்றான்.......? எனக்கெதற்கு?"*

*தேவியும் புன்னகைத்தாள்.*

*மௌனம் ஆட்கொண்டது...*

❍ ❍ ❍

## கி.பி. 1131 – கம்போடியா

*"ணங்......... ணங்........."*

*கற்களில் சிற்பிகளின் உளிகள் மோதின. அங்கோர் கோயிலில் வேலைகள் நடைபெற்றவண்ணம் இருந்தன. ஆயிரக்கணக்கான சிற்பிகள் மும்முரமாகச் சிற்பங்களைச் செதுக்கிக் கொண்டிருந்தார்கள்.*

*இரண்டாம் சூரியவர்மனின் மனைவி, பட்டத்து மகாராணி செதுக்கி முடிவடைந்த 'இராவண சிற்பத்தின்' முன்னால் நின்றுகொண்டிருந்தாள். பத்துத்தலை இலங்கையர்கோன் கயிலை மலையைத் தன் தோள்களால் தூக்கும் காட்சி செதுக்கப்பட்டிருந்தது.*

இராவணன் சிறந்த சிவ பக்தன். தினமும் சிவபெருமானை வழிபடக் கயிலை மலை செல்பவன். அப்படித் தினமும் கயிலை மலைக்குச் சென்றுவரச் சிரமமாக இருந்ததால், கயிலை மலையைப் பெயர்த்து இலங்கைக்கே கொண்டு வந்துவிடலாம் எனத் தீர்மானித்தான். அவன், கயிலை மலையைப் பெயர்க்க, சிவபெருமான் தன் காற் பெருவிரலால் மலையை அழுத்தினார். மலைக்கடியில் அகப்பட்டுக்கொண்ட இராவணன், இறைவனுக்குப் பிடித்தமான சாமகானத்தைப் பாடி சிவபெருமானின் மனம் குளிரச் செய்து தன்னை மீட்டுக் கொண்டான். அத்தகைய தோள்வலிமை கொண்டவன் இராவணன்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து கொண்டு வரப் பட்ட ஓலைச்சுவடிகளில் **கம்பர்** எழுதிய **'இராம அவதாரத்தை'** (கம்ப ராமாயணம்) மகாராணி படித்திருந்தாள்.

**"வாரணம் பொருத மார்பும், வரையினை எடுத்த தோளும்**
**நாரத முனிவர்க்கு ஏற்ப நயம்பட உரைத்த நாவும்**
**தாரணி மவுலி பத்தும், சங்கரன் கொடுத்த வாளும்**
**வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு இலங்கை புக்கான்"**

'வாரணம் பொருத மார்பன்' எனும்போது எட்டு திசைகளையும் காக்கும் யானைகளோடு மோதிப் போரிட்டு, அதனால் அவற்றின் தந்தங்கள் தனது மார்பில் புக, அவற்றை அப்படியே ஒடித்து விட்டு,



**புடைப்புச் சிற்பம் – கயிலை மலையை அசைக்கும் இராவணன்**

*மார்பில் தந்தங்கள் பதியப்பெற்ற பெருமையை உடையவன். கயிலை மலையை அசைத்த தோள்வலிமை உள்ளவன். நாரத முனிவன் 'நன்று நன்று' என்று ஏற்குமாறு சாமவேதத்தை இசைநயத்தோடு பாடிய நாவும், பத்துத் தலைகளில் அணிந்திருந்த அரச சின்னமான மணிமுடி பத்தும், சிவபிரான் தவ ஆற்றல் கண்டு கொடுத்த வாளும் கொண்டவன் இராவணன். இத்தனை பெருமைகளையுடைய இராவணன், தன்னிடம் என்றும் நீங்காமல் இருந்த வீரத்தை போர்க் களத்திலே போட்டுவிட்டு வெறுங்கையனாகத் திரும்பிப் போகிறான் என்று கம்பர் வர்ணிக்கிறார். அந்தக்காட்சியைச் சிற்பமாகக் கண்டு களித்தாள் மகாராணி.*

*மகாராணி சிற்பங்களைப் பார்வையிடுவதை அறிந்த ஸ்தபதியும் பண்டிதருமான திவாகர் அவ்விடம் வந்துசேர்ந்தார். எப்போதும் தனியே வெளியே வராத மகாராணி, இன்று தனியே வருகிறாள். பண்டிதர் திவாகருடன் கூடவே இராம-இராவண இலங்கை யுத்த காட்சிச் சிற்பங்களைத் தலைமை வகித்து செதுக்கிய சிற்பியும் வருகிறான். அவ் இளவயதுச் சிற்பியின் முகத்தில் பெருமை கலந்த திருப்தி பரவியிருந்தது.*

*இராவணனின் சிற்பத்துக்கு அருகே, இராம-இராவண யுத்தத்தில் வில்லில் அம்பு தொடுக்கும் இராமனைச் செதுக்கியிருந்தார்கள்.*

*மகாராணியின் பார்வையில் இராமன், இரண்டாம் சூரியவர்ம னின் தோள்களில் நின்றபடி இராவணனை நோக்கி அம்பைத் தொடுத்த வண்ணம் இருந்தான்! மகாராணி குழம்பிப் போனாள். அங்கோர் கோயிலைக் கட்டுவிக்கும் தன் கணவனை ஏன் இராமனுடன் இணைத் துச் செதுக்கியிருக்கிறார்கள். இரண்டாம் சூரியவர்மனின் வாளும் சற்று வளைந்து நெளிந்த நிலையில் செதுக்கப்பட்டிருந்தது.*

*"பண்டிதரே, என் பிராணநாதரின் தோள்களில் நின்று இராம பிரான் போர்புரிவதாக இச்சிற்பத்தைச் செதுக்கக் காரணம் என்னவோ?"*

*பண்டிதர் திகைத்தபடி சிற்பத்தைப் பார்த்தார், பின்னர் புன் சிரிப்பை உதடுகளில் பரவவிட்டார். பண்டிதரின் அருகிலிருந்த சிற்பி யின் முகம் அஷ்டகோணமாக மாறியது.*

*மகாராணியின் நிலைமையை பண்டிதர் திவாகர் புரிந்து கொண் டார். அவளை வாட்டும் நோயினையும் இனங்கண்டு கொண்டார்.*

*"மகாராணியாரே, மன்னர் சூரியவர்மர் அரசியல் நிமித்தம் தூர தேசம் சென்று சில வாரங்கள் ஆகிவிட்டதல்லவா...?"*

*"ஆமாம்.... அதற்கென்ன....?"*

புடைப்புச் சிற்பம் –
அனுமானின் தோள்களில் நின்று
அம்பு தொடுக்கும் இராமன்





அப்சரஸ் –
தேவ மங்கையர்




திருப்பாற்
கடலை
கடையும்
இராவணன் –
அசுரர்கள்

“அவர் பிரிவு, தங்களை வாட்டுகிறது. தாங்கள் பார்ப்பவையெல்லாம், அவரைப்போல் தங்களுக்குக் காட்சியளிக்கின்றன. இராமனை தோளில் தாங்கி நிற்பவர் ஸ்ரீ அனுமான். எங்கள் மன்னர் அல்லர்!!”

மகாராணி தன் உதட்டைக் கடித்துக்கொண்டாள். வளைந்து நெளிந்து இருப்பது வாளல்ல, அது வாலாகும் என்பதையும் புரிந்துகொண்டாள்.

“மகாராணியாரே, **திரணதுமாக்கினி** (தொல்காப்பியரின் இயற்பெயர்) யாத்த **தொல்காப்பியத்**தில் இதைப்பற்றி அழகாகக் கூறியிருக்கிறார்”


“எதைப்பற்றி?”

“தங்களின் இந்நிலைபற்றி. அதாவது தலைவனைப் பிரிந்த தலைவிக்கு ஏற்படும் பத்து அவஸ்தைகள் பற்றி”

**“வேட்கை யொருதலை யுள்ளுதல் மெலிதல்**
**ஆக்கஞ் செப்பல் நாணுவரை யிறத்தல்**
**நோக்குவ வெல்லாம் அவையே போறல்**
**மறத்தல் மயக்கம் சாக்காடு என்று அச்**
**சிறப்புடை மரபினை களவென மொழிப”**

***“நோக்குவ வெல்லாம் அவையே போறல்”*** எனும் வரியை பண்டிதர் மீளக்கூறினார்.

மகாராணி நிலம் நோக்கினாள்.




**‘அங்கோர்’ – சிற்பத் தொகுதிகள்**

“மகாராணியாரே, இந்தப் பத்து அவஸ்தைகள் பற்றி வேறும் சில நூல்களில் கூறப்பட்டுள்ளன”

மகாராணி நிமிர்ந்து ‘எங்கு’ என்று விழிகளால் வினாவினாள்.

அருகில் நின்ற இளம் சிற்பி முந்திக்கொண்டு “**வாத்ஸாயனரது காமசூத்திரத்**தில் ஐந்தாம் அதிகரணத்தில் வரும் முதல் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது.” என்றான். [4-01]

“ஓலைச்சுவடியின் பக்க எண்ணையும் வரி எண்ணையும் கூற மறந்துவிட்டாயே” எனப் பண்டிதர் சிரித்தபடி கூறினார்.

சிற்பியின் முகம் வெட்கிச் சிவந்தது.


“அங்கோரில் தாங்கள் செய்யவிருக்கும் சிற்பத் தொகுதிகளைப் பற்றிக் கூறுங்கள்.” மகாராணி பேச்சின் திசையை மாற்றினாள்.

தாங்கள் நின்று கொண்டிருப்பது, மேற்குப்பகுதியிலுள்ள இராம-இராவண யுத்தத் தொகுதி. இதனை உள்ளடங்கலாகக் கொண்டு மொத்தம் எட்டுத் தொகுதிகள் செதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளன.

வடக்குப் புறத்திலே இந்து சமயத்தின் புராணக் கதைகளிலே கூறப்படும் தேவ அசுரர்களின் யுத்தங்களும் அதற்கு அருகிலே கிருஷ்ண பரமாத்மா மேற்கொண்ட, மகாபலியின் புத்திரனான பானசூரனின் வதமும் சித்திரிக்கப்படவுள்ளன. கிழக்குப் புறத்திலே தேவ அசுரர்கள் திருப்பாற்கடலைக் கடையும் காட்சி பெரிய அளவில் செதுக்கப்படவுள்ளது. மேலும், பல அசுரர்களை கிருஷ்ணன் வதம் செய்த காட்சிகளும் கிழக்கிலே அமையப்பெறும்.

சுவர்க்கம் நரகத்தினை பிரதிபலிக்கும் சிற்பங்கள் தெற்கிலே செதுக்

**புடைப்புச் சிற்பம்–**
**மாவீரர் பீஷ்மர்**
**அம்புப் படுக்கையில்**



கப்படும். இன்னுமோர் தொகுதியிலே எமது மன்னர் இரண்டாம் சூரியவர்மரின் சிற்பம் அடங்கலாக கம்போஜ வரலாற்றினைக் குறிக்கும் பல சிற்பங்களும் இடம்பெறும். [4-02]

“அற்புதம் பண்டிதரே...... அற்புதம்! மகாபாரதக் கதையைக் குறிக்கும் சிற்பங்களும் அமைந்தால் முழுமையாக இருக்குமே...”

“மன்னிக்கவேண்டும் மகாராணி, வயதாகிவிட்டதால் எனக்கு மறதி வந்துவிட்டது. மேற்குத் திசையில் தாங்கள் நிற்கும் இராம-இராவண இலங்கை யுத்தத் தொகுதிக்கு அருகிலேயே மகாபாரதம் குறிக்கும் சிற்பங்களும் செதுக்கப்படவுள்ளன....... இதோ இங்கே தான்..... “ என்று கையால் சுட்டிக் காட்டினார் பண்டிதர்.

மகாராணி, தலையைத் திருப்பி பண்டிதர் காட்டிய இடத்தைப் பார்த்தாள்.

அவர் காட்டிய அந்த இடத்திலே............

❍ ❍ ❍

## கி.பி. 2011 – கம்போடியா

அந்த இடத்திலே............ நான் நின்றுகொண்டிருந்தேன்.

மகாபாரதப் போர் நடந்த குருஷேத்திரக் காட்சி, படைவீரர்கள் ஆக்குரோசமாகப் போர்க்களத்தில் முன்னேறிச் செல்லும் காட்சி. பாண்டவர்கள் சண்டையிடும் காட்சி, மாவீரர் பீஷ்மர் அம்புப் படுக்கையில் படுத்திருக்கும் காட்சியெனப் பலவற்றைச் செதுக்கி யிருந்தார்கள்.

ஒவ்வொன்றாகப் பார்த்தபடி மெதுவாக நகர்ந்தேன். நான் நகர்ந்த பாதையில் வெள்ளையர் ஒருவர் கையில் ‘கமெரா’வுடன் நின்று கொண்டிருந்தார். “ஹாய்” என்று கூறிவிட்டு, அவர் நின்ற இடத்தைக் கடந்து சென்றேன்.

“ஹூ இஸ் திஸ்?” என அவர் ஒரு சிற்பத்தைக் காட்டிக் கேட்டார்.

என்னிடமா கேட்கின்றார் என்று உறுதிப்படுத்திக்கொண்டு, அவர் காட்டிய சிற்பத்தைப் பார்த்தேன். கிருஷ்ணர் அருச்சுனனுக்கு ‘கீதா உபதேசம்’ செய்யும் காட்சி.

“இது கிருஷ்ண அவதாரம் (Avatar-அவதார்), மகாபாரதக் கதையின் ஒரு காட்சி.” என்று ஆங்கிலத்தில் பதிலளித்தேன்.

“அவதார்??”

“எஸ், அவதார்” எனக்கூறி புன்னகைத்தேன். எதை நினைத்து அவர்



Avatar


அப்படிக் கேட்கிறார் என்பதைப் புரிந்துகொண்டேன்.

“அப்பா, மகனுக்கு ‘மைலோ’ (*Milo*) பைக்கற் வேணும்” என்று மனைவி கூறினாள்.

“இப்பதானே ‘பாண்’ கொடுத்தாய்” என்று அலுத்துக்கொண்டு நான் தோளில் மாட்டியிருந்த பையைக் கழற்றினேன்.

“அப்படியே அந்த மீதிப் ‘பாணை’யும் எடுத்துத் தாங்கோ” என் றாள் மனைவி.

இன்னமும் அந்த வெள்ளையர் கிருஷ்ண அவதாரத்தைப் பார்த்த படியே நின்றார்.



**‘நாவி’ மனிதப் பெண்**

**மனித முகபாவத்தை, கணினியில் சிருஷ்டித்த கதாபாத்திரத்தில் ஏற்றுதல்**

*“Avatar திரைப்படம் பார்த்திருக்கின்றீர்கள் போலிருக்கிறது…”*

*“ஆம்” என்றார்.*


*உலகெங்கணும் வாழும் சினிமாப் பிரியர்களில் அனேகமானோர் இந்தப் படத்தைக் கட்டாயம் பார்த்திருப்பார்கள்.*

*2009 ஆம் ஆண்டு வெளியான Avatar படத்தை மூன்று முறை நான் பார்த்திருக்கிறேன். தமிழ் மக்களால் அதிகளவு மனதில் உள்வாங்கப்படாத ஒரு படம். 40% மனிதப் பாத்திரங்களின் நடிப்பாலும் 60% கணினிப் பாத்திரங்களின் ‘நடிப்பா’லும் உருவான ஒரு கலவை, பார்த்துக்கொண்டிருக்கும்போது எது நடிப்பு? எது கணினி உருவாக்கம்? எனத் தெளிவாகப் பிரித்தறிய முடியாத நிலைக் குத் தள்ளிவிடும் புதுமை. **‘டைட்டானிக்’** பட இயக்குனர் Cameron ஆல் 300 மில்லியன் அமெரிக்க ‘டொலர்’ செலவில் இப்படம் தயாரிக்கப்பட்டது. Cameron 1994 இல் இப்படத்தின் கதையை 80 பக்கங்களில் எழுதினார். ஆனால் அவரின் எதிர்பார்ப்பிற்கு கணினியின் வளர்ச்சி அன்று போதாததால், ஆறப்போட்டு, பின்னர் 2009 இல் கணினித் தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்பட்டதன் பின்னர் பிரமாண்ட அளவில் படமாக்கியிருந்தார்.*

*நியுசிலாந்திலுள்ள Weta Digital எனும் கணினி நிறுவனம் இப்பட உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்தது. ஒரே தருணத்தில் 4000 அதிதிறன் கணினிகளில் 900 க்கும் மேற்பட்ட கணினி நிபுணர்கள் தொழில்புரிந்தனர். இப்படத்தில் உலகத்தில் முதன்முதலாக Came ron ஒரு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியுள்ளார். இதன்படி ‘கமெ ரா’வின் முன்னால் நாம் காட்டும் முகபாவங்களை அச்சொட்டாகக் கணினி உள்வாங்கி கணினித் தொழில்நுட்பத்தில் உருவான கதா பாத்திரங்களின் முகத்திலே ஏற்றிவிடும்! [04-03]*

*உலகத்தில் இன்றுவரை வெளியான திரைப்படங்களில் அதிகளவு வசூலான 2.7 பில்லியன் அமெரிக்க ‘டொலரை’த் தேடித்தந்த படம் Cameron னின் Avatar. இதற்கு அடுத்தது, அவரே தயாரித்த 1.8 பில்லியன் அமெரிக்க ‘டொலர்’ தேடித்தந்த ‘டைட்டானிக்’ திரைப்படமாகும்!*

*Avatar படத்தின் கதை சற்று சிக்கலானது. ஐந்து பாட்டு, நாலு சண்டை, மூன்று ‘நகைச்சுவை’, இரண்டு அழுகை, ஒரே கதை என்ற மசாலா வாய்ப்பாட்டை மீறி அமைந்தது. 2154 ஆம் ஆண்டில் கதை நடக்கின்றது. புவியின் இயற்கை வளங்கள் அனைத்தும் மனிதர்களால் சூறையாடப்பட்ட நிலையில், Pandora எனும் கிரகத்திலுள்ள இயற்கை வளங்களை மனிதர்கள் சூறையாடத் திட்டமிடுவார்கள்.*



James Cameron

அக்கிரகத்தில் இயற்கையுடன் மிகவும் அன்னியோன்னியமாக வாழும் 10 அடி உயரமான, நீலநிற மேனி கொண்ட 'நாவி' எனும் சாந்தமான உயிரினம் வாழ்கின்றது. 2154ல் மனிதன் கொண்டுள்ள தொழில்நுட்பம் மனிதனை தேவையானபோது 'நாவி' ஆக உருக்கொடுக்க, அதாவது அவதாரம் கொடுக்கவல்லது. மனிதர்கள் 'நாவி'யாக மாறி அக்கிரகத்தை சூறையாட முயல்வார்கள். இதன்போது கால் முடமான ஒருவனும் 'நாவி'யாக அவதாரம் கொடுக்கப்படுவான். 'நாவி' அவதாரத்தில் அவன் முடமில்லை! இறுதியில் அவன் Pandora கிரகத்தையும் 'நாவி' இனத்தையும் மனித 'அரக்கர்களிடம்(!)' இருந்து காப்பாற்றுவான். [04-03]

இந்த Avatar படத்தைப் பார்த்திருந்த அந்த ஆங்கிலேயர், நான் கிருஷ்ணரின் அவதாரங்களை ஆங்கிலத்தில் 'அவதார்' என்று குறிப்பிட்டபோது முதலில் குழம்பிப்போனார்.

சிற்பங்களுக்கு அருகில் இருந்த கிருஷ்ணர் சிலையைக் காட்டி எனக்குத் தெரிந்த அரைகுறை கிருஷ்ண அவதாரக் கதைகளை அவ் வெள்ளையரிடம் ஒப்பேற்றினேன்.

மகன் உலாவியபடி 'மைலோ' குடித்துக் கொண்டிருந்தான். மனைவியின் கையில் 'பாண்' இல்லை. மிகவும் விரைவாக எனது இரண்டு வயது மகன் 'பாணை'ச் சாப்பிட்டிருக்கவேண்டும்!!

தன் 'கமெரா'வால் எம்மூவரையும் படமெடுத்தார் அவ் வெள்ளையர். அதன்பின் நன்றி கூறி அப்பால் நகர்ந்தார்.

அங்கோர் கோயிலின் அனைத்துச் சிற்பத் தொகுதிகளிலும் 'அப்சரஸ்' எனும் இரண்டாயிரத்திற்கும் அதிகமான தெய்வ மங்கையர்களைப் படைத்திருந்தார்கள். சுவர்களின் ஒவ்வொரு அங்குலத்தையும் சிற்பங்களால் நிறைத்திருந்தார்கள். அனைத்திலும் பிரமாண்டம் தொனித்தது.

தேவ-அசுரர்கள் வாசுகிப் பாம்பால் திருப்பாற்கடலைக் கடையும் காட்சி ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்கு வியாபித்திருந்தது. பாம்பின் ஒருபுறம் இராவணனின் தலைமையில் 92 அசுரர்களும் மறுபுறம் 88 தேவர்களும் செதுக்கப்பட்டிருந்தார்கள். இராவணனும் சேர்ந்து திருப்பாற்கடலைக் கடையும் காட்சி எனக்குப் புதுமையாக இருந்தது! [4-04]

'எப்படித்தான் இக்கோயிலை 30-40 வருடங்களுக்குள் கட்டினார்களோ?' என்ற கேள்வி என் ஒவ்வொரு சுவாச உள்வாங்கலிலும் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டிருந்தது.

*அங்கோர் கோயிலில் 5 மில்லியன் தொன் நிறைக்கும் அதிகமான கற்கள் பாவித்திருக்கின்றார்கள். அதிசயம் என்னவென்றால் இக்கற்கள் 50 கிலோமீற்றர் தொலைவிற்கு அப்பாலிலுள்ள Lichi எனும் மலையிலிருந்து வெட்டியெடுக்கப்பட்டுள்ளது. 'சியாம் ரீப்' நதியோட்டத்தைப் பயன்படுத்தி மலைப்பகுதியிலிருந்து 'அங்கோர்' இடத்திற்கு நகர்த்தியிருக்கிறார்கள். இதற்காக ஏழாயிரத் திற்கும் அதிகமான படகுகளையும் ஐயாயிரத்திற்கும் அதிகமான யானைகளையும் பயன்படுத்தியிருக்கிறார்கள். பத்து இலட்சம் தொழிலாளிகள், 500 ற்கும் அதிகமானோரின் தலைமையில் பணிபுரிந்திருக்கிறார்கள்...... [4-05]*

*அப்பப்பா......... என் தலை சுற்றியது. என்னைத் திடப்படுத்திக் கொள்ள சுவரிலிருந்த சிற்பத்தில் கையை வைத்துக் கொண்டேன். அவதாரக் கிருஷ்ணனின் வலது பாதத்தில் என் கை பதிந்தது!*

*"அடே கிருஷ்ணா.., இம்மாபெரும் கோயிலின் கருவை எம் மவர்கள் மனதில் விதைத்து, உலகப்பெருங்கோயிலாகக் கட்ட வைத் தாய். அப்படிச் செய்த நீ..., என் நாட்டில் மண்ணாசை என்ற கருவை மனங்களில் விதைத்து எம்மவர்களைச் சிதைத்து விட்டாய். அதுவும் 30 வருடங்கள், இதுவும் 30 வருடங்கள்.... வஞ்சகன் நீ......"*

❍ ❍ ❍

## கி.பி. 2011 – ஸ்ரீ வைகுண்டம்

*சயனத்திலிருந்த கிருஷ்ணபகவானின் வலது பாதம் ஆடியது. பரமாத்மா கண்களைத் திறந்துகொண்டார்...*

*'விழி'த்துக்கொண்ட கிருஷ்ணரை, தேவி அர்த்த புஷ்டியுடன் நோக்கினாள்....*

*கிருஷ்ணரைத் தாங்கும் ஆதிசேஷன் தன் பத்துக்கண்களால் அங்கோரில் உலாவரும் என்னைப் பார்த்தவண்ணம் இருந்தான்.*

❍ ❍ ❍

---

[4-01] - தொல்காப்பியம் - பன்முக வாசிப்பு.- (2008) தொகுப்பாசிரியர் - பா. இளமாறன் - பக். - 24
[4-02] - THE MONUMENTS OF THE ANGKOR GROUP by Maurice Glaize (A translation from the 4th French edition) - (1993) - page 58
[4-03] - http://en.wikipedia.org/wiki/Avatar_(2009_film)
[4-04] - "Ancient Angkor" (2011) - Michael Freeman and Claude Jacquse, - (p- 62)
[4-05] - http://angkor-wat-facts.mydigipedia.com/

# 5 கம்போடிய நாட்டை இந்து மதத்திலிருந்து பௌத்த மதத்திற்கு மாற்றிய இலங்கை மன்னர்கள்

**கி.பி. 2012 – கொழும்பு (இலங்கை)**

*அன்று ஒரு சனிக்கிழமை. காலை நேரம் 10:45. அழைப்பு மணியை அழுத்திவிட்டு காத்திருந்தேன். சில நிமிடங்கள் கரைந்தன.*

*எப்பொழுதும் போன்று, தன் சாந்தமான முகத்தில் புன்சிரிப்பைத் தவழவிட்டபடி கதவைத் திறந்தார்* **பிக்கு மெத்தாவிகாரி.** *(Venerable/ Bhikkhu Mettavihari)*

*என்னைப் பார்த்ததும், அவரது மகிழ்ச்சி இரட்டிப்பாகியது. நான் 'பன்சல'விற்குள் (Narada Center-Colombo) நுழைந்ததும் கதவை மூடிக்கொண்டு குசலம் விசாரித்தார். என்னை அழைத்துக்கொண்டு தியான அறையைக் கடந்து, நாங்கள் வழக்கமாக உரையாடும் தன் அறைக்குச் சென்றார்.*

*68 வயதைத் தாண்டிய பிக்கு மெத்தாவிகாரி அவர்களுக்கும் எனக்கும் கடந்த ஆறு வருடகாலம் மிக நெருங்கிய பழக்கம் உண்டு. மாதத்தில் 4 அல்லது 5 தடவைகள் நாம் இருவரும் சந்தித்துக் கொள்வோம். அவர் டென்மார்க் நாட்டைச் சேர்ந்தவர். கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக இலங்கையில் வாழ்ந்து வருகிறார்.*

*இவரின் கதை மிகவும் சுவாரசியமானது. இவர் டென்மார்க்கில் கல்வி கற்கும் காலத்தில் இவருடன் இலங்கைப் பெண்மணியொருவரும் கல்வி கற்றுள்ளார். இருவரும் காதல் வயப்பட்டனர். பெண்மணி இலங்கை திரும்பும்போது இவரும் இலங்கை வந்து இருவரும் திருமணம் செய்துகொண்டார்கள். திருமணத்தின் போதே தாங்கள் குழந்தைகள் பெறப்போவதில்லையெனவும், இருவரும் துறவறம்*

பூண்டுகொள்வதெனவும் திடசங்கற்பம் செய்துகொண்டார்கள். அதன்படி 25 வருடங்களுக்கு முன் கொழும்பில் தங்களுக்கிருந்த பல மில்லியன் ரூபாய் சொத்துக்களையும் துறந்து இருவரும் துறவறம் பூண்டார்கள்.

கம்போடியப் பயணக் கட்டுரை எழுதும்போது, பௌத்தமதம் சார்ந்த தெளிவினைப் பெறுவதற்கு அவரிடம் சென்றிருந்தேன்.

**"தேரவாதம், மகாயானம்** என்பன பௌத்தமதத்தின் முதன்மையான இரு பிரிவுகள் ஆகும். தேரவாத பௌத்தத்தின் செறிவகம் இலங்கை. இலங்கையிலிருந்தே கம்போடியா, தாய்லாந்து, பர்மா, லாஓஸ் போன்ற நாடுகளுக்குத் தேரவாத பௌத்தம் பரவியுள்ளது. மகாயான பௌத்தம் சைனா, ஜப்பான் போன்ற நாடுகளில் கைக்கொள்ளப் படுகிறது." எனப் பிக்கு கூறினார்.

நான் அவருக்குத் தானமாகக் கொடுக்கக் கொண்டு சென்றிருந்த உணவை அவரது தட்டில் வைத்தேன். அவர் பகல் 12 மணிக்கு முன்னர் உணவை அருந்த வேண்டும். அவர் சூரிய வெளிச்சமுள்ள பகற்பொழுதிலும் வெளிச்சம் இல்லாத அதிகாலைப் பொழுதிலுமாக, இரு வேளைகள் மட்டுமே உணவு உண்பார். அதுவும் தானம் பெற்றே உண்பார். உணவை வேறொருவர்தான் அவர் தட்டில் வைக்கவேண்டும் (தானமாக). யாரும் தானம் கொடுக்க வரவில்லையென்றால் பிச்சைப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு சுட்டெரிக்கும் வெயிலில் காலில் செருப்பும் இல்லாமல் கிளம்பிவிடுவார். வீடு வீடாகவும் கடைத் தெருவெங்கிலும் அவர் தானம் கேட்டுச் செல்வார். அவர் உண்ணும் தருணத்தில் நாங்கள் அருகிலிருந்தால் தனக்குக் கிடைத்த தானத்தை எமக்கும் பங்கிடுவார்.

அவரின் இன்னொரு வழக்கம், பணத்தைக் கையினாலே தொட மாட்டார். அவரை சில தடவைகள் நான் பஸ்ஸில் ஏற்றிவிட்டுள்ளேன். அத்தகைய சந்தர்ப்பங்களில் பஸ் நடத்துநரிடம் அவர் இறங்கும் இடத்தைக்கூறி 'டிக்கற்' காசை நானே கொடுத்துவிடுவேன். இத்த கைய கடும் துறவறப் போக்காளர் அவர்.

"ஹாமதுருனி...., இலங்கையில் கைக்கொள்ளப்படும் தேர வாத பௌத்தத்திற்கும் சைனா, ஜப்பான் போன்ற நாடுகளில் கைக் கொள்ளப்படும் மகாயான பௌத்தத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?"

"மகாயான பௌத்தத்தில் கௌதம புத்தரைக் கடவுளாகக் கொள்வார்கள். ஆனால் இலங்கையில் கைக்கொள்ளும்

தேரவாத பௌத்தத்தைப் பொறுத்தவரையில் புத்தர் கடவுளல்லர். மேலும்...."

"சொல்லுங்கள் ஹாமதுருனி......"

"தேரவாதத்தில் தத்தமது 'நிர்வாணத்தை' (இந்துசமயத்தில் வீடுபேறாகக் கொள்ளலாம்) தாமே அடைய முயல்வார்கள். ஆனால் மகாயானக் கொள்கையின்படி ஒவ்வொருவரும் 'நிர்வாணத்தை' அடைவது உலகிலுள்ள உயிர்கள் அனைத்தினதும் துக்க நிவர்த்தியின் பொருட்டு எனப்படுகிறது."

எனக்கும் பிக்குவிற்கும் தொடர்பு ஏற்படக் காரணம் கணினித் துறை. முப்பது வருடங்களுக்கும் மேலாக கணினியை ஆராய்ச்சி அடிப்படையில் பாவித்துவரும் நிபுணர் அவர். நாங்கள் இருவரும் மணிக்கணக்கில் உரையாடுவோம். சில சமயங்களில் கால வரை யறையின்றி தொலைபேசியிலும் பேசிக்கொள்வோம்.

"எங்கேயிருந்துடா.... உந்தப் பிக்குவை எல்லாம் தேடிப்பிடிக்கிற?" என்று அடிக்கடி என் தாயார் 'பயத்துடன்' என்னிடம் கேட்பார்.

என்மகன் பிறந்த தருணத்திலேதான் என் குடும்பத்தினருக்கு பிக்கு மெத்தாவிகாரியின்மேல் மதிப்பு ஏற்பட்டது. மகன் பிறந்து வைத்தியசாலையில் இருக்கும்போது முதன்முதலில் பார்க்கவந்த என் இரத்த உறவினரல்லாத, உறவினர் இந்த பிக்கு மெத்தாவிகாரிதான்!

என்னிடம் அவருக்கு ஓர் அன்பு கலந்த ஈர்ப்பு. ஒருமுறை எனக்கும் என் அயல் வீட்டுக்காரரான சிங்களவருக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினையொன்றில் கொழும்பு வெள்ளவத்தை பொலி ஸார் விசாரணைக்காக என்னை அழைத்திருந்தார்கள். இதையறிந்து பதைபதைத்த பிக்கு மெத்தாவிகாரி வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்திற்கே வந்து விட்டார்!!

பிக்கு மெத்தாவிகாரி, இலங்கையின் கல்வி மேம்பாட்டிற்காக அல்லும் பகலும் உழைத்துவருகிறார். தற்பொழுதுகூட (2012), இலங்கையின் வடமாகாணத்தில் மாணவர்களுக்காக கல்விசார் தமிழ் தொலைக்காட்சி ஒளிபரப்பொன்றினை ஆரம்பிக்க கல்வித் திணைக்களத்துடன் இணைந்து இயங்கி வருகிறார். அனைத்துக் குழந்தைகளுக்கும் சமகல்வி கிடைக்கவேண்டும் என்பது அவரது அயராத கனவு. என்னைப் பொறுத்தவரையில் இலங்கையை நேசிக்கும் ஓர் உன்னத உள்ளம் கொண்டவர் அவர்.



**2011ல் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் இடம்பெற்ற 'சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டி'ல் கட்டுரையாளருடன் பிக்கு மெத்தாவிகாரி**

## மீண்டும் கி.பி. 1185 – பொலன்னறுவை (இலங்கை)

அநுராதபுரத்திலுள்ள ஜேதவனராமய தூபியைப் பார்க்கச் சென்றிருந்த மன்னர் முதலாம் பராக்கிரமபாகுவும் அவரது பேரனும் பொலன்னறுவையை அண்மித்துவிட்டார்கள். மன்னர் அமர்ந்துவரும் வெள்ளைநிறப் புரவியின் முகத்திலும் பேரன் அமர்ந்துவரும் சாம்பல் நிறப் புரவியின் முகத்திலும் களைப்புத் தெரிந்தது.

பேரனின் மனதில் தாத்தா கூறிய கம்போடியாவும் 'அங்கோர் வாட்'டும் வலம் வந்துகொண்டிருந்தன. புரவியின் வேகத்தினால் பயணத்தின்போது, மன்னர் பராக்கிரமபாகுவிடம் தனக்கிருந்த சந்தேகங்களைப் பேரனால் கேட்க முடியவில்லை. பொலன்னறுவை நகரத்தினுள் நுழைந்ததும் மன்னர் புரவியின் வேகத்தைக் குறைத்துக் கொண்டார். இலங்கை நாடு முழுவதையும் ஒரு குடையின் கீழ் ஆளும் மன்னன், ஆர்ப்பாட்டமில்லாமல் இவ்வாறு வருவதை பலமுறை மக்கள் பார்த்திருக்கிறார்கள். மன்னனை வணங்கி வழிவிட்டார்கள்.

மன்னர், தன் புரவியை பொலன்னறுவையின் பிரதான வீதியின் இடப்பக்கம் அமைந்த தெரு ஒன்றினுள் நடத்தினார். அத்தெருவினுள் வசித்தவர்களைப் பார்க்க, பேரனுக்கு விசித்திரமாக இருந்தது. அவர்கள் இலங்கையர்கள் அல்லர்.

"தாத்தா, இந்தத் தெருவின் பெயர் என்ன?"

***“கம்போஜ வாசல்*** *(kamboja vasala)” என்று கூறியவாறு மன்னர் பேரனைப் பார்த்தார். பேரனின் விழிகள் விரிந்தன. அங்கோரைக் கட்டிய கம்போடிய மக்கள் வாழும் பிரத்தியேக தெரு ஒன்று இலங்கையில் உள்ளதா?! வியப்பாக உள்ளதே’*



மகா பராக்கிரமபாகு–1
(1153–1186)

முதலாம் பராக்கிரமபாகுவின் பின்னர் இலங்கையை ஆண்ட மன்னர்களில் ஒருவனான ***ஸ்ரீ. நிஸ்ஸங்கமல்லன்***, தான் பொறித்த கல்வெட்டு ஒன்றில் இந்த ‘கம்போஜ வாசல்’ பற்றிக் குறித்துச் சென்றுள்ளான். [05-01]

*மன்னர் பராக்கிரமபாகு, கட்டட வேலைகள் நடந்து கொண்டிருந்த பகுதி ஒன்றின் முன் தன் புரவியை நிறுத்திவிட்டு இறங்கினார். பேரன் அந்த வினோத அமைப்புடைய கட்டடத்தைப் பார்த்தவாறு புரவியிலிருந்து இறங்கினான்.*

*“தாத்தா..........”*

*“பேரனே..... நீ என்ன கேட்கப் போகின்றாய் என்று எனக்குத் தெரியும். இந்தக் கட்டடம் எம் இலங்கை நாட்டிலுள்ள கட்டடங்கள் அனைத்திலுமிருந்து வித்தியாசமாக இருப்பதேன், என்றல்லவா கேட்கப்போகிறாய்?” முறுவலித்தவாறு கேட்டார்.*

*பேரன் கட்டடத்திலிருந்து தன் விழிகளை அகற்றாமல், ஆமோதித்துத் தலையசைத்தான்.*

*“கெமர் சாம்ராஜ்ய, கம்போடிய கட்டடக் கலையை அடிப்படையாகக் கொண்டு இதைக் கட்டுகிறார்கள். இது ஏழு தளங்களைக் கொண்டதாக அமையும். கீழிருந்து மேல்நோக்கிச் செல்கையில்,*



**ஸ்ரீ நிஸ்ஸங்கமல்லன்**
**(1187 – 1196)**

*தளங்களின் சுற்றளவு ஒன்றுக்கொன்று குறைந்த வண்ணம் அமையப் பெறும். இதனை **'சத்மகல் பிரசாதய'** எனப் பெயரிட வுள்ளேன். எமக்கும் கம்போடியாவுக்கும் இருக்கும் உறவை, இக்கட்டடம் பல நூற் றாண்டுகளுக்குப் பின்னரும் பிரதிபலிக்கும்" [05-02]*

*அங்கு ஒரு பகுதியில் இலங்கையைச் சார்ந்த வயதான பிக்கு ஒருவர் பஞ்சசீலக் (5) கொள்கையை இலங்கையர் அல்லாத பல்வேறு நாட்டவர்களுக்குக் கற்பித்துக் கொண்டிருந்தார்.*

**புத்தம் சரணம் கச்சாமி**
**தம்மம் சரணம் கச்சாமி**
**சங்கம் சரணம் கச்சாமி**

*(நான் புத்தரிடம், தர்மத்திடம், சங்கத் திடம் சரண் அடைகிறேன்)*


**பானாதிபாட வெரமானி சிக்காபதம் சமாதியாமி**
**அதின்னாதன வெரமானி சிக்காபதம் சமாதியாமி**
**காமேசு மிச்சாசர வெரமானி சிக்காபதம் சமாதியாமி**
**முசாவாத வெரமானி சிக்காபதம் சமாதியாமி**
**சுற மெறய மஜ்ஜா பமாதத்தான வெரமானி**
**சிக்காபதம் சமாதியாமி**

*(1-உயிர் வாழ்வன எதனையும் கொலை செய்வதைத் தவிர்ப்பேன், 2- எனக்கு வழங்கப்பட்டவற்றைப் பயன்படுத்துவனேயன்றி வேறு எதையும் திருட மாட்டேன், 3-பாலியல்தவறுகள்எதனையும்செய்யமாட்டேன், 4-தவறான வார்த்தையாடலை (பொய்) தவிர்ப்பேன், 5-சுரபானங்கள் எதனையும் அருந்த மாட்டேன் எனப் பிரமாணம் செய்கின்றேன்.)*

*மன்னரும் பேரனும் சிறிய மாளிகை ஒன்றினுள் சென்று அங்கிருந்த ஆசனங்களில் அமர்ந்துகொண்டார்கள். சில நிமிடங்களில் தேஜஸ் நிறைந்த இளைஞன் ஒருவன் வந்து மன்னர் பராக்கிரமபாகுவை வணங்கி நின்றான்.*

*"**தமிழிந்தா**....... (Tamalinda) எப்படி இருக்கிறாய்?" மன்னர் விசாரித்தார்.*

*"தங்கள் அனுசரணையால் அனைத்தும் நலம் பிரபு..."*



ஜெயவர்மன் – 7 (1181–1218)

மன்னர் வந்ததை அறிந்த தலைமைப் பிக்கு அங்கு வருகை தந்தார். மன்னரும் பேரனும் பிக்குவை வணங்கினர். தலைமைப் பிக்குவும் மன்னரும் உள் அறையொன்றுக்குள் செல்ல, பராக்கிரமபாகுவின் பேரனும் தமிழிந்தனும் தனித்துவிடப்பட்டனர்.

துடிப்பான பேரனே முதலில் பேச்சைத் தொடங்கினான்.

“தாங்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?”

“கம்போடியா.....”

“அப்படியா.......! எப்போது இலங்கைக்கு வந்தீர்கள்?”



சூரியவர்மன் – 2 (1113–1150)



**சத்மகல் பிரசாதய**

(Satmahal Prasada)

**பொலன்னறுவை – இலங்கை**

*“ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் (கி.பி. 1280), பல்வேறு நாடுகளிலிருந்து தேரவாத பௌத்தம் கற்பதற்காக இலங்கைக்கு ஒரு குழுவாகப் பலர் வந்தார்கள். அவர்களுடன் நானும் வந்தேன்.” தமிழிந்தா பதிலளித்தான். [05-03]*

*“பௌத்தம் கற்பதற்காகவா இலங்கைக்கு வந்துள்ளீர்கள்? கம்போடியாவில் தற்பொழுது இந்து சமயம் வழக்கில் இருப்பதாகத் தாத்தா கூறினாரே.......”*

*“தாத்தா......? அப்படியென்றால், மன்னரின் பேரனா தாங்கள்?” தமிழிந்தன் புருவங்களை உயர்த்தியவாறு கேட்டான்.*

*“மன்னர், என் தாய் வழியால், தாத்தா முறையானவர். ஏன் என்னைப் பார்த்தால் மகா பராக்கிரமபாகுவின் வம்சத்தவன் போன்று தெரியவில்லையா?” அரச நடை போட்டுக்காட்டி புருவத்தினால் வினவினான் பேரன்.*

*தமிழிந்தன் இரசித்துப் புன்னகைத்தான்.*

*உள் அறையிலிருந்து பராக்கிரமபாகுவின் செருமல் சத்தம் கேட்க, மெதுவாக ஆசனத்தில் அமர்ந்துகொண்டான் பேரன்.*

*தமிழிந்தன் தொடர்ந்து புன்னகைத்தவாறு கூறினான். “தங்கள் தாத்தா கூறியது உண்மையே. நூறு ஆண்டுகளுக்கு முன்னர், இரண்டாம் சூரியவர்மன் மன்னரால் ‘அங்கோர் வாட்’ கட்டப்பட்ட காலத்தில் கம்போடியாவில் இந்து சமயம் செழித்திருந்தது. ஆனால் தற்போதைய கம்போடிய மன்னரான, **ஏழாம் ஜெயவர்மன்** மகாயான பௌத்தத்தை பெரிதும் ஆதரித்து வருகிறார்[05-04]. ‘அங்கோர் வாட்’ டிலும் பௌத்தத்தின் அடையாளங்களை ஏற்படுத்திவருகிறார். ஆகவே இப்போது கம்போடியாவில் இந்து, பௌத்தம் கலந்த சமய நிலை காணப்படுகிறது. கம்போடிய மன்னர்தான் என்னை, தேரவாத பௌத்தத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற இங்கு அனுப்பி வைத்துள்ளார்” [05-03]*

*“நீங்கள் ‘அங்கோர் வாட்’டை பார்த்துள்ளீர்களா?” பேரன் பொறாமை பொங்கக் கேட்டான்.*

*“நான் ஓடி ஆடி வளர்ந்ததே அங்கோர் கோயிலில்தான்” தமிழிந்தன் உணர்ச்சிப்பெருக்கால் குரல் தழுதழுக்கக் கூறினான்.*

*“தமிழிந்தா... என்ன அங்கோரிற்குச் சென்றுவிட்டாய் போலும்...” மன்னர் பராக்கிரமபாகு உள் அறையிலிருந்து வெளியேறியபடியே கேட்டார்.*

*“ஆம் பிரபு.........” தமிழிந்தன் வணங்கியபடி கூறினான்.*

*மன்னரும் பேரனும் புறப்படுவதற்கு புரவியில் ஏறிக்கொண்டார்கள்.*

“தாத்தா யார் இந்த தமிழிந்தன்?”

“தமிழிந்தன் கம்போடிய இளவரசன். தற்போதைய கெமர் சாம்ராஜ்ய மன்னன் ஏழாம் ஜெயவர்மனின் மகன்.” [05-03]

“என்ன.......??! நான் கம்போடிய இளவரசனுடனா கதைத்துக் கொண்டிருந்தேன்?” பேரன் அதிர்ந்துபோனான். தற்போதைய கம்போடிய மன்னனின் மகன் தமிழிந்தன், இலங்கையில் தேரவாத பௌத்தம் கற்கிறார் என்பதை அவனால் நம்பமுடியவில்லை.

‘கம்போடியவாசிகளுக்கென்று பிரத்தியேக தெரு ஒன்று இலங்கைத் தலைநகரில் உள்ளது. கெமர் கட்டடக்கலையில் அமைந்த கட்டடம் பொலன்னறுவையில் கட்டப்படுகிறது. கம்போடிய இளவரசனும், இந்து சமயக்கோயிலான ‘அங்கோர் வாட்’டை பௌத்த கோயிலாக மாற்றும் கம்போடிய-கெமர் சக்கரவர்த்தி ஏழாம் ஜெயவர்மனின் மகனுமான தமிழிந்தன் பல ஆண்டுகளாக இலங்கையில் தேரவாத பௌத்தம் கற்று வருகிறார்’ இவையனைத்தும் பேரனுக்கு வியப்பின்மேல் வியப்பைக் கொடுத்தன.

“தாத்தா, நான் ‘அங்கோர் வாட்’ கோயிலைப் பார்க்க விரும்பு கிறேன்”

மன்னர் பராக்கிரமபாகு வியப்புடன் பேரனைப் பார்த்தார்.

“ஒரு சில தினங்களில் கெமர் சாம்ராஜ்யத்திக்கு (கம்போடியா) செய்தி கொண்டுசெல்ல ஒருவரை அனுப்ப உத்தேசித்துள்ளேன். உன் தாய் தந்தையர் சம்மதித்தால் நீயும் செல்லலாம்.”

“என்ன செய்தி தாத்தா?”

“எனக்கு வயதாகி விட்டது. இன்னும் ஓரிரு ஆண்டுகளில் என்காலம் முடிந்துவிடும். எனக்கு ஆண் வாரிசு இல்லாததால், ஆட்சிப் பீடத்திற்கான பிரச்சினைகள் எழும். ஆகவே கெமர் சாம்ராஜ்யத்தில் உள்ள என் மருமக்கள் விஜயபாகு (இரண்டாம்) அல்லது நிஸ்ஸங்க மல்லனை இலங்கை மன்னனாக்க உத்தேசித்துள்ளேன்.” மன்னர் நீண்ட சிந்தனையில் ஆழ்ந்தபடி கூறிக்கொண்டிருந்தார். பேரனோ காதில் வாங்கிக்கொள்ளாமல் அங்கோர் கோயிலுக்கு தான் செல் வதைப்பற்றிய கனவில் மூழ்கிவிட்டான்.

பராக்கிரமபாகு எண்ணியபடி, அவருக்குப்பின் கெமர் சாம்ராஜ்யத் தோன்றலான கவிஞனும் சிறந்த அறிவாளியுமான **பண்டித விஜயபாகு** என்று போற்றப்படும் இரண்டாம் விஜயபாகு கி.பி. 1286ல் ஆட்சிக்கு வந்தான். ஒராண்டு காலமே அவனால் ஆட்சிபுரிய முடிந்தது. [05-05]. அதன்பின்னர் **6ம் மஹிந்தன் 5** நாட்களே ஆட்சிபுரிந்தான். இவனைத் தொடர்ந்து **நிஸ்ஸங்கமல்லன் 9** ஆண்டுகள் (1287-1296) இலங்கையைச்



விஷ்ணு சிலை – 'அங்கோர்'

சிறப்பாக ஆட்சி புரிந்தான். இலங்கை மன்னர்களில் அதிக கல்வெட்டுக்களைப் பொறித்த மன்னனாக ஸ்ரீ நிஸ்ஸங்கமல்லன் கணிக்கப்படுகிறான். [05-06].

பார்வதி மகாதேவி, ஸ்ரீ ஜெயகோப ராஜா ஆகியோரின் மகனான நிஸ்ஸங்கமல்லன், கெமர் சாம்ராஜ்யத்திலிருந்து இலங்கை வந்து சிறப்பாக ஆட்சிசெய்தானென்று அண்மைய ஆராய்ச்சியொன்றில் **மெண்டிஸ் ரோகனதீர** (Mendis Rohana deera – 1998- page 38) கூறுகிறார். [05-03]

ஆக, இலங்கைக்கும் கம்போடியாவிற்குமிடையில் மிக நெருங்கிய சமய, அரசியல், கலை, கலாசார தொடர்புகள் காணப்பட்டுள்ளன.

❍ ❍ ❍

## கி.பி. 2011 – கம்போடியா

அங்கோர் உலகப் பெருங்கோயில் மூன்று தளங்களாகக் கட்டப்பட்டுள்ளது. முதலாம் தளத்தில் அவதாரச் சிற்பங்களைப் பார்த்துக் களைத்த நானும் மனைவியும், மகனுடன் இரண்டாம் தளத்திற்குள் நுழைந்தோம். முதலாம் தளத்தைவிட இரண்டாம் தளத்தின் சுற்றளவு குறைவாகக் காணப்பட்டது.

இரண்டாம் தளத்தை அடைந்தவுடன் அங்கு விசாலமான மண்டபம் காணப்பட்டது. அதை **'ஆயிரம் புத்தரின் மண்டபம்'**



**புத்தர் சிலை – 'அங்கோர்'**

*(Hall of 1000 Buddhas) என்று அழைத்தார்கள். புத்தரின் ஆயிரம் சிலைகள் இருந்த தாகக் கருதப்படுகின்றது. [05-07]*

*கி.பி. **1150**ல் இரண்டாம் சூரியவர்மன் இறந்த பின்னர் கம்போடியாவை ஆண்ட பல மன்னர்கள் அங்கோர் உலகப்பெருங்கோயிலில் மாற்றங்களைச் செய்துள்ளார்கள். அதில் மிக முக்கிய மானவன் ஏழாம் ஜெயவர்மன். இவன்தான் தன் மகனான தமிழிந்தனை இலங்கைக்கு அனுப்பி தேரவாத பௌத்தம் கற்கும்படி செய்தவன்.*

*"அப்பா......., இங்கே பாருங்கள் கிருஷ்ணர், புத்தரைப் போன்று தியானம் செய்கின்றார்" என்று மனைவி வியப்பு மேலோங்க என்னை அழைத்தாள். அந்தச் சிலையைப் பார்த்த நானும் வியப்படைந்தேன்.*

*அங்கோரில் இருந்த பிரதான விஷ்ணு சிலையின் முக அமைப்பைப் போன்றே மனைவி காட்டிய சிலையின் முகமும் இருந்தது. வியப்பூட்டும் விடயமென்னவென்றால் புத்தபகவான், ஐந்து தலை நாகம் ஆதிசேஷனின் கீழ் அமர்ந்து தியானித்தவண்ணம் இருந்தார். ஏழாம் ஜெயவர்மன் கம்போடியாவை இந்து தர்மத்திலிருந்து பௌத்த தர்மத்திற்கு நோகாமல் மாற்றிய சாணக்கியம் அந்தச் சிலையில் தெரிந்தது!*

*'ஆயிரம் புத்தரின் மண்டபம்' என்ற பெயர் கொண்டபோதிலும் சில புத்த சிலைகள் மாத்திரமே அங்கு காணப்பட்டன. பாதுகாப்புக் கருதி ஏனையவற்றை அகற்றி விட்டதாக அங்கிருந்தவர்கள் கூறினார்கள்.*

விஷ்ணு-புத்தரின் சிலையை இரசித்து திரும்பிய நான் அருகில் நின்று கொண்டிருந்த மகனைத் தேடினேன். அவனைக் காண வில்லை. ஒருகணம் நாமிருவரும் திகைத்துப்போனோம். சற்றுத் தூரத்தில் சைனா - ஜப்பான் பெரியவர் ஒருவர் மகனைத் தூக்கி வைத்திருந்தார். வழமைபோல், மகன் 'கமெரா'விற்கு 'போஸ்' கொடுத்துக்கொண்டிருந்தான்! பின்னர் நாங்களும் அவரைப் புகைப் படம் எடுத்தோம்.

களைப்படைந்த நானும் மனைவியும் இரண்டாம் தளத்தில் அமர்ந்துகொண்டோம். மூன்றாம் தளத்திலுள்ள ஐந்து கோபுரங்களும் வானை நோக்கி வளர்ந்திருந்தன.

அங்கோர் உலகப் பெருங்கோயில் இந்து மதத்தில் கூறப்படும் **மேரு மலை**யின் பிரதிபலிப்பாகக் கட்டப்பட்டுள்ளது. அங்கோர் மூன்று தளங்களாகவும் மூன்றாம் தளத்தில் ஐந்து கோபுரங்கள் அமையவும் இதுவே காரணமென்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். மேரு மலையானது இந்தப் பிரபஞ்சத்தின் மத்திய புள்ளியாகக் கருதப் படுகிறது. இந்து மதத்தின்படி தேவ அசுரர்கள் திருப்பாற்கடலை கடையும்போது மத்தாக மேருமலையைப் பயன்படுத்தினார்கள் என்பது புராணம் கூறும் வரலாறு. [05-08]

மேருமலையின் அமைவிடத்தை பலர் பல்வேறாகக் கருதுகின் றார்கள். ஒரு சிலர் மேருமலையானது குமரிக்கண்டத்தில் (லெமூரியாக் கண்டத்தில்) அமைந்திருந்ததாகக் கருதுகிறார்கள் [05-09].

"அப்பா 'அங்கோர் வாட்' இந்துக் கோயிலா அல்லது பௌத்த கோயிலா?" குழம்பிய மனைவி என்னைக் கேட்டாள்.

"இந்துக்கோயிலாகக் கட்டப்பட்டு, பின்னர் பௌத்த கோயிலாக ஏழாம் ஜெயவர்மனால் மாற்றப்பட்டது."

இன்றும், உலகத்திலேயே பெரிய கோயிலாக கம்போடியாவின் 'அங்கோர் வாட்' உள்ளது. இது இந்துக் கோயில். ஆனால் இன்று கம் போடியாவில் 95 சதவீதத்துக்கும் அதிகமானோர் தேரவாத (இலங்கை யிலிருந்து பரவிய) பௌத்தர்கள். அதேவேளை கம்போடியாவில் இன்று 0.1 சதவீதத்தினர்கூட இந்துக்கள் இல்லை!! [05-10]

எம்மவர்கள் எல்லாவற்றையும் தொடக்கிவைப்பதில் கெட்டிக் காரர்கள். ஆனால் நிலைநிறுத்தவோ..... சரிவர முடித்துவைக்கவோ தெரியாதவர்கள்!!!

"இலங்கை கதிர்காமக் கோயில் மாறியது போன்றா.........?" தொடர்ந்தாள் மனைவி.

"..............."

*"இந்து சமயத்திலிருந்து தோன்றியதல்லவா பௌத்த சமயம்?" மனைவி மேலும் கிளறினாள்.*

*"இந்து சமயம் போன்று, பௌத்தம் ஒரு சமயமன்று. முத்தி அடைவதில் பிறப்பின் நோக்கம் நிறைவேறாது என்கிறது பௌத்தம். நிர்வாணம் (முத்தி) அடைந்த பின்னரும் ஒருவர் இந்த உடலுடன் இப்பூவுலகில் வாழலாம். கௌதம புத்தர் நிர்வாணம் பெற்ற பின்னரும் 40 வருடங்கள் புவியில் வாழ்ந்தார்." [05-11]*



**'அங்கோர்' பிரதான விமானம் – இரண்டாம் தளத்திலிருந்து**

*“அது எப்படி முடியும்? முத்தி நிலைக்கு உடல் இடையூறாக அல்லவா இருக்கும்.” மனைவி விட்டபாடில்லை......*

*“தெரியவில்லையடி..........”*

*நான் மௌனம் பூண்டேன்.*

*மனைவியின் கேள்விக் ‘கிளறல்’ (முத்தி நிலை பற்றிய) எனக்கு பட்டினத்தாரை நினைவுபடுத்தியது!* ***பட்டினத்தார்*** *இறைவனைப் பார்த்து, முத்தியடைதல் பொருட்டு இந்தப் பூதவுடலிலிருந்து என்னை ஆட்கொண்டருள். அதுவே உனது அருளிற்கும் அழகு [05-12] என்று கதறும் வரிகள் என் காதில் ஒலித்துக்கொண்டிருந்தன.*

**சலமலப் பேழை இருவினைப் பெட்டகம்**

**......**

**ஊத்தைப் புன்றோல் உதிரக் கட்டளை**

**நாற்றப் பாண்டம் நான்முழத் தொன்பது**

**.....**

**ஓயா நோய்க்கிடம் ஓடு மரக்கலம்**

**மாயா விகாரம் மரணப் பஞ்சரம்**

**.....**

**காமக் கனலிற் கருகுஞ் சருகு**

**கிருமி கிண்டுங் கிழங்கஞ் சருமி**

**.....**

**நீரிற் குமிழி நீர்மே லெழுத்து**

**.....**

**ஆண்டுகொண்டருள் நின் அருளினுக் கழகே.**

❍ ❍ ❍

---


[5-01] - Epigraphia Zeylanica 2- Vol II - Wickremasinghe, Don Martino De Zilva.
[5-02] - Polonaruva-Medieval period capital of Sri Lanka-Anuradha Seneviratna-1998
[5-03] - Sri Lanka-Cambodia Relations with Special Reference to the Period 14th-20th Centuries by Dr. Hema Goonatilake - Journal of the Royal Asiatic Society of Sri Lanka.
[5-04] - http://www.cambodianview.com/buddhist-history.htm
[5-05] - இலங்கைச் சுருக்க வரலாறு (2008) - க. குணராசா, கமலா குணராசா.
[5-06] - http://wikipedia.org/wiki/Nissanka_Malla of Polonnaruwa
[5-07] - “Ancient Angkor” (2011) - Michael Freeman & Claude Jacquse
[5-08] - http://en.wikipedia.org/weiki/Mount_Meru
[5-09] - http://en.wikipedia.org/wiki/Lemuria_%28continent%29.
[5-10] - http://en.wikipedia.org/wiki/Cambodia
[5-11] - இந்திய தத்துவஞானம்
[5-12] - பட்டினத்தார் பாடல்கள்

# 6 தஞ்சைப் பெரியகோயிலை உயரத்தில் விஞ்சிய ‘அங்கோர்’ உலகப்பெருங்கோயில்

## கி.பி. 2006 – கங்கை கொண்ட சோழபுரம் (இந்தியா)

*உலகத்தில் எங்கெல்லாம் பெருங்கோயில்கள் இருக்கின்றனவோ அவற்றைப் பற்றி அறிந்துகொள்வதில் எனக்கு நீண்ட காலமாகவே ஓர் ஆர்வம். வானளாவி நீண்டு நிமிர்ந்து நிற்கும் அவற்றைப் பார்த்து நான் பிரமித்துள்ளேன். அவற்றில் உலாவரும் போது, அவற்றைக் கட்டியவர்களை நினைத்து வியந்துள்ளேன். அவர்களுடன் மானசீக மாக அளவளாவியுள்ளேன்.*

*2006 இல்......*

*அப்போது எனக்குத் திருமணம் நடந்திருக்கவில்லை.*

*அவளை நான் பார்த்தது, கங்கை கொண்ட சோழபுரத்திலேதான். தமிழரின் பெண் பார்க்கும் சம்பிரதாயத்தைப்போன்று என்முன்னால் அவள் இருந்தாள். அவள் முன்னால் நான் இருந்தேன்.*

*நான் அவளைப் பார்த்தேன். அவளும் என்னைப் பார்த்திருக்க வேண்டும்!*

***திரிகூடராசப்பக் கவிராயரவர்கள்** முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றிய **திருக்குற்றாலக் குறவஞ்சி**யில் கதாநாயகியான வசந்தவல்லியை வர்ணிக்கும்போது...*

**ஒல்லுங் கருத்தர்மனக் கல்லுஞ் சுழிக்கும் எழில் மீதில் உந்தியாள்.**
**ஒழுங்கு கொண்டுளத்தை விழுங்கு சிறியரோம பந்தியாள்.**

*என்கிறார். இறைவன் பற்றியே எண்ணமுடைய முனிவர்களின் கல்லைப் போன்ற உள்ளத்தையும் மாற்றக்கூடிய அழகான வயிற்றை*

உடையவள். அந்த வயிற்றில் மேலிருந்து கீழாக கோடுபோன்று அழகாக அமைந்த உரோம ஒழுக்கை உடையவள், என்று பாடியுள்ளார். இறைவனைக் கதாநாயகனாகக் கொண்ட இந்நூல், இனிய சந்த அமைப்புகளோடு கூடிய எளிய சொற்களால் ஆக்கப்பட்டது. இந் நூலின் கவித்திறத்தின் சிறப்பால் சென்னைப் பல்கலைக்கழகத்தின் வித்துவான் தேர்வுக்குப் பாடநூலாக அமைந்திருந்தது.[06-01]

திரிகூடராசப்பக் கவிராயரவர்களின் வர்ணனை என்மனதில் வட்ட மிட, கங்கை கொண்ட சோழபுரத்தில் நானும் அவள் வயிற்றைக் கூர்ந்து பார்த்தேன். தாராள மனத்தினள் என் ஆராய்ச்சியை ஆட் சேபிக்கவில்லை, இடம்கொடுத்தாள்!

அவளின் உந்தியல், பெண்ணுக்குரிய நெளிவு சுழிவுகளும் உரோம ஒழுக்கிற்கான வெட்டுகளும் தெளிவாகத் தெரிந்தன. நல்லவேளை அங்கு நான் தனித்துச் சென்றிருந்தேன். கூட்டத்துடன் சென்றிருந்தால் அவளை இப்படியெல்லாம் நான் ஆராய்ந்திருக்க முடியாது!

**இராஜராஜ சோழன்** கட்டிய **தஞ்சைப் பெரிய கோயி**லில் ஆண்மையின் மிடுக்கும் வீரமும் பொங்கி வழிகிறது என்றால், அவன் மைந்தன் **இராஜேந்திர சோழன்** கட்டிய **கங்கை கொண்ட சோழீச்சரக் கோயிலி**ல் பெண் மையின் மென்மையும் அழகும் உள்ளத்தைக் கவரும். தஞ்சைக் கோயிலின் வீரத்தன்மைகளும், ஆண்களுக்குரிய கம்பீரமும் கங்கை கொண்ட சோழீச்சரத்தில் இல்லை. ஆனால், கங்கை கொண்ட சோழீச்சரத்திற்கேயெனத் தனித்த சில கவர்ச்சிகள் அமைந்துள்ளன. ஒரு பெண்ணின் அழகு, எவ்வாறு அவளைப் பார்ப்பவர் உள்ளங்களைச் சுண்டி இழுக்கின்றதோ அத்தகையதாக அமைந்திருந்தது, கங்கை கொண்ட சோழீச்சரம்.

தஞ்சைக் கோயிலின் விமானத்தின் அமைப்பு நேர் கோடுகளைப் போன்றது. ஆனால், கங்கை கொண்ட சோழீச்சரத்தில், ஒரு பெண் ணுக்குரிய நெளிவு சுழிவுகள் விமானத்தில் பிரதிபலிக்கும். கோயில் விமானத்தின் கோணங்களின், உட்குழிவான வரைவுகளிலும் அதன் பக்கங்களிலும், நெளிவுக் கோடுகள் இடப்பட்டு ஒரு பெண் ணுக்குரிய நெளிவு சுழிவுகளைப் படைத்து பெண்ணியல்பை ஊட்டியுள்ளான் இராஜேந்திர சோழன். விமானத்தின் உச்சி அழகு படுத்தப்பட்டிருப்பது, அது பெண்கள் சீவிச் சிங்காரிப்பது போன்று அமைந்திருக்கும். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது முற்றிலும் பருவம் அடைந்த பெண்ணின் அழகை, கங்கை கொண்ட சோழீச் சரத்தின் படைப்பில் நுகரலாம். [06-02]

நான் பார்த்து மயங்கிய பல பெண்களில் அவளும் ஒருத்தி!

"பெண்கள் பற்றி அதிக பரிச்சயமோ?" என்று நீங்கள் என்னைப் பார்த்துப் புருவம் உயர்த்துவது தெரிகிறது. இது தமிழனுக்கேயுரிய இரசனையல்லவா...

தஞ்சைப் பெருங்கோயிலை இராஜராஜ பெருஞ்சோழன் கி.பி. 1009 ஆண்டளவில் கட்டிமுடித்தான் என்றும், அவன் மகன் இராஜேந்திர சோழன் இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் கி.பி. 1030ஆம் ஆண்டில்



**கங்கை கொண்ட சோழீச்சரம் – 182 அடி உயர விமானம்**



**தஞ்சைப் பெரிய கோயில்**
**211 1/2 அடி உயர விமானம்**

கங்கை கொண்ட சோழீச்சரத்தைக் கட்டினான் என்றும் வரலாறு கூறுகின்றது. [06-03]

தந்தை கட்டிய தஞ்சைக் கோயிலைப் போன்று தனயன் கட்டிய கங்கை கொண்ட சோழீச்சரம் சாமான்னிய மக்கள் மத்தியில் பிரபல்யம் பெறவில்லை. அதற்குப் பிரதான காரணம் கோயிலின் விமானத்தின் உயரமென்றே கூறவேண்டும்.

எல்லாக் கோயில்களின் வாசல்களிலும், **கோபுரம்** அமைந்திருக்கும். சாதாரணமாக கோபுரம்தான் கோயிலின் உயரமான அங்கமாகக் காணப்படும். 2008இல் இந்தியாவின் கன்னடா மாநிலத்தில் கட்டப் பட்ட **முருதேஸ்வரன்** (Murudeshwara) கோயில் 249 அடி கோபுரத்தைக் கொண்டு, இந்துசமயக் கோயில்களில், 'உலகத்தின் அதியுயர் கோபுரம்' என்ற பெருமையை இன்றுவரை (2012) தனதாக்கியுள்ளது [06-04].

கோயிலின் மத்தியிலுள்ள கர்ப்பகிரக மூலமூர்த்திக்கு மேலாக அமைவது **விமானம்**. இராஜராஜ சோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில், அவன் மகன் இராஜேந்திர சோழன் கட்டிய கங்கை கொண்ட சோழீச்சரம் போன்ற கோயில்களில் வழமைக்கு மாறாக, விமானம் கோபுரத்திலும் உயரமானது. இவையிரண்டும் சிவன் கோயில்கள். வரலாற்று ஆசிரியர்களில் அனேகர் தஞ்சைப் பெரிய கோயிலின் விமானத்தின் உயரத்தை 216 அடியாக 'உயர்த்தி'க், கூறி வருகிறார்கள். தஞ்சைக் கோயிலைக் கட்டிய பின்னரே கங்கை கொண்ட சோழீச்சரம் கட்டப்பட்டாலும், அதன் விமானத்தின் உயரம் 182 அடி மட்டுமே. [06-05] இராஜேந்திர சோழன், தஞ்சைக்கோயிலின் விமானத்தின் உயரத்தை விஞ்சிக் கட்டவில்லை. விமானத்தின் உயரம் குறைவென்றாலும், கங்கை கொண்ட சோழீச்சரம், தஞ்சைப் பெரிய கோயிலைவிட அனைத்து அம்சங்களிலும் விஞ்சி நிற்பதை பலர் வலியுறுத்தியுள்ளமை கவனிக்கப்படவேண்டிய விடயம். [06-03].

மூலமூர்த்தியை ஒப்பிட்டால், தஞ்சைக் கோயிலில் சிவலிங்கத்தின் உயரம் 12 அடி 10 அங்குலமும் ஆவுடையாரின் சுற்றளவு 55 அடி யாகவும் அமையுமிடத்து, கங்கை கொண்ட சோழீச்சரத்தில் சிவ லிங்கத்தின் உயரம் பதின்மூன்றரையடியும் (13 ½) ஆவுடையாரின் சுற்றளவு 60 அடியாகவும் அமையப் பெற்றுள்ளது. [06-06] சாதா ரணமாகக் கோயில் கட்டி முடித்த பின்னரே மூலவரைப் பிரதிஷ்டை செய்வார்கள். ஆனால் மூலவரின் பிரமாண்டத்தின் காரணமாக தஞ்சைப் பெரிய கோயிலைப் போன்று கங்கை கொண்ட சோழீச் சரத்திலும் சிவலிங்கத்தைக் கர்ப்பகிரகத்தினுள் வைத்த பின்னரே விமானத்தைக் கட்டினார்கள். இது மிக மிகச் சிரமமான பணி.




**முருதேஸ்வர கோயில் – 214.8 அடி உயர கோபுரம்**

விமானத்தை மூலமூர்த்திக்கு மேலே கட்டும்போது ஒரு சிறிய கல்லேனும் மூலவர் மேல் விழுந்துவிடக்கூடாது.

தஞ்சைப் பெரிய கோயிலிலுள்ளதுபோன்றே கங்கை கொண்ட சோழீச்சரத்தின் விமானத்திலும் சிற்பங்கள் அமையப்பெற்றுள்ளன. ஆனால் கலைநுட்பத்தில் தஞ்சைக் கோயிலைவிட இவை விஞ்சி

நிற்கின்றன. இரு கோயில்களின் விமானங்களிலும் நடராஜப் பெருமானின் சிலை,

**தடுப்ப தொருகரம் கொடுப்ப தொருகரம்**
**தரித்த சுடர்மழு விரித்த தொருகரம்**
**எடுத்த சிறுமறி பிடித்த தொருகரம்**
**இலங்கப் பணியணி துலங்கவே.**

–திருக்குற்றாலக் குறவஞ்சி

என்பதற்கமைய கம்பீரமாக அமையப்பெற்றிருக்கும். ஆனால், கங்கை கொண்ட சோழீச்சரத்தின் நடராஜ சிலையில் ஓர் அற்புதம் படைக்கப்பட்டிருந்தது. நடராஜப் பெருமானின் ‘எடுத்த பொற்பாதம்’ சற்று அகலமாகவும் நடுவில் ஒரு வெட்டும் காணப்படும். நடராஜர் மிக வேகமாக காலைத் தூக்கி நடனமாடுகிறாராம். வேகமாக நகரும் காலின் இரு வேறுநிலைகளை (frame by frame) வெட்டின்மூலம் பிரித்துச் செதுக்கியிருந்தார்கள். அற்புதம்..! அற்புதம்...!!

இராஜேந்திர சோழன் கட்டிய கங்கை கொண்ட சோழீச்சரக் கோயில் கட்டடக் கலையின் சிறந்த சாதனை எனலாம்.

இத்தகைய சிறந்த கோயிலைக் கட்டிமுடித்த இராஜேந்திர சோழன், தன் தந்தை கட்டிய கோயிலைவிட தான் உயரமாகக் கட்டக்கூடாது, என்று 182 அடி உயரமான விமானத்துடன் நிறுத்தி, பண்பாட்டில் உயர்ந்து நிற்கின்றான்.


இதுவல்லவா தமிழன் பண்பாடு!

❍ ❍ ❍

தமிழர் பண்பாடு இப்படியிருக்க, மேற்குலகத்தின் பண்பாடோ வேறுமாதிரி இருந்தது. ‘யார் உலகத்திலே உயரமான வழிபாட்டுத் தலத்தைக் கட்டுவது?’ என்ற போட்டி காலாகாலமாகத் தொடர்ந்து கொண்டே இருந்தது.

‘உலகத்தின் உயரமான வழிபாட்டுத்தலம்’ என்ற பெருமையை, இலங்கையில் அமைந்துள்ள **ஜேதவனராமய தூபி** ஆயிரம் ஆண்டு களுக்கும் மேலாக தனதாக்கியிருந்தது. மகாசேன(ன்) மன்னன் (கி.பி. 273 - 301), ஜேதவனராமய தூபியை 400 அடி உயரமாகக் கட்டியிருந்தான். [06-07]

சரித்திரத் தரவுகளின்படி, ஜேதவனராமய தூபியின் பின்னர், கி.பி. 1311 இல், இங்கிலாந்தில் Lincoln Cathedral எனும் கத்தோலிக்க தேவாலயம், 524 அடி உயரத்துடன் கட்டப்பட்டு ‘உயரமான




**நடராஜர் 'எடுத்த பொற் பாதம்' – கங்கை கொண்ட சோழீச்சரம்**

*வழிபாட்டுத்தலம்' எனும் பெருமையைத் தனதாக்கியது. Lincoln Cathedral தேவாலயத்தின் முக்கிய சிறப்பம்சம், கி.மு. 2560 இல் கட்டிய கீஷா பிரமிட்டின் உயரத்தை (480 அடி) முதன்முறையாக விஞ்சிக்கட்டிய கட்டடமாக (3,800 ஆண்டுகளுக்குப் பின்னர்) அமையப்பெற்றதாகும். ஆக, 'உலகத்தின் உயரமான வழிபாட்டுத்தலம்' எனும் பெருமையை மட்டுமன்றி 'உலகத்தின் உயரமான கட்டடம்' என்ற பெருமையையும் இது தனதாக்கிக்கொண்டது.*

வரலாற்றுக் குறிப்புகளின்படி கீஷா பிரமிட்டிற்குப் பின்னர், 1311 ஆம் ஆண்டு தொடங்கி 1884ஆம் ஆண்டுவரை 'உலகத்தில் உயரமான கட்டடம்' என்ற போட்டியில் இடம் வகித்தவை வழிபாட்டுத்தலங்களே, என்பது குறிப்பிடத்தக்க விடயம். அவையாவன... [06-08]

(1) 1311 தொடங்கி 1549 வரை — மேலே குறிப்பிட்ட 524 அடி உயரத்துடன் அமைந்த இங்கிலாந்தின் Lincoln Cathedral கத்தோலிக்க தேவாலயம். இடிவடைந்தபின் தற்போதைய உயரம் 271 அடி. இதன்பின்,

(2) 1549 தொடங்கி 1625 வரை - 521 அடி உயரத்துடன் வட ஐரோப்பா ஈஸ்டானியா (Estonia) நாட்டிலமைந்த St. Olaf கத்தோலிக்க தேவாலயம். பல தடவைகள் மின்னலினால் தாக்குண்ட St. Olaf தேவாலயம் 1625ல் பலத்த மின்னலில் தாக்குண்டு சிதைவடைந்தது! இதற்கடுத்து,

(3) 1625 தொடங்கி 1647 வரை - 495 அடி உயரத்துடன் ஜேர்மனியில் அமைந்த St. Mary's Church கத்தோலிக்க தேவாலயம். இதுவும் 1647இல் மின்னலில் தாக்குண்டது. அடுத்ததாக,

(4) 1647 தொடங்கி 1874 வரை - 466 அடி உயரத்துடன் பிரான்சில் அமைந்த Strasbourg Cathedral கத்தோலிக்க தேவாலயம். தொடர்ந்து,

(5) 1874 தொடங்கி 1876 வரை - 483 அடி உயரத்துடன் ஜேர்மனியில் அமைந்த St. Nikolai Hamburg கத்தோலிக்க தேவாலயம். 1943இல் இரண்டாம் உலகமகா யுத்தத்தில் குண்டுத் தாக்குதலில் சிதைந்து போனது. இதனைத் தொடர்ந்து,

(6) 1876 தொடங்கி 1880 வரை - 495 அடி உயரத்துடன் பிரான்ஸில் அமைந்த Rouen Cathedral கத்தோலிக்க தேவாலயம்.

இறுதியாக,

(7) 1880 தொடங்கி 1884 வரை - 516 அடிகளுடன் ஜேர்மனியில் அமைந்த Cologne Cathedral கத்தோலிக்க தேவாலயம் 'உலகத்தில் உயரமான கட்டடம்' என்ற பெருமையை தனதாக்கியிருந்தது. Cologne Cathedral கத்தோலிக்கத் தேவாலயத்தை அடுத்து எந்தவொரு வழிபாட்டுத்தலமும் 'உலகத்தின் உயரமான கட்டடம்' என்ற தகுதியை இன்றுவரை சரித்திரத்தில் பெறமுடியவில்லை!!

ஆசை என்னை விட்டுவைக்கவில்லை. 2009 செப்டெம்பர் மாதம் ஜேர்மனியின் இந்த Cologne Cathedral தேவாலயத்தைப் பார்க்கச் சென்றிருந்தேன். அதன் உயரத்தை வார்த்தையால் வடிக்கமுடியாது. சுலபமாகச் சொல்வதென்றால் என் 'கமெரா'வினால் அதனை

உள்ளடக்க முடியவில்லை. தேவாலயத்தின் முன்னால் அமர்ந்து பல மணித்தியாலங்கள்பார்த்து ஜீரணிக்க முயன்று, தோற்றேன்.



**Cologne Cathedral – 51G அடி (ஜேர்மனி) முன்னால் கட்டுரையாசிரியர்**

Cologne Cathedral தேவாலயத்தின் பின்னர் மனிதர்களின் மனங்கள் வழிபாட்டுத் தலங்களைவிட்டு விலகி 'விரிவடைய'த் தொடங்கின. 1884இல் அமெரிக்காவில் 555 அடி உயரத்துடன் கட்டப்பட்ட Washington Monument, அடுத்து 1889ல் முதன்முறையாக 1000 அடிகளைத் தொட்ட பிரான்சின் Eiffel Tower (1050 அடி) என்று போட்டி வேறுதிசையில் சென்றது. இவ்வாறாக 2010இல் துபாயில் 2723 அடி உயரமாகக் கட்டப்பட்ட Burj Khalifa கட்டடமானது இன்று (2012) 'உலகத்தின் உயரமான கட்டடம்' எனும் 'பெருமை'யைத் தாங்குகிறது. இந்தக் கட்டடத்திலேதான் உலகத்திலேயே அதியுயரத்தில் அமைந்த (144 ஆம் மாடியில்) 'நைற் கிளப்' எனப்படும் இரவுக் கேளிக்கை விடுதியும் உள்ளதாம்!! [06-09]

1884 வரை 'உலகத்தின் உயரமான கட்டடம்', 'உலகத்தின் உயரமான வழிபாட்டுத்தலம்' என்ற இரு பெரும் பெருமைகளைக் கொண்டிருந்த Cologne Cathedral கத்தோலிக்கத் தேவாலயம் இன்றுள்ள (2012) 'உயரமான வழிபாட்டுத்தலங்'களின் வரிசையில் மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. 1989 இல் மேற்கு ஆப்பிரிக்க நாடான Ivory Coast இல் அமைக்கப்பட்ட Our Lady of Peace Basilica தேவாலயம் 518 அடி உயரத்துடன் இரண்டாம் இடத்திலும் 1890 இல் ஜேர்மனியில் அமைக்கப்பட்ட Ulm Minster தேவாலயம் 530 அடி உயரத்துடன் முதலாம் இடத்திலும் உள்ளன. [06-08]



Eiffel Tower **(பிரான்ஸ்) – உலகில் 1000 அடி உயரத்தைத் தாண்டிய முதலாவது கட்டிடம் (1050 அடி) முன்னால் கட்டுரையாசிரியர்**

ஆக, ‘உலகத்தின் உயர மான வழிபாட்டுத்தலம்’ எனும் பெருமையை ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தன்னகத்தே வைத்திருந்த ஒரே வழி பாட்டுத்தலம் ஈழத்தில் அமைந்த ஜேதவனராமய தூபியே ஆகும். இனிவரும் காலத்திலும் எந்தவொரு வழிபாட்டுத்தலமும் இத்தகைய பெருமையைப் பெறுவது கடினம் என்றே கருதலாம். இலங்கைய ராகிய நாம் உலகத்தின் கட்டடக் கலையில் முன் னோடியாகத் திகழ்ந்துள் ளோம் என்பது, கர்வம் கொள்ளத்தக்க விடயமே.

❍ ❍ ❍

## கி.பி. 2011 – கம்போடியா

மூன்றாம் தளத்திலமைந்து விண்ணை ஊடுருவும் ‘அங்கோர் வாட்’ கோயிலின் விமானங்களை, இரண்டாம் தளத்திலிருந்து நாம் பார்த்தோம். ‘கெமர்’ கட்டடக் கலையமைப்பில் கோபுரத்திற்கும் விமானத்திற்குமிடையில் அதிகவேறுபாடு இருப்பதாகத் தெரிய வில்லை. கோயிலின் வாசலிலமைந்துள்ள கோபுரமும் மூல மூர்த்திக்கு மேலேயமைந்துள்ள விமானமும் ஒரே வடிவத்தில் அமைக் கப்பட்டிருந்தன.

மூன்றாம் தளத்தில் ஐந்து விமானங்கள் / கோபுரங்கள் அமைந் திருந்தன. நடுவில் உள்ள விமானம் ஏனைய நான்கு விமானங்களிலும் பார்க்கச் சற்று உயரமாக அமைக்கப்பட்டிருந்தது.

“அப்பா…… இதன் உயரம் எவ்வளவு?”. மத்திய விமானத்தைப் பார்த்தவாறு மனைவி கேட்டாள்.

நான் கையிலிருந்த Michael Freeman எழுதிய ‘Ancient Angkor’ நூலைப் புரட்டி “இரண்டாம் தளத்திலிருந்து மத்திய விமானத்தின் உயரம் 141 அடி” என்றேன்.

“………”

மனைவி பிரமித்ததாகத் தெரியவில்லை.

“ஆனால் நிலமட்டத்திலிருந்து கணக்கிட்டால் 213 அடி உயரம் என்றேன்” [06-10]

“என்ன….!!?”

நான் எதிர்பார்த்த வியப்பை மனைவி காட்டினாள்.

“எங்க காட்டுங்க பாப்பம்….” வழமைபோல் என்னை நம்பாத மனைவி, நான் கையில் வைத்திருந்த புத்தகத்தைப் பறித்துப் பார்த்தாள்.

“நீங்கள் அடிக்கடி கூறும் தஞ்சைக் கோயிலைவிட அங்கோர் உயரமானதா?” மனைவி பிரச்சினையை எழுப்பிவிடும் கேள்வியைக் கேட்டாள்.

தஞ்சைக் கோயிலை நான் இருதடவைகள் சென்று பார்த்துள்ளேன். ஒவ்வொரு தடவையும் பல நாட்கள் கோயிலை வலம் வந்துள்ளேன். கோயில் சார்ந்த ஆராய்ச்சி நூல்களைப் படித்துள்ளேன். தஞ்சைக் கோயில் கட்டுவதை கருவாகக் கொண்டு **பாலகுமாரன்** எழுதிய 2500 பக்கங்களுக்கும் மேற்பட்ட **‘உடையார்’** நாவலை வாசித்துள்ளேன். மனைவியிடம் தஞ்சைக் கோயிலின் சிறப்புகளை அவ்வப்போது விபரித்துள்ளேன். அவள் ஞாபகம் வைத்து உரிய தருணத்தில் கேட்டாள்.

தஞ்சைக் கோயிலின் உயரம் 211 ½ அடியே!! The Chola Temples (Archaeological Survey of India), Sri Brihadisvara – The Great Temple of Thanjavur (A.K.Seshadri), போன்ற ஆராய்ச்சி நூல்களில் இதை உறுதிப் படுத்திக் கொள்ளலாம்.

“ஆம்”

தஞ்சைப் பெரிய கோயிலைவிட, அங்கோர் உலகப் பெருங்கோயில் உயரமானது என்ற உண்மையை மனைவிக்கு கூறினேன்.

“அப்படியா….. ஆனால் எல்லாரும் தஞ்சைப் பெரிய கோயிலைப் பற்றித்தானே பேசுகிறார்கள். எண்பது ‘தொன்’ பாரமான ஒரே கல்லை கோபுரத்திற்கு மேலே வைத்துள்ளார்களாமே?” மனைவி தனக்குத் தெரிந்ததை உறுதிப்படுத்திக்கொள்ளக் கேட்டாள்.



**நிலத்தில் விழும் தஞ்சைக் கோயில் விமானத்தின் நிழல்** [06-13]

*“தவறு.....விமானத்திற்கு மேலே ஏறி ஆராய்ந்த A.K. Seshadri போன்ற பல ஆராய்ச்சியாளர்கள், அது ஒரே கல் அல்ல என்பதை உறுதிப்படுத்தி புத்தகங்களில் எழுதியுள்ளார்கள்” [06-11]*

*“தஞ்சைக் கோயில் விமானத்தின் நிழல் கீழே நிலத்தில் விழாதாமே.....”*

*“அதுவும் தவறடி.. விமானத்தின் நிழல் கோயில் மதிலைத் தாண்டி வெளிப்புறத்திலும் விழுமாம்.”*

*“தஞ்சைக் கோயிலைத்தானே ‘பெரிய கோயில்’ என்று அழைக் கிறார்கள்.....?”*

“தஞ்சைக் கோயில் ஒரு மாபெரும் படைப்பு, அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால் அதன் பிரபல்யத்திற்காக சில மிகைப்படுத்தப்பட்ட செய்திகளும் பரவி உள்ளன.”

இதைச் சார்ந்த கேள்விகளை வளர்க்க விரும்பாத நான் மூன்றாம் தளத்திற்கு ஏறுவதற்கு ஆயத்தமானேன். அதன் படிகள் செங்குத்தாக அமைக்கப்பட்டிருந்தன. நான்கு புறங்களில் ஒருபுறத்தில் மாத்திரம் மற்றப் படிகளைவிட சற்று சாய்வாக, அதுவும் 50 பாகை சரிவில், படிகள் அமைக்கப்பட்டிருந்தன. அந்தப் படிகளைப் பாவித்துத்தான் மூன்றாம் தளத்திற்குச் செல்லவேண்டும். பலர் இரண்டாம் தளத்திலேயே தங்கிவிட்டார்கள். அவர்களுள் என் மனைவியும் மகனும் அடங்குவர். படியின் குத்தான சரிவின் காரணமாக பிள்ளைகளுடன் மேலே ஏறுவதற்கு அவர்கள் தடைவிதித்திருந்தார்கள். களைப்படைந்திருந்த என் மனைவிக்கு அது வசதியாக அமைந்தது.

“அப்பா மறக்காமல் அர்ச்சனை பண்ணிவிடுங்கோ...” மனைவி என்னை வழியனுப்பினாள்.

குத்தென அமைந்துள்ள படிகளின் இருபுறங்களிலும் கைபிடிக் கம்பிகள் போடப்பட்டிருந்தன. மெதுவாக நான் ஏறத்தொடங்கினேன். ஏறிச்சென்ற நான், மத்திய விமானத்திற்கு கீழ் அமைந்திருந்த மூலவரைக் கண்டேன். விஷ்ணு பகவானின் சிலை அகற்றப்பட்டு புத்த பகவானின் சிலை அவ்விடத்தை ஆக்கிரமித்திருந்தது.

**“மக்கள் ஆசைப்படக்கூடாது என்று புத்தன் ஆசைப்பட்டான்..”** என்று கவிஞனொருவன் எழுதிய கவிதைவரி என் மனதில் முட்டி மோதியது.

○ ○ ○

பின்னால் என் தோளை யாரோ தொடுவது போலிருந்தது. திரும்பிப் பார்த்தேன். நடிகர் திலகம் **சிவாஜி கணேசன்**...., மன்னிக்கவேண்டும் தஞ்சைக் கோயிலைக் கட்டிய இராஜராஜப் பெருஞ்சோழன் நின்றார். அவருக்குப் பின்னால் கங்கைகொண்ட சோழீச்சரத்தைக் கட்டிய இராஜேந்திர சோழனும், அங்கோரைக் கட்டிய இரண்டாம் சூரிய வர்மனும் நின்றனர்.

“இங்கேயும் வந்து விட்டாயா......?” இராஜராஜன் என்னிடம் கேட்டார்.

“மகாராஜா, அங்கோர் கோயில் என்னைக் காந்தம் போல் இழுத்து விட்டது, பார்க்க வந்தேன்.....” நான் அவர்கள் மூவரையும் வணங்கிய படி பதிலளித்தேன்.



**‘ஜகநாத்’ விஷ்ணு கோயில் –**
**214.8 அடி உயர விமானம்**

*“யார் இவன்?” சூரிய வர்மன் இராஜராஜனிடம் கேட்டார்.*

*“இவன் ஈழத்தவன். நாங்கள் கட்டிய கோயில்களெங்கும் திரிகிறான். இவன் திரிவது போதாதென்று, இப்போது மனைவியையும் மகனையும் இழுத்துக் கொண்டு இங்கே அங்கோருக்கும் வந்து விட்டான்....” இராஜராஜன் தனக்கேயுரிய புன்முறுவலுடன் கூறினார்.*

*அவர் பின்னால் நின்ற அவர் மகன் இராஜேந்திர சோழனும் அர்த்தத்துடன் முறுவலித்தார். அவரின் கங்கை கொண்ட சோழீச்சரத்தாளை, நான் பார்த்து ‘வழிந்ததை’ நினைத்துக் கொண்டாரோ என்னவோ... அவரின் சிரிப்பு எனக்கு அப்படித்தான் தெரிந்தது!*

*“பேரரசே, தாங்கள் கட்டிய தஞ்சையின் உயரமென்ன...?” இராஜராஜனை நான் கேட்டேன்.*

*“இந்திய தொல்பொருள் ஆராய்ச்சி நிலையம் கணித்துக் கூறியுள்ளார்களே..... நீ வாசித்ததில்லையா?”*

*“ஆம் அரசே, வாசித்துள்ளேன். அவர்கள் விமானத்தின் உயரத்தை **60.96** மீற்றர் என்றும், கலசத்தை **3.5** மீற்றர் என்றும், மொத்த உயரத்தை **64.46** மீற்றர் என்றும் கூறியுள்ளார்கள். அதாவது **211** ½ அடி உயரம்.” [06-05] [06-11]*

*“அதில் என்ன உனக்குச் சந்தேகம்?” இடைமறித்த இராஜராஜ சோழனின் மகன் இராஜேந்திர சோழன் கேட்டார்.*

*“சந்தேகம் இல்லை பிரபு. ஆனால் தங்கள் பேரனொருவனான **அனந்தவர்மன் சோதகங்க தேவன்** (Anantavarman Chodaganga Deva - 1077–1150), **‘ஜகநாத்’** என்று விஷ்ணுவிற்கு ஒரு கோயிலை இந்தியாவின் ஒரிசா மாநிலத்திலுள்ள பூரி எனும் இடத்தில் கட்டியுள்ளாராமே. **11**ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இந்தக் கோயிலின் விமானத்தின்*



**‘அங்கோர்’ விமானங்கள் – மத்திய விமானம் 213 அடி உயரம்**

*உயரம் 214.8 அடியாமே...?!” நான் இராஜேந்திர சோழனைப் பார்த்துக் கேட்டேன். [06-04] [06-12]*

*“ஆமாம், என் கொள்ளுப் பேரனான அனந்தவர்மன் சோதகங்க தேவன்தான் ‘ஜகநாத்’ கோயிலைக் கட்டியுள்ளான்” இராஜராஜன் தன் மீசையைப் பெருமிதத்துடன் வருடியவாறு கூறினார்.*

*வரலாற்று ஆசிரியர்களில் அனேகர், தஞ்சைப் பெரிய கோயிலின் விமானத்தின் உயரத்தை 216 அடியாக ‘உயர்த்தி’, உலகத்திலேயே உயரமான விமானத்தைக் கொண்டது என்ற பெருமையை தஞ்சைப் பெரிய கோயிலிற்குச் சூட்டியுள்ளார்கள்![06-04]. ஆனால் அதன் உயரம் 212 அடிகளைவிடக் குறைவானதே...*




**1973 இல் வெளியான ராஜ ராஜ சோழன் திரைப்படமானது, தமிழ் சினிமாவில் முதன் முதலாக சினிமாஸ்கோப்** (CinemaScope) **தொழில்நுட்பத்தில் அமைக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இத்திரைப்படத்தில் சின்னையாப்பிள்ளை கணேசன் எனப்படும் சிவாஜி கணேசன் ராஜ ராஜ சோழன் வேடம் ஏற்று நடித்தார்.**

*அங்கோரின் மூன்றாம் தளத்திலிருந்து ஜன்னலினூடாக கீழே நோக்கினேன். 'அங்கோர்வாட்'டின் உயரத்தையும் பிரமாண்டத்தையும் என்னால் உணரமுடிந்தது.*

*"இந்த அங்கோரின் உயரமென்ன??" என்று வினவியபடி, அவர்களை நான் திரும்பி பார்த்தேன்.*

*அவர்கள் மறைந்து விட்டார்கள்..*

❍ ❍ ❍

*நான் ஜன்னலினூடாக மீண்டும் வெளியே பார்த்தேன்...*

*'அங்கோர்' பரந்தும் விரிந்தும் உயர்ந்தும் இருந்தது.*

*பார்த்தேன்....*

*பார்த்துக்கொண்டே இருந்தேன்......*

*தஞ்சைப் பெரிய கோயிலை உயரத்தில் விஞ்சி நின்றது 'அங்கோர்' உலகப்பெருங்கோயில்....!!*

❍ ❍ ❍

---


[06-01]– *திருக்குற்றாலக் குறவஞ்சி - சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு - 1957*
[06-02] – http://en.wikipedia.org/wiki/Gangaikonda_Cholapuram
[06-03] – *தென்னிந்திய வரலாறு- நீலகண்ட சாஸ்த்திரி (1966) பக்கம் 553, 554*
[06-04] - http://en.wikipedia.org/wiki/List_of_tallest_Gopurams
[06-05] - The Chola Temples - 2004 (Archaeological Survey of India)
[06-06] - http://temple.dinamalar.com/New.php?id=451
[06-07] - http://en.wikipedia.org/wiki/Jetavanaramaya
[06-08] - http://en.wikipedia.org/wiki/List_of_tallest_churches_in_the_world
[06-09] - http://en.wikipedia.org/wiki/Burj_Khalifa
[06-10] - http://en.wikipedia.org/wiki/Angkor_Wat
[06-11] - Sri Brihadisvara – The Great Temple of Thanjavur (A.K. Seshadri)
[06-12] - http://en.wikipedia.org/wiki/Eastern_
Ganga_dynasty#Anantavarman_Chodaganga
[06-13] - http://poetryinstone.in/lang/en/2008/12/17/
does-the-tanjore-big-temple-vimana-cast-a-shadow.html

# 7 ‘அங்கோரி’ல் ஆயிரம் கோயில்கள் அழிந்துபட்ட வரலாறு....

### கி.பி. 2011 - கம்போடியா

‘அங்கோர்வாட்’ உலகப் பெருங்கோயிலைப் பார்த்துவிட்டு விடுதி அறைக்குத் திரும்பிய நாம், எங்கள் இரவு உணவை ‘ஹோட்ட’லின் அறையினுள் இருந்தபடியே அருந்தினோம். களைத்திருந்த மகன் உணவருந்திவிட்டு உறங்கிப்போனான்.

தோளில் ஒரு பையை மாட்டிக்கொண்டு, கிடைத்ததை உண்டு, கிடைத்தால் குளித்து, பார்த்த இடத்தில் படுத்து பயணித்துப் பழகி யிருந்த எனக்கு, இந்தப்பயணம் வித்தியாசமான அனுபவமாக இருந் தது. பயணத்தில் குடும்பத்தின் சுமையை நன்றாகவே உணர்ந்தேன்.

மனைவிக்கு நாக்கு மரத்துவிட்டது. கடந்த சில நாட்களாக தாய்லாந்திலும், தற்போது கம்போடியாவிலும் மரக்கறி உணவென்னும் போது இலை குழைகளை மனைவியின் முன்னால் படைத்து, அவளை வெறுப்பேற்றி பொறுமையின் எல்லைக்கே அழைத்துச் சென் றிருந்தார்கள். கரட், போஞ்சி, வெள்ளரி, சலாது, கீரை வகைகள் என்று பலவற்றைப் பச்சையாக வெட்டி வைத்திருப்பார்கள். உப்பு, மிளகு தனியாக வைக்கப்பட்டிருக்கும். நாம் உப்பு மிளகை தேவைக்கேற்றவாறு சேர்த்துக்கொள்ளலாம். யாழ்ப்பாணத்தின் வைதீகச் சூழலில் கூட்டு, அவியல், குழம்பு, ரசம், சாம்பார், வதக்கல், பொரியல், துவையல், மோர், ஊறுகாய் என்று பழகியவளுக்கு ஓரளவிற்குமேல் இவற்றைத் தாங்கிக்கொள்ளமுடியவில்லை. ‘அப்பா இந்த இலைகுழைகளைச் சாப்பிடுவது ஆடு மாடுகள் வேலியை

மேய்வதைப் போலிருக்கிறது' என்று வாய்விட்டே கூறிவிட்டாள். வீதி வீதியாக அலைந்து திரிந்து Curry Walla என்ற இந்திய உணவகம் ஒன்றைத் தேடிப்பிடித்து சாதம், சாம்பார், 'நாண்' போன்றவற்றை 'பார்சலா'க இரவு உணவிற்கு வாங்கிவந்திருந்தேன். மனைவி 'அமிர் தத்தை' உண்டபடியே கேட்டாள்...

"மோர், ஊறுகாய் ஏதும் இல்லையே அப்பா......?"

பதில் கூற விரும்பாத நான், நிமிர்ந்து பார்த்தேன். என் பார்வை யைப் புரிந்துகொண்ட மனைவி குனிந்து கொண்டு தொடர்ந்து உணவருந்தினாள்.

"நாளைக்கு நாங்கள் Kbal Spean பார்க்கப் போகிறோம்" என, எமது அடுத்தநாள் திட்டங்களை மனைவிக்கு விபரித்தேன்.

"அது என்னது..?"

"இன்னுமொரு கோயில், இங்கேயிருந்து 25 கிலோமீற்றர் தொலை வில் இருக்கிறது. காலையில் ஏழு மணிக்கே சாப்பிட்டுவிட்டு 'ரெடி' யாக இருக்கவேண்டும். 'கிரிஷ்' ஏழரைக்கு வந்திடுவார். இண்டைக்கு மாதிரி 'லேட்' ஆகக் கூடாது". நான் 'கிரிஷ்' என்பவரினூடாகவே எங்கள் கம்போடியப் பயண ஒழுங்குகளைச் செய்திருந்தேன் என்பதை முன்னரே குறிப்பிட்டிருந்தேன்.

"இங்கே இன்னும் எத்தனை கோயில்கள் இருக்கின்றன? நாளைக்கு ஒரு கோயிலிலேனும் அர்ச்சனை பண்ணியாகணும்" மனைவிக்கு அவள் பிரச்சினை.

"இங்கே ஆயிரம் கோயில்கள் இருக்கின்றன...."

"ஆயிரம் கோயில்களா....... அப்பா நீங்கள் மிகைப்படுத்திச் சொல்லுறீங்கள்...... ஆயிரமாக இருக்கமுடியாது."

❍ ❍ ❍

## 1941 – புன்னாலைக்கட்டுவன் (இலங்கை)

புன்னாலைக்கட்டுவன் **வித்துவசிரோமணி கணேசையர்,** தொல் காப்பிய வித்தகர், மாணவர்களுக்குத் தம் இல்லத்தில் வைத்துப் பாடம் நடத்திக்கொண்டிருந்தார்.

அவரின் பேர்த்தி பாலாம்பிகையும், பேர்த்தியின் கணவன் தியாகராஜனும் தங்களின் எட்டு மாதக் குழந்தை ஞானசேகரனுடன் கணேசையரின் இல்லத்திற்கு வந்திருந்தனர். குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது.

தொல்காப்பியத்தின் இறுதி இயலான மரபியலில் அன்றைய பாடம் அமைந்திருந்தது.

**சிதைவெனப் படுபவை வசையற நாடில்**
**கூறியது கூறல் மாறுகொளக் கூறல்**
**குன்றக் கூறல் மிகைப்படக் கூறல்**
**பொருளில கூறல் மயங்கக் கூறல்**
**கேட்போர்க் கின்னா யாப்பிற் றாதல்**
**பழித்த மொழியான் இழுக்கக் கூறல்**
**தன்னா னொருபொருள் கருதிக் கூறல்**
**என்ன வகையினும் மனங்கோ ளின்மை**
**அன்ன பிறவும் அவற்றுவிரி யாகும்.**

வித்துவசிரோமணி கணேசையர் மேற்கண்ட சூத்திரத்தைக் கூறிவிட்டு அதன் பொருளினை தன்விழிகளை மூடியவண்ணம் சுகித்தார். இவ்வாறு வித்துவசிரோமணி தன்னிலை மறந்து திளைப்பது தினசரி வழக்கங்களில் ஒன்றாததால், அவரது மாணவர்கள் தமது குருநாதர் கண்களைத் திறக்கும் வரைக்கும் அவரையே பார்த்தபடி இருந்தார்கள்.



**வித்துவசிரோமணி சி. கணேசையர்**

மௌனத்தை விரும்பாத குழந்தை தவழ்ந்து சென்று தன் கொள்ளுத் தாத்தாவின் கால்களைப் பற்றி எழுந்துகொண்டது. ஸ்பரிசம் பட்டு பூவுலகிற்கு திரும்பிய கணேசையர் குழந்தையைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டார். பின் தன் மாணவர்களைப் பார்த்தப்படி சூத்திரத்தின் விளக்கத்தைக் கூறினார்.

"நூல் ஒன்றினைப் படைக்கும் போது பத்து விடயங்களைத் தவிர்க்க வேண்டும் என்கிறார் தொல்காப்பியர். நூல் என்றில்லை, ஒரு விடயத்தைப் பற்றி பிரஸ்தாபிக்

கும்போதுகூட இந்த விதி பொருந்தும். தவிர்க்கப்பட வேண்டிய வையாவன,

(1) சொன்னதைச் சொல்லுதல்
(2) முன் சொன்னதற்கு முரணாகக் கூறுதல்
(3) குறைத்துச் சொல்லுதல்
(4) மிகைப்படுத்திச் சொல்லுதல்
(5) பொருளில்லாதவைகளைக் கூறுதல்
(6) மயக்க உணர்வு ஏற்படும்படியாகக் கூறுதல்
(7) கேட்போர்க்குத் துன்பம் தரும்படியான தன்மையில் அமைதல்
(8) பழிக்கப்பட்ட சொற்களோடு தாழ்வுண்டாகுமாறு கூறுதல்
(9) தானே ஒரு பொருளை எண்ணிக் கூறுதல்
(10) எவ்வகைப் பொருளையும் உறுதியாகப் பற்றாது உணர்த்தல்

என்பனவாகும்.

அங்கு அமைதி ஆட்கொண்டது.

“ஒரு கருப்பொருளைப் பற்றிக் கூறும்போது அதன் கூறுகள் அனைத்தையும் தவறவிடாது கூறிவிடவேண்டுமல்லவா? குறைவாகக் கூறுவதும் குற்றமாகிவிடும்.” என்றான் ஒரு மாணவன்.

“ஓமோம்...., ஒரு கருப்பொருளின் கூறுகளைக் குறைத்துக் கூறு வது குற்றமாகும். அதேபோன்று ஒன்றை மிகைப்படுத்திக் கூறுவ தும் குற்றமாகும்.”

❍ ❍ ❍

## கி.பி. 2011 – கம்போடியா

ஆயிரம் கோயில்கள் என்பது மிகைப்படுத்தல் அல்ல. நம்புவது சிரமம் என்றாலும் அதுதான் உண்மை. ஒரு தூணின் அளவு தொடங்கி ‘அங்கோர் வாட்’ கோயிலின் பிரம்மாண்டம் வரையிலான அளவில் கம்போடியாவில் ஆயிரம் கற்கோயில்கள் இருக்கின்றன....‘அங்கோர் வாட்’ கோயிலின் பிரமாண்டத்தை ஜீரணித்து முடிவதற்குள், ஆயிரம் கோயில்கள் உள்ளன எனும் தகவல் என் தலையைச் சுற்றவைத்தது. ‘அங்கோர்’ என்பது சமஸ்கிருதத்தில் இருந்து மருவிய சொல். ‘அங்கோர்’ என்பதன் பொருள் ‘நகரம்’ என்பதாகும் [07-01]. ‘கோயில்களின் நகரம்’ என்பதற்கமைய கண்கள் படும் இடமெல்லாம் கோயில்களைக் கட்டு கட்டு என்று அவர்கள் கட்டியுள்ளார்கள்.

தொழில்நுட்பக் காலத்திற்கு முந்திய, உலகத்தின் அதிபெரிய நகரம் (largest preindustrial city in the world) என 2007 ஆம் ஆண்டு

அங்கோர் கணிக்கப்பட்டுள்ளது. இதன் சுற்றளவு 1000 சதுர கிலோமீற்றராகும் [07-02]. ஆயிரம் சதுர கிலோமீற்றர் கொண்ட 'அங்கோர் கோயில் நகரத்தின்' விஸ்தாரத்தை எண்ணிப்பார்க்கவே மலைப்பாக இருந்தது.

கம்போடியாவில் கோயில்களைப் பார்க்க நாங்கள் ஒரு நாள், அல்லது மூன்று நாள், அல்லது ஏழு நாள் என்று 'டிக்கட்' எடுக்கவேண்டும். நாங்கள் ஆளுக்கு 40 அமெரிக்க 'டொலர்' கொடுத்து மூன்று நாள் 'டிக்கட்' எடுத்திருந்தோம். இந்த மூன்று நாட்களில் நாங்கள் எங்களால் முடிந்தளவு எண்ணிக்கையான கோயில்களைப் பார்க்கலாமாம்! இந்த 'டிக்கட்'டுகளை எமக்குத் தருமுன்னர் எம்மை 'கமெரா'வினால் படமெடுப்பார்கள். எங்கள் உருவப்படம் 'டிக்கட்'டில் அச்சிடப்பட்டிருக்கும். மேலும் நாங்கள் 'டிக்கட்' எடுத்து ஏழு நாட்களுக்குள் விரும்பிய மூன்று நாட்களுக்கு அதனைப் பயன்படுத்தலாம். தொடர்ச்சியான மூன்று நாட்களாக இருக்க வேண்டியதில்லை. ஒவ்வொரு கோயிலின் முன்னாலும் அவர்கள் எங்கள் 'டிக்கட்'டைப் பரிசோதித்து அனுமதிப்பார்கள். இதன்போது பாவித்த நாட்களை உறுதிப்படுத்திக்கொள்ள எமது நாட்டு புகையிரத நிலையத்தினரின் வழக்கத்தினைப்போன்று குறடு போன்ற உபகரணத்தைப் பாவித்து துளையொன்றைப் போடுவார்கள். மேலும் 'டிக்கட்'டுக்கு உரியவர்தான் போகின்றாரா என்பதை உருவப் படத்தைக்கொண்டு உறுதிப்படுத்திக்கொள்வார்கள்.


'டிக்கட்'டில் உருவப்படம் பதிக்கும்முறை சிறந்த வழக்கமாக எனக் குப்பட்டது. இதில் பிறிதொரு நன்மையும் உண்டு. தேவையேற்படின் யார் யார் அங்கோரைப் பார்க்க வந்தார்கள் என்பதைக் கம்போடிய அரசு உருவப்படங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ஆம் 17ஆம் திகதிகளில் இலங்கை தேசிய நூதனசாலையில் (கொழும்பு) நடந்த கொள்ளைச் சம்பவம் வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். கணினி தடயவியல் நிபுணர் (Computer Forensic Investigator) என்ற அடிப்படையில் இந் தச் சம்பவத்தை கணினி சார்ந்து ஆராய்வதில் எனக்குச் சந்தர்ப் பம் ஏற்பட்டது. எமது நூதனசாலையில் 'டிக்கட்' வழங்கும் போது உருவப்படம் பதியும் முறை இருந்திருந்தால் களவு மேற் கொண்டவர்களை இலகுவில் அணுகியிருக்கலாமோ என்று எண்ணத்தோன்றியது. இச்செயலில் சம்பந்தமுள்ளவர் அனேகமாக களவிற்கு முன்னர் நூதனசாலையை சாதாரண பிரஜையாக பல தடவைகள் பார்வையிட்டிருக்கவேண்டும். ஆனால் வந்தவர்களின் உருவப்படங்கள் அங்கோரில் உள்ளதுபோன்று நூதனசாலையில் இல்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.



கீரிமலை சகஸ்ரலிங்கம்
– 2012 கும்பாபிஷேகத்தில்
'எண்ணெய் சாத்தும்'
கிரியை

'அங்கோர்' கோயில்களைப்
பார்க்க 3 நாட்களுக்கான
'டிக்கட்'



காலை 08:30. நான் Kbal Spean கோயிலை நோக்கி மலைப் பாதையில் ஏறிக்கொண்டிருந்தேன். Kbal Spean கோயில் Stung Kbal Spean ஆற்றின் மடியில் அமைந்திருந்தது. வாகனம் போகமுடியாத காட்டுப் பாதையில் ஒன்றரைக் கிலோமீற்றர் ஏறிச் செல்லவேண்டும். மழை தூறிக்கொண்டிருந்தது. ஏறும் பாதை சகதியும் சறுக்கலுமாக இருந்தது. மனைவியும் மகனும் அந்தச் சகதி நிறைந்த காட்டு மலைப்பாதையில் ஏறுவது உசிதமல்ல என்று அவர்கள் கூறினார்கள். ஒவ்வொரு கோயிலின் வாசலிலும் பல கடைகள் அமைக்கப்பட்டிருக்கும். அவற்றில் 'கிரிஷ்'க்கு தெரிந்த கடையொன்றில் மனைவி, மகனை விட்டுவிட்டு நான் மட்டும் நனைந்தபடி ஏறத்தொடங்கினேன்.

இரண்டாம் சூரியவர்மன் 'அங்கோர் வாட்' கோயிலைக் கட்டினான் என்பதை நாம் முன்னரே பார்த்தோம். Kbal Spean கோயிலை **முதலாம் சூரியவர்மன்** கட்டத்தொடங்கினான் என்றும் கி.பி. 1059 இல் **இரண்டாம் உதயதியவர்மன்** (Udayadityavarman II) மன்னன் கட்டிமுடித்தான் என்றும் வரலாறு கூறுகிறது. கேட்பாரற்று காட்டின் நடுவே இருந்த இந்தக் கோயிலை கி.பி. 1969ஆம் ஆண்டு Jean Boulbet என்பவரே மீண்டும் உலகிற்கு அறிமுகப்படுத்தினார் [07-03].

சகதிகளில் சறுக்கி விழுந்து எழும்பி Kbal Spean கோயிலை நோக்கி நான் ஏறுவதற்கு முக்கிய காரணமிருக்கிறது. என்னவென்று தெரிந்தால் நீங்களும் என்னுடன் வரிந்து கட்டிக்கொண்டு ஏறத் தொடங்கிவிடுவீர்கள்.



12 Apostles - Australia



**தியானிக்கும் நான்முகன் – நதியின் மடியில்** (Kbal Spean)

*Kbal Spean கோயிலில் ஆயிரம் சிவலிங்கங்களைச் செதுக்கியிருக்கிறார்கள்! ஒன்றல்ல, இரண்டல்ல, பத்தல்ல, நூறல்ல.. ஆயிரம் சிவலிங்கங்கள்.*

*இலங்கை **கீரிமலை சிவன் கோயிலிலே**தான் ஆயிரம் சிவ லிங்கங்களை நான் பார்த் துள்ளேன். இது **சகஸ்ரலிங் கம்** எனப்படுகிறது. ஒரு சிவலிங்கத்தில் ஆயிரம் சிவலிங்கங்களை செதுக்கி யிருக்கிறார்கள். ஒரு முறை சகஸ்ரலிங்கத்தை வலம் வந்தால் ஆயிரம் தடவை சுற்றிவந்து வழிபட்டதிற்கு சமன், என்று கோயில் பிரதமகுரு **மகாராஜராஜஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள்** கூற என் காதுபடக் கேட்டுள்ளேன். Kbal Spean கோயிலில் இருப்பது சகஸ்ரலிங்கமல்ல. தனித்தனியாக ஆயிரம் சிவலிங்கங்கள்!*


*மழைத்தூறல் நன்றாகக் குறைந்திருந்தது. ஒரு மரத்தடியில் இளைப்பாறினேன். ஒரு வெள்ளைக்கார வயோதிப அம்மையார் மெது வாக ஏறிவந்து கொண்டிருந்தார். என் இயற்கை சுபாவத்துக்கமைய அவருக்கு முகமன் கூறினேன்.*

*எங்கள் உரையாடல் வளர்ந்தது. அவர் அவுஸ்திரேலியாவின் 'மெல்பேர்ன்' நகரத்தைச் சேர்ந்த பெண்மணியென்றும் தற்போது நியுசிலாந்தில் வசிக்கிறாரென்றும் தெரிவித்தார். தன் கணவர் தற்பொழுது நடக்கும் அவுஸ்திரேலியா 'ரக்பி' விளையாட்டைப் பார்க்கிறார் என்றும், தான் தனியாக கம்போடியாவுக்கு அங்கோரைப் பார்க்க வந்தார் என்றும் கூறினார். வெளிநாடுகளில் இவ்வாறு கணவன் மனைவி பிரிந்து தனித்தனியாக இடங்கள் பார்க்கப் போவது சகஜமான விடயம்.*

*நான் அவரின் சொந்த ஊரிலுள்ள (மெல்பேர்ன் - அவுஸ்திரேலியா) நிகரற்ற அழகுடைய கடற்கரைப் பாதையைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன்.*



**அறிதுயில் விஷ்ணு – நதியின் மடியில்** (Kbal Spean)



**ஒரு ஆவுடையாரில் பல லிங்கங்கள் – நதியின் மடியில்** (Kbal Spean)

*'மெல்பேர்னி'ல் தொடங்கி 240 கிலோமீற்றருக்கும் அதிக தூரம் நீளும் பாதையை உலகத்தின் அழகான கடற்கரைப் பாதையாக (Great Ocean Road) கணித்துள்ளார்கள். இந்தப் பாதையிலேதான் பிரசித்திப்பெற்ற 12 Apostles எனும் அழகிய கடல் எச்சக்குன்றுகள் இருக்கின்றன. இந்தப் பிரசித்தி பெற்ற கடற்கரைப் பாதையில் 2005 ஆம் ஆண்டில் கார் ஓட்டிச் செல்லும் பாக்கியம் எனக்குக் கிட்டியிருந்தது. அந்த அனுபவம் அம்மையாருடன் உரையாடுவதற்கு வழிவகுத்தது.*



**'கைட்' உடன் கட்டுரையாசிரியர்** (Kbal Spean)

நாங்கள் இருவரும் அளவளாவியபடி கோயிலை நோக்கி ஏறினோம். நாங்கள் கோயிலை அடைந்த நேரம் மழை முற்றாக விட்டிருந்தது.

கோயிலானது நான் மனதில் நினைத்திருந் ததைவிட மகோன்னத மாக இருந்தது. பாறை களில் விழுந்து எழுந்து நதி ஓடிக்கொண்டிருந்தது. நதியின் மடியில் சிவலிங்கங்களைச் செதுக்கியிருந்தார்கள். ஆயிரம் சிவலிங்கங்களைத் தொடர்ந்து அபிஷேகித்தவண்ணம் நதி பிரவாகித்துக்கொண்டிருந்தது. ஆற்றின் தொடர்ந்த சலசலப்பு மனதை அவ்விடத்தில் லயிக்க வைத்துவிட்டது. இதை எப்படிச் செய்தார்கள்..? ஏன் செய்தார்கள்..? என்ற கேள்விகள் மனதில் மோதினாலும் அவற்றுக்கான முறையான விடைகள் யாருக்கும் இதுவரை தெரியாது.



**முக அமைப்பில் அமைந்த கோபுரங்கள்** (Bayon)




**சிவனுக்கு அம்பு தொடுக்கும் காமன்** (Banteay Srei)

“கைட்...?” என்று என் தோள்களுக்குப்பின்னால் சத்தம் கேட்டுத் திரும்பினேன். கம்போடிய வயோதிபரொருவர் ‘கைட்’ (Guide) வேண்டுமா என்று கேட்டபடி நின்றார். அவரைப் பொறுத்தவரை நான் இந்தியன். இலங்கை என்று ஒரு நாடு இருப்பதே அவருக்குத் தெரியாது.

“யெஸ்” என்றேன்.

பெருமகிழ்ச்சி அடைந்த அவர், என்னை ஒவ்வொரு இடமாக அழைத்துச் சென்று தனது அரை குறை ஆங்கிலத்தில் விளக்கங்கள் அளித்தார். அவர் பௌத்தர். அவர் கூறிய அரை குறை இந்துமத விளக்கங்களை என்னால் புரிந்து கொள்ளமுடிந்தது. என்னை அவர் பல இடங்களுக்கு அழைத்துச் சென்று பல சிற்பங்களைக் காட்டி விளக்கம் அளிப்பதைப் பார்த்த பலர் எம்மைப் பின்தொடரத் தொடங்கினர். நான், அவர் கூறியதைப் புரிந்து, எனக்குத் தெரிந்த இந்துமதச் சரக்குகளையெல்லாம் கலந்து எம்மைத் தொடர்பவர்களுக்கு விளக்க மளித்து ஒரு ‘கைட்’ ஆக மாறிவிட்டேன்.


ஆயிரம் லிங்கங்களுடன் பல்வேறு சிற்பங்களும் அங்கு அமைந் திருந்தன. அறிதுயிலும் விஷ்ணு, தியானம் புரியும் நான்முகன், சிவலிங்கத்தை வழிபடும் பார்வதி, லக்ஷ்மி என்று அடுக் கிக்கொண்டே போகலாம். இவற்றுக்கும் மேலாக ஒரு வித்தியாசமான சிற்பம்



**சிவன் அர்ச்சுனன் யுத்தம்** (Banteay Srei)



**வாலி சுக்கிரீவன் யுத்தம்** (Banteay Srei)



**கம்சன் வதம்** (Banteay Srei)

செதுக்கப்பட்டிருந்தது. அதுதான், ஒரு ஆவுடையாரினுளளே ஒன்றுக்கும் மேற்பட்ட பல லிங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

நாள் முழுவதும் பார்த்துக்கொண்டே இருக்கலாம். ஆனால் மனைவி மகனின் நினைவு என் நிலையை ஞாபகப்படுத்தியது. 'கைட்' இடமும் அவுஸ்திரேலியப் பெண்ணிடமும் விடைபெற்றுக்கொண்டேன். 4000 'ரியாலை' (அண்ணளவாக 100 ரூபாய்) 'கைட்' இடம் சந்தோசப் பணமாகக் கொடுத்தேன். அவர் முகபாவத்தில் திருப்தி தெரிந்தது. நான் பார்த்தவை மனதில் சுற்றிவர மெதுவாக மலையிலிருந்து இறங்கத் தொடங்கினேன்.

கீழிறங்கி வந்த என்னைக் கண்டதும் மகன் ஓடோடி வந்து என் கால்களைக் கட்டிக் கொண்டான். அவன் தவழத் தொடங்கிய காலத்தில், நான் காரியாலயத்திலிருந்து வீடு வந்ததும் தவழ்ந்து வந்து என் கால்கள் பற்றி ஏறி எழுந்துகொள்வான்.

அவ்வாறு கால்பற்றி அண்ணாந்து முகம் பார்க்கும் அவனைத் தூக் காமல் விடமுடியாது. இப்போதும் அண்ணாந்து பார்த்தான், தூக் கிக்கொண்டேன். என் மகன் கால் பிடித்து ஏறும்போதெல்லாம் ஒரு கவிதைவரி என் மனதில் வட்டமிடும்.

'மஹாகவி' ***உருத்திரமூர்த்தி*** எழுதிய 'நேர்மை" எனும் கவிதையில் வரும்

> **"........ கடும் நேர்மையிற்**
> **பற்றுக் கொண்டு பணத்தைத் துறப்பதா!**
> **அன்றியும் மனை சென்றிடில், அவ்விளங்**
> **கன்றென் மீதில்என் கால்பிடித் தேறுங்கால்**
> **இன்றென்றாலும் அதன் கையிலே பழம்**
> **ஒன்றை இட்டின்பம் ஊட்டிட லாகுமே!**

எனும் வரிகளில். ***"அவ் விளங்கன்றென் மீதில் என்கால் பிடித் தேறுங்கால்"*** என எத்தகைய தத்ரூபமாக அனுபவித்துக் கூறியுள்ளார்.

மஹாகவியும் ஒரு மகாகவியே...!

மனைவி மலர்ந்த முகத்துடன் என்னை எதிர்கொண்டாள். என்னை ஒவ்வொரு கடையாக அழைத்துச்சென்று மகனுக்கு வாங்கிய சட்டைக்குக் காசு, கம்போடிய நினைவுச் சின்னமொன்று வாங் கியதுக்குக் காசு, குடித்த மென்பானத்திற்குக் காசு என்று ஒவ்வொரு கணக்கையும் தீர்த்தாள்!

நாம் அங்கிருந்த நாட்களில் எம்மால் பார்க்கக்கூடிய அளவு கோயில்களைப் பார்த்தோம். நாங்கள் மேலோட்டமாக 30 கோயில் களைப் பார்த்திருப்போம். ஒவ்வொரு கோயிலின் பின்புலத்திலும் ஒரு சரித்திரம் இருந்தது. மனித சுபாவத்திற்கமைய ஒரு நிலைக்குமேல் என்னால் கோயில்களின் தாற்பரியங்களையும் பிரமிப்புக்களையும் உள்வாங்கமுடியவில்லை. என் வெளிப்புறப் பார்வையால் மட்டுமே உள்வாங்க முடிந்தது. அத்துடன் 'அங்கோர் வாட்' கோயிலைப் பார்த்த என்னால் சார்பியல் உணர்ச்சிக்கமைய அங்கிருந்த பிற பிரமாண்டக் கோயில்களைப் பார்த்துப் பிரமிக்க முடியவில்லை. ஆனால் ஒவ்வொரு கோயிலும் வார்த்தையால் வர்ணிக்கமுடியாதளவு பிரமாண்டமே!

**Bayon** கோயில் : 12ஆம் 13ஆம் நூற்றாண்டுகளில் ***ஏழாம் ஜெயவர்மனாலும்*** தொடர்ந்து ***எட்டாம் ஜெயவர்மனாலும்*** கட்டப்பட்டது. மொத்தமாக 54 கோபுரங்களைக் கொண்டிருந்தது என நம்பப் படுகிறது. தற்பொழுது 37 கோபுரங்கள்தான் எஞ்சியுள்ளன. இந்தக் கோபுரங்கள் ஏனைய கோயில்களின் கோபுரங்களைக் காட்டிலும் வித்தியாசமானவை. இக்கோபுரங்கள் மனித முக அமைப்பைக்



Pre Rub

கொண்டு அமைக்கப்பட்டிருந்தன. சில கோபுரங்கள், நான்கு திசைகளிலும் நான்கு முகங்கள் கொண்டு அமைக்கப்பட்டிருந்தன. சில கோபுரங்களில் மூன்று முகங்களும், இன்னும் சிலவற்றில் இரண்டு முகங்களும் காணப்பட்டன. இக்கோயிலின் வடிவமைப்பின் சிக்கலை இன்றும் ஆராய்ந்து கொண்டுள்ளார்கள் *[07-04]*.

**Banteay Srei** கோயில் : கி.பி. **967** ஆம் ஆண்டு ***இரண்டாம் இராஜேந்திரவர்மனின்*** *(Rajendravarman II)* ஆட்சிக்காலத்தில் ***யஜ்நவரஹ*** *(Yajña varâha)* ஆல் கட்டப்பட்ட சிவன் கோயில் ஆகும். 'கெமர் கட்டடக் கலையின் ஆபரணம்' என்று கூறுமளவிற்கு உச்சமான சிற்பங்களைக் கொண்டது *Banteay Srei*. இக்கோயில் கட்டப்பட்ட காலத்தில் ***'திரிபுவனமகேஸ்வரம்'*** எனும் நாமத்தைக் கொண்டிருந்தது என்று வரலாறு கூறுகிறது. சிவனுக்கு அம்பு தொடுக்கும் காமன், சிவனுடன் போர்புரியும் அர்ச்சுனன், வாலி சுக்கிரீவ யுத்தம், கம்சனின் வதம் என்று சிற்பங்களை அடுக்கிக்கொண்டே போகலாம் *[07-05]*.

**Pre Rup** கோயில் : கி.பி. **961-962** ஆம் ஆண்டு ***இராஜேந்திரவர்மனால்*** *(Rajendravarman)* கட்டப்பட்ட சிவன் கோயில் ஆகும். மக்களின் இறுதித் தகனக் கிரியைகள் இக்கோயிலில் நடத்தப்பட்டதாக வரலாறு கூறுகிறது. இங்கு தகனம் நடக்கும் தறுவாயில் பிரேதமானது அனைத்துத் திசைகளுக்கும் திருப்பப்படும் என்ற ஐதீகம் இருக்கின்றது *[07-06]*.

அங்கோரில் உள்ள அனேக கோயில்களில் காணப்படும் பொதுப் படையான விடயம் 'தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடையும் அம்சமாகும்.' புடைப்புச் சிற்பமாகவோ, சிலையாகவோ இதைச் செதுக்கியிருப்பார்கள். *Angkor Thom* எனும் கோயிலின் வாசலில்

இதை மிகப்பிரம்மாண்டமாகச் செதுக்கியிருந்தார்கள். கோயில் வாசலின் இருபுறத்திலும் பல அடி தொலைவிற்கு தேவர்களினதும் அசுரர்களினதும் சிலைகள் செதுக்கப்பட்டிருந்தன.

ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவில் ஆயிரம் கோயில்களுக்கும் மேலாகக் கொண்டு பரந்திருந்த அங்கோர் மாநகரம் 1431 ஆம் ஆண்டிற்குப்பின்னர் ஆளரவமற்று ஒதுக்கப்பட்டது. மக்கள் அனைவரும் கோயில்களை ஒதுக்கி வாழத்தொடங்கினார்கள் என்று தெரியவருகிறது. அனைத்துக் கோயில்களையும் சுற்றிக் காடு பற்றத் தொடங்கியது. கம்போடிய மக்கள் இந்தக்கோயில்களைப் பற்றி தமது புதிய தலைமுறையினரிடம் குறிப்பிடக்கூட இல்லை என்று தெரியவருகிறது. ஆங்கிலேயர்கள்தான் இருபதாம் நூற் றாண்டில் அனேக கோயில்களைக் காடுகளில் இருந்து மீளக் கண்டு பிடித்துள்ளார்கள்.

‘ஏன் அங்கோர் நகரம் முற்று முழுதாக மக்களால் ஒதுக்கப்பட்டது?’ என்பது இன்னமும் புரியாத புதிராகவே உள்ளது. **சியாமிஸ்** (Siamese) ஆயுத்தியா சாம்ராஜ்சிய மன்னர்கள் மேற்கொண்ட படையெடுப்பே இதற்குப் பிரதான காரணம் என்று நம்பப்படுகிறது. ஆனாலும் இது வலுவான காரணமாகத் தெரியவில்லை. 14ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட வெள்ள அழிவுதான் அங்கோர் நகரத்தைக் கைவிடக் காரணமானது என்பது பிறிதொரு சாராரின் வாதம். இந்து சமயத்திலிருந்து தேரவாத பௌத்தத்திற்கான மாற்றமே கோயில்களின் புறக்கணிப்புக்குக் காரணம் என்பது சில ஆய்வாளர்களின் கருத்தாகும்.

“அப்பா... 1000 கிலோமீற்றர் விஸ்தாரத்தில், செழித்திருந்த கெமர் சாம்ராஜ்யத்தின் ‘அங்கோர்’ நகரம் ஏன் நிலைக்கவில்லை?. இலங்கையின் நீளமே 465 கிலோமீற்றர்தானே...” புவியியல் துறையில் சிறப்புப் பட்டதாரியான என் மனைவி ‘அங்கோர்’ நகரத் தின் விஸ்தாரத்தை உணரத்தொடங்கியிருந்தாள்.

“சேர, சோழ, பாண்டியன், பல்லவன் என்போர் மூவாயிரம் ஆண்டுகளுக்குமேல் எத்தனையோ நாடுகளை எல்லாம் வென்று ஆண்ட தமிழர்கள். ஆனால் தமிழனுக்கென்று, இன்று ஒரு பிடி சொந்த மண் இல்லையே! எதனால்?”

என் பதிற் கேள்வி மனைவியைச் சிரமப்படுத்தியது என்பதை அவள் முகம் காட்டிக்கொடுத்தது.

“இப்ப என்ன சொல்ல வாறீங்க... தமிழனின் குணத்தினாலேயே இன்று எங்களுக்கு நாடு கிடைக்கவில்லை என்றா..?” மனைவியின் குரலில் சூடு தெறித்தது.

“......”




**திருபாற்கடல் கடையும் தேவர்கள்** (Angkor Thom)

நான் அவளுக்கு இன்னுமோர் இளநீரை வாங்கிக்கொடுத்தேன். மகன் கைதட்டி ஆர்ப்பரித்தான்.

கெமர் சாம்ராச்சியம் அழிந்ததற்கு, சேர, சோழ, பாண்டிய, பல்லவ சாம்ராச்சியங்கள் சிதைந்ததற்கு, ஈழத் தமிழரின் விடுதலைக் குரல் தாழ்ந்ததிற்கு பலர் பல காரணங்களைக் கற்பிக்கலாம். 1869 இல் ரஷ்ய நாவலாசிரியர் Leo Tolstoy எழுதிய War and Peace எனும் உலகப் புகழ்பெற்ற நாவலின் இறுதி வரிகளின் ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் கீழ்க்கண்டவாறு அமையும்.

“அனேக வரலாற்று ஆசிரியர்கள் நெப்போலியன் இதைச் செய் திருக்க வேண்டும், அலெக்ஸாண்டர் அதைச் செய்திருக்கவேண்டும் என்று வாதிடுவார்கள். என்னைப் பொறுத்தவரை நெப்போலியனின் செயற்பாடுகளையோ அலெக்ஸாண்டரின் செயற்பாடுகளையோ மனித சமுதாயத்திற்கு உகந்தது அல்லது கெடுதியானது என்று வரையறுப்பது இயலாத காரியம். எவராவது நெப்போலியனின் அல்லது அலெக்ஸாண்டரின் அல்லது பிறிதொரு வரலாற்றுப் புருஷ ரின் செயற்பாடுகளை வெறுப்பாரேயானால், அது ‘மனித நன்மை’ என்பதற்கான அவரின் மட்டுப்படுத்தப்பட்ட வரைவிலக்கணத்திற்கு ஒவ்வாதமையினாலேயாகும்.

மலரில் அமரும் தேனீயை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு குழந்தையைப் பொறுத்தவரை மனிதர்களைக் கடிப்பதே தேனீயின் நோக்கம். கவிஞன் ஒருவனோ, தேனை சுவைப்பதே தேனீயின்



Leo Tolstoy

நோக்கமென்பான். தேன் எடுப்பவனோ, தேனீயின் நோக்கம் தேனைச் சேகரிப்பதே என்பான். ஒரு தாவரவியல் அறிஞனோ, மகரந்தத் துணிக்கைகளை ஓரிடத்திலிருந்து இன்னுமோர் இடத்துக்கு கடத்துவதே இதன் நோக்கமென்பான். உண்மையில் தேனீயின் இயற்கை சார்ந்த நோக்கம்தான் என்ன? மனிதனின் அறிவின் விரியலுடன் தேனீயின் நோக்கம் பிடிபடாமல் போவதைக் காணலாம்."


நாம் முடிவடைந்த வரலாறுகளை ஆராய்ந்து, அவர் இப்படிச் செய்திருக்க லாம்... அப்படிச் செய்திருக்கலாம்... என்று விமர்சிப்பது பொருத்த மற்றது. 1859இல் **'சார்ள்ஸ் டாவின்'** (Charles Darwin) தந்த *On The Origin Of Species* என்ற **'தக்கன பிழைத்தல்'** கொள்கையின்படி, "கூர்ப்பிலே இயற்கையின் தெரிவு மனிதனின் தெரிவிலிருந்து வித்தியாசமானது. மனிதன் தெரிவுசெய்யும்போது தன் தேவை சார்ந்து தெரிவான். இயற்கை எது பிரயோசனமானதோ அதையையே தெரிவு செய்யும்." என்பதாகும். சார்ள்ஸ் டாவினின் இந்த வாதம், எமது சாம்ராச்சிய வரலாறுகளுக்கும், போராட்ட வர லாறுகளுக்குங் கூடப் பொருந்தும்.

இயற்கை அன்னை தன் தெரிவிலே,

'அங்கோர்' நாட்டைத் தெரிவு செய்யவில்லை!

இங்கோர் நாட்டையும் தெரிவு செய்யவில்லை!!

❍ ❍ ❍



Charles Darwin

[07-01] - http://en.wikipedia.org/wiki/Angkor
[07-02] - http://en.wikipedia.org/wiki/Kbal_Spean
[07-03] - http://en.wikipedia.org/wiki/Bayon
[07-04] - http://en.wikipedia.org/wiki/Banteay_Srei
[07-05] - http://en.wikipedia.org/wiki/Pre_Rup

# 8 ‘அங்கோரி’ல் ஒரு மிதக்கும் கிராமம்

**கி.பி. 2011 – கம்போடியாவின் Tonle Sap வாவி**

நெடுஞ்செழியன்
உள்ளேன் ஐயா....
அலெக்ஸாண்டர்...
பிரசென்ட் சேர்
நெல்சன் மண்டேலா...
யெஸ் பொஸ்
எல்லாளன்...
.....
எல்லாளன்...
.....
துட்டுகெமுனு...
.....

“சேர்... நேற்று வகுப்பு முடிந்து செல்லும்போது, எல்லாளனும் துட்டுகெமுனுவும் சண்டைபிடித்துக் கொண்டார்கள். இரண்டு பேருக்கும் காயம். அதனால் இன்று வரவில்லைப் போலும்.” நெல்சன் மண்டேலா, ஆசிரியர் ஓங்காரத்தைப் பார்த்துக் கூறினான்.

ஓங்காரம் நிமிர்ந்து வகுப்பை ஒருகணம் பார்த்துவிட்டுக் கூறினார்.

“உவங்கள் இரண்டு பேரும் எப்ப பார்த்தாலும் அடிபிடி...., அடுத்தமுறை அப்பா அம்மாவைக் கூட்டிக்கொண்டு வந்தால் தான் வகுப்புக்குள் சேர்ப்பேன்.” அன்றைய வகுப்பின் வரவுப்பதிவை முடித்துக்கொண்டார் ஓங்காரம்.



வகுப்பறைச் சூழல் மிகவும் ரம்மியமாக இருந்தது. ***'டொன்லே ஸெப்'*** *(Tonle Sap)* வாவியினுள்ளே நீர்த்தாவரங்களாலும் பாறைகளாலும் சூழப்பட்ட இடத்தில் அந்த வகுப்பறை அமைந்திருந்தது.

ஓங்காரத்தின் வயது 150 ற்கும் மேலாகிறது! அவரின் பூர்வீகம்பற்றி உறுதியாகத் தெரியாது. அவர் பசுபிக் கடலிருக்கும் உலகப் பிரசித்தம் வாய்ந்த *Galápagos* தீவிலிருந்து பாதை மாறி கம்போடியாவுக்கு வந்தவராகக் கருதப்படுகிறார். ஐந்தரை அடி நீளத்துக்கும் அதிகமான உடலையும், 400 கிலோகிராமிற்கும் அதிகமான எடையையும் உடையவர் ஓங்காரம். தொண்டையைச் செருமிக்கொண்டு அந்த அனுபவமிக்க இராட்சத ஆமை அன்றைய வகுப்பை ஆரம்பித்தது.



"என் குழந்தைச் செல்வங்களே, கம்போடியாவின் 'டொன்லே ஸெப்' வாவியைப் பற்றி இன்று உங்களுக்குச் சொல்லித் தரப் போகிறேன்..."

அதைக்கேட்ட அனைத்து மாணவர்களும் மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்தார்கள். நெடுஞ்செழியன் எனும் மீன் தன் கைகளைத் தட்டியது. 'அலெக்ஸாண்டர்' எனும் கடற்குதிரை தன்




**'டொன்லே ஸெப்'** (Tonle Sap) **வாவி**

தலையை மேலும் கீழும் ஆட்டியது. ‘நெல்ஸன் மண்டேலா’ எனும் நீர்ப் பாம்பு தன் வாலை வலம் இடமாக ஆட்டி நடனமாடியது. வகுப்பில் முப்பது மாணவர்கள் இருந்தனர். அவர்கள் மீன், ஆமை, பாம்பு, நண்டு, கடற் குதிரை, தவளை என இன்னோரன்ன இனத்தைச் சேர்ந்தவர்கள்.

“டொன்லே ஸெப் வாவிதான் தெற்காசியாவிலேயே பெரிய நன்நீர் வாவி. நாங்கள் அந்த வாவியிலேதான் வாழ்ந்து வருகின்றோம்...”

“தெற்காசியாவிலேயே பெரிய வாவி.... கேட்கவே பெருமையாக இருக்கு சேர்..” மீன் நெடுஞ்செழியன் கூறியது.

“பெருமைப்பட வேண்டிய விடயம்தான். ஆனால் மீனாகிய நீ, மிகவும் கவனமாக இருக்கவேண்டும். ‘டொன்லே ஸெப்’ வாவியிலே தான் உலகத்திலேயே அதிகளவான நன்நீர் மீன்களை மனித அரக்கர்கள் பிடித்துக் கொல்கிறார்கள்.”



நெடுஞ்செழியனின் முகம் வெளிறியது. அப்பொழுது வழக்கம்போல் பிந்தி வந்த நண்டு மஹிந்தன் வகுப்புடன் கலந்து கொண்டது.

ஓங்காரம் தொடர்ந்தது. “இந்த வாவி இரண்டு காரணங்களினால் தனித்துவம் வாய்ந்தது. முதலாவது இந்த வாவியின் நீரோட்டம் கடலிலிருந்து நிலத்திற்கும் நிலத்திலிருந்து கடலுக்குமாக வருடத்திற்கு இரு முறை திசைமாறும். அடுத்தது காலநிலை மாற்றத்திற்கமைய வாவி சுருங்கி விரியும். அதாவது, வெயில் காலத்தில் வாவியின் பரப்பளவு சுருங்கும். மழைக்காலத்தில் நான்கு மடங்குகளாகப் பரப்பளவு பரந்து விரியும்.”

“ஹா...!!”

பல மாணவர்கள் தங்கள் வியப்பை ஒருமித்துத் தெரிவித்தனர்.

“என் குடும்பத்திற்கு இதனால் என்ன தனிப்பட்ட இலாபம்?” மஹிந்தன் கேட்டது.

“இந்த வாவியில் வாழும் நாங்கள், இந்த மாற்றங்களைப் புரிந்து கொள்ளவேண்டும். ஏற்படும், ஏற்படப்போகும் மாற்றங்களைப் புரிந்துகொண்டால்தான் பாதுகாப்பாக சமூகத்துடன் வாழலாம்.” ஓங்காரம் பெருமூச்சுடன் பதிலளித்தது.

“எந்தெந்தக் காலங்களில் வாவியின் நீரோட்டம் திசைமாறும் சேர்?” அலெக்ஸாண்டர் கேட்டது.

“நவம்பர் மாதம் தொடங்கி மே மாதம் வரை நீரோட்டம் கடலை நோக்கி தெற்குத் திசையில் இருக்கும். ஜூன் மாதம் தொடங்கி ஒக்டோபர் மாதம் வரை வடக்கு நோக்கி வாவியின் உட்பக்கமாக



**நீரில் மாட்டு வண்டில் சவாரி**

இருக்கும். இந்த நீரோட்ட மாற்றம் கம்போடிய கலாசாரத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. அத்துடன் உலகப் பெருங்கோயிலான ‘அங்கோர் வாட்’ உருவாகவும் காரணமாக அமைந்தது.”

“அங்கோர்.... அங்கோர்.... அங்கோர்....” அனைத்து மாணவர்களும் ஆரவாரித்தனர். அவர்கள் ‘அங்கோர்’ பற்றி அறிந்து வைத்திருந்தனர்.

“பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், இந்திய உபகண்டத்து மக்கள் கடற்பயணம் மேற்கொள்ளும்போது, கடலுடன் கலந்திருக்கும் ‘டொன்லே ஸெப்’ வாவியைக் கண்டிருக்கிறார்கள். வாவியின் உள் நோக்கிய நீரோட்டம் அவர்களைப் பல கிலோமீற்றர் கம்போடியாவினுள் அழைத்து வந்திருக்கிறது. கம்போடியாவிற்குள்ளே வந்தவர்கள் நீரோட்டம் மாறும்வரை பல மாதங்கள் கம்போடியாவிலேயே தங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அவர்கள் தங்கியிருந்த காலத்தில் அவர்களின் கலைகளையும் பழக்க வழக்கங்களையும் கம்போடிய மக்களுக்குச் சொல்லித் தந்திருக்கிறார்கள். இவ்வாறு பல காலம் தொடர்ந்து நடந்திருக்கிறது. அவ்விளைவின் ஒரு பெரும் பேறே விஷ்ணு பெருமானுக்கான ‘அங்கோர் வாட்’.

“சேர்... விஷ்ணு என்றால் யார்?” நெல்சன் மண்டேலா கேட்டது.

“உலகத்தைக் காக்கும் கடவுள். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருப்பாற்கடலைக் கடையும்போது எம்பெருமான் விஷ்ணு, எங்கள் மூதாதையர் ஒருவராக கூர்ம அவதாரம் எடுத்தார்”. ஓங்காரம் தலை தாழ்த்தி வணங்கியபடி கூறியது. அதன் கண்களில் நீர் பனித்தது.

◐ ◐ ◐

மனைவி திகைத்துப்போய் நின்றாள்.

அவளுக்கான இந்தச் சுற்றுலாப் பயணத்தில் அவளைப் பல வாகனங்களில் ஏற்றியிருந்தேன். கார், பஸ், புகையிரதம், 'ட்ராம்' (Tram), விமானம், படகு, கேபில் கார்.. எனப் பல வகையான வாகனங்கள். அதன் உச்சக்கட்டமாக தற்பொழுது மாட்டு வண்டில் பயணம்!

கம்போடியாவின் இயற்கைச் சுரங்கமான 'டொன்லே ஸெப்' வாவியில் அமைந்துள்ள 'மிதக்கும் கிராம'த்திற்குப் போவதே எங்கள் திட்டம்.

'டொன்லே ஸெப்' வாவியிலே Kampong Phloek எனும் மிதக்கும் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தை அடையும் பயணம், மூன்று பகுதிகளைக் கொண்டது. காரில் 'டொன்லே ஸெப்' வாவியின் கரைக்குச் செல்வது. அடுத்த இரண்டு கிலோமீற்றர் தூரம் காரிலோ அல்லது படகிலோ செல்லமுடியாது. இந்த இடைப்பட்ட தூரத்தில் முழந்தாழளவிற்கு வாவி நீர் காணப்படும். இந்தத் தூரத்தை மாட்டு வண்டில்களில் கடக்க வேண்டும். அதற்கான கட்டணம் மூன்று அமெரிக்க 'டொலர்'. இறுதிக்கட்டமானது மோட்டார் பூட்டிய படகில் கரையிலிருந்து 16 கிலோமீற்றர் தொலைவில் வாவியின் நடுவே அமைந்திருக்கும் Kampong Phloek எனும் மிதக்கும் கிராமத்தை அடைவது. மோட்டார் படகிற்கான கட்டணம் 15 அமெரிக்க 'டொலர்'.

செழித்து கொழுத்திருந்த மாட்டை மனைவி பார்த்தபடி இருந்தாள். அவள் மாட்டு வண்டிலில் ஏறுவதாகத் தெரியவில்லை. "உன்ர கொப்பாட்டன் இதிலேதான் போயிருப்பார்…." என்று கூறி அவளை அணைத்துத் தூக்கி மாட்டு வண்டிலில் இருத்தினேன். மகனையும் தூக்கிக் கொண்டு நானும் ஏறிக்கொண்டேன். அடுத்து 'கிரிஷ்' ஏறிக்கொண்டார்.

"ஹய்…. ஹய்….. ஹய்………"

எமது சவாரி தொடங்கியது.

இருமருங்கிலும் நீரினால் சூழப்பட்ட வீடுகள் காணப்பட்டன. ஒவ்வொரு வீடும் இரண்டு மாடிக் கட்டடத்தின் உயரத்தைக் கொண்டது. அனேகமான வீடுகள் மரத்தினால் அமைக்கப்பட்டிருந்தன. பெரியவர்கள் தங்கள் அன்றாட வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். குழந்தைகள் வீட்டு முற்றத்தில், அதாவது ஊத்தைத் தண்ணீரில் குதித்துப் பாய்ந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். தண்ணீர் என்று கூறினாலும், அவ்வளவும் ஊத்தைக் கலங்கல் தண்ணீர். என்னுள் பல கேள்விகள் அலை மோதின.

‘குடிப்பதற்கு எதைப் பயன்படுத்துவார்கள்? சமைப்பதற்கு எதைப் பாவிப்பார்கள்? குளிப்பதற்கு? உடைகள் துவைப்பதற்கு? மலசலம் எங்கு கழிப்பார்கள்? எதனால் கழுவுவார்கள்? எங்கு கழுவு வார்கள்?’

மனதை அரிக்கும் கேள்விகளில் சிலவற்றைக் ‘கிரிஷி’டம் கேட்டேன்.

மனுஷன் சிரித்தவாறே தண்ணீரைக் காட்டி ஆங்கிலத்தில் பதிலளித்தார். “எல்லாம் இதிலேதான்”. எனக்கு வயிற்றைக் குமட்டிக்கொண்டு வந்தது.

எங்களைப் போன்ற பல சுற்றுலாப் பயணிகள் மாட்டு வண்டில்களில் பயணித்தவண்ணம் இருந்தார்கள். அவர்களில் அனேகமானவர்கள் வெள்ளைக்காரர்கள்.

மாட்டு வண்டில் பயணத்தை முடித்துக்கொண்டு, மோட்டார் பூட்டிய படகில் ஏறி Kampong Phloek எனும் மிதக்கும் கிராமத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தோம்.

கம்போடியாவில் உள்ளதுபோன்று வீடுகள் நீரினால் சூழப்பட்டி ருப்பதைப் பார்த்த பிறிதொரு அனுபவமும் என் ஞாபகத்தில் வந்தது.

எமது இலங்கையை ஆண்டவர்கள் **ஒல்லாந்தர்கள்.** கொழும்புக் கோட்டைப் பிரதேசத்தில் ஒல்லாந்தர்களைப் பற்றிய சிறியதொரு நூதனசாலை உள்ளது. இந்த நூதனசாலை பற்றி பலருக்குத் தெரியாது. சில ஆண்டுகளுக்கு முன்னர் மனைவியை அழைத்துச் சென்று இந்த நூதனசாலையைக் காட்டியிருந்தேன். இந்த நூதனசாலைக்குச் சென்று ஒல்லாந்தர் பற்றிப் பல தகவல்களைப் படித்து தெரிந்து கொண்டேன். எம்மை ஆண்டவர்களைப் பார்க்கவேண்டும் என்ற அவாவில் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒல்லாந்த நாட்டிற்கு பெல்ஜிய (Belgium) நாட்டினூடகச் சென்றிருந்தேன். நெதர்லாந்து (Netherlands) நாட்டின் ஒரு பகுதியே ‘ஹொலந்து’ (Holland) ஆகும். ஆனால் பலர் நெதர்லாந்து நாட்டைக் குறிப்பதற்கு ‘ஹொலந்து’ (ஒல்லாந்து) என்றே பயன்படுத்தி வருகின்றார்கள்.

நெதர்லாந்து நாட்டின் தலைநகரம் அம்ஸ்ரடாமில் (Amsterdam) நீரினால் சூழப்பட்ட வீடுகளையும், முழுமையாக மிதந்து கொண் டிருக்கும் வீடுகளையும் பார்த்து அதிசயத்துப்போனேன்.

அம்ஸ்ரடாம் நிலப்பரப்பானது கடல் மட்டத்தில் இருந்து இரண்டு மீற்றரே உயரமானது. இதனால் நிலப்பரப்பின்மீது கடலின் தாக்கம் அதிகம் காணப்படும். ஆகவே அம்ஸ்ரடாம் நகரத்தைச் சுற்றி கடலுடன் இணைக்கும் நான்கு கால்வாய்களை



Kampong Phloek - **மிதக்கும் கிராமம்**



Kampong Phloek - **மிதக்கும் கிராமம்**



**வீட்டு முற்றத்தில் விளையாடும் குழந்தைகள்**

(Canals) அமைத்துள்ளார்கள். இதனால் கடலினது நிலத்தின் மீதான வீரியம் குறையும். அம்ஸ்ரடாம் நகரத்தில் கால்வாயினூடான படகுப் போக்குவரத்தே முதன்மையான போக்குவரத்தாக அமைந் திருந்தது.

அம்ஸ்ரடாமில் இந்தக் கால்வாய் அமைப்பைப் பார்த்துத் திரும்பிய எனக்கு கொழும்பில் வெள்ளவத்தை-நாரஹேன்பிட்டி-பம்பலப்பிட்டியில் உள்ள தூர்ந்திருக்கும் கால்வாய்களின் நோக்கம் தெரிந்தது. ஒரு காலத்தில் கொழும்பிலும் இந்தக் கால்வாய்கள் போக்குவரத்தின் பொருட்டே வெள்ளையர்களால் அமைக்கப் பட்டன. ஆனால் எம்மவர்களுக்கு அதைப் பராமரிக்கவோ பாவிக் கவோ தெரியவில்லை. தற்பொழுது இக்கால்வாய்கள் தூர்ந்து விட்டன. 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஏழு வயதுக் குழந்தை துஷ்யந்தினியை பாலியல் துஷ்பிரயோகம் செய்து இந்தக் கால்வாயில் வீசிக் கொன்றதை யாராலும் மறந்திட முடியாது.

இந்த மோட்டார் படகுப் பயணம் எனக்கு இன்னமொரு இடத்தையும் ஞாபகப்படுத்தியது. கொழும்பிலிருந்து காலி நோக்கிச் செல்கையில் **பலப்பிட்டிய** எனும் இடம் அமைந்துள்ளது. இங்கு 'மாது' கங்கை, கடலுடன் கலக்கின்றது. இந்நதியில் உள்நோக்கி இரண்டு கிலோமீற்றர் மோட்டார் படகில் பயணித்தால் மிகவும் அற்புதமான இயற்கையின் படைப்பைக் காணலாம். 'மாது' கங்கையில் 25-30 தீவுகள் காணப்படுகின்றன. பாம்பு தீவு, கறுவா தீவு, நாய் தீவு, ஐந்து சத தீவு, பன்சல தீவு என்று அடுக்கிக் கொண்டே செல்லலாம். தமிழர்கள் இந்த இடத்திற்கு அதிகம் சுற்றுலாச் செல்வதில்லை. என் குடும்பத்தார் அனைவரையும் பல தடவைகள் இங்கு அழைத்துச் சென்று காட்டியிருக்கிறேன்.

நான் மனைவிக்கு 'டொன்லே ஸெப்' வாவிக்கும் 'அங்கோர் வாட்'டிற்கும் இடையிலான தொடர்பை விபரித்தவண்ணம் வந்தேன்.


"அப்பா... இந்த வாவிக்கு இவ்வளவு தண்ணீர் எங்கிருந்து வருகிறது?"

"உன்னுடைய சிவபெருமான் அனுப்பி வைக்கிறார்...."

"சும்மா விளையாடாமல் சொல்லுங்கோவன்..."

"உண்மையைத்தான் சொன்னேன். சிவபெருமான் எங்கிருக்கிறார்?"

"கயிலை மலையில்" மனைவி அடித்துக் கூறினாள். அவளுக்கு அதில் எந்தச் சந்தேகமுமே இல்லை!




Amsterdam **கால்வாய்களைக் காட்டும் வரைபடம்**

*“கயிலை மலை இருப்பது இமய மலைத் தொடரிலாகும். இமய மலையில் உருவாகும் Mekong என்ற நதியினாலேதான் இந்த வாவி நிரம்புகிறது”*

*“என்ன...?”*

*“ஆமாம் இமய மலையில் உருவாகும் Mekong நதி, முதலில் சீன தேசத்திற்கு வளம் கொடுத்து, தொடர்ந்து பர்மா, லாஓஸ், தாய்லாந்து நாடுகளுக்கூடாகப் பாய்கிறது. அடுத்து கம்போடியா வினுள் பிரவேசித்து ‘டொன்லே ஸெப்’ வாவியையும் நிரப்பிவிட்டு, இறுதியாக வியட்நாம் நாட்டில் கடலுடன் கலக்கின்றது.”*

*“.....” மனைவி பிரமிப்பால் மௌனித்தாள்.*

*“இது உலகத்தின் 12 ஆவது நீளமான நதி, அண்ணளவாக 4350 கிலோமீற்றர் தூரம் பாய்கிறது”*

*“.....” மீண்டும் மௌனம்.*

*மனைவி தன் பையைத் திறந்து மகனுக்குக் கொடுக்க ‘மைலோ’ மென்பானத்தை எடுத்தாள். அப்போது கம்போடிய பயண நினைவாக நான் மனைவிக்கு வாங்கிக்கொடுத்த ‘அப்சரஸ்’ மங்கை உருவைக் கொண்ட விலையுயர்ந்த ‘கீ ரக்’ (Key Tag) பைக்குள் இருப்பதை மகன் கண்டுவிட்டான். “தா.... தா...” என்று அடம் பிடிக்கத் தொடங்கினான். மனைவி அதனை மகனின் கையில் கொடுத்துவிட்டாள். அதன்பின்னர்தான் அவன் ‘மைலோ’வை குடிக்கத்தொடங்கினான்.*



**‘மாது’ கங்கை – பலப்பிட்டிய**

*Kampong Phloek* மிதக்கும் கிராமம் உண்மையில் மிதக்கும் கிராமம் அல்ல. ஆனால் அக்கிராமத்தைப் பார்ப்பது வாழ்வில் மறக்க முடியாத அனுபவம். அவ்வீடுகள் 10 - 15 அடி உயரமான மரத்தூண்களின்மேல் கட்டடப்பட்டிருந்தன. தூண்கள் முற்றாக வாவியில் மூழ்கி, வீடுகள் மிதப்பது போலவே காட்சியளித்தன. வாவியில் நீர் வற்றும் காலங்களில் அத்தூண்கள் நன்றாக வெளியே தெரியுமாம். அக்கிராம மக்கள் முற்று முழுதாக நன்நீர் மீன்பிடித்தலிலேயே தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

எங்கள் படகு அக்கிராமத்தை வலம் வந்தது. மிதக்கும் கோயில், மிதக்கும் கடை, மிதக்கும் பாடசாலை, மிதக்கும் அரசியல் கட்சியொன்றின் அலுவலகம் என அனைத்துமே அங்கு காணப்பட்டன. என்னை மிகக் கவர்ந்த விடயம் மிதக்கும் பொலிஸ் நிலையமே!

‘டொன்லே ஸெப்’ வாவி சமுத்திரத்தைப் போன்று பரந்து விரிந்திருந்தது. எவ்வாறு நைல் நதி எகிப்து சாம்ராஜ்யத்தை உருவாக்கியதோ, அதேபோன்று ‘டொன்லே ஸெப்’ வாவியின் வளம் கெமர் சாம்ராஜ்யத்திற்கு வழிவகுத்தது. அதிசயமான ‘டொன்லே ஸெப்’ வாவியின் நீரோட்ட மாற்றம், இந்துக் கலாசாரம் கம்போடியாவில் வேரூன்றி ‘அங்கோர் வாட்’ ஆக விஸ்வரூபம் எடுக்க வாய்ப்பளித்தது. அனைத்தும் இயற்கையின் திருவிளையாடலே.

மகன் கையிலிருந்த ‘கீ ரக்’கை வாவியினுள் வீசிவிட்டான். உடனே மனைவி நான் ஏசப் போகின்றேனோ என்று என்னைப் பார்த்தாள். **இலங்கையர்கோனின் ‘வெள்ளிப் பாதசரம்’** கதையில் வரும் செல்லையாவாக, ‘கொஞ்சம் கவனமாக வாறதுக்கென்ன? உனக்கு ஆட்டம் மெத்திப் போச்சு’ என்று அவதாரம் எடுக்கப்போகிறேனோ



**100 ஆண்டுகளுக்கு முன்னர் வெள்ளவத்தைக் கால்வாயின் தோற்றம்**




Mekong **நதி**

என எண்ணிவிட்டாள் போலும். எனக்கு ஏனோ ஏசத் தோன்றவில்லை. ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம்.

இருவரும் சிரித்துவிட்டோம்.

இருவரின் சிரிப்பிலும் நிறைவு இருந்தது.

அப்சரஸ் 'கீ ரக்' வாவியினுள் அமிழ்ந்து கொண்டிருந்தது.

❍ ❍ ❍

"ஒடுங்கள் ஒடுங்கள்.... மேலிருந்து மனித அரக்கர்கள் எதையோ போடுகிறார்கள்....." ஓங்காரம் மாணவர்களைப் பார்த்து ஓலமிட்டது. அடுத்த கணத்தில் வகுப்பில் யாரையும் காணவில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு திக்கிற்கு ஓடிவிட்டார்கள். ஆனால் வயது முதிர்ந்த ஓங்காரம் மட்டும் அசையவில்லை. அதன் கண்கள் மேலிருந்து




**உயர்வகுப்பு மாணவர் பயிலும் பாடசாலை – மிதக்கும் கிராமம்**



**கம்போடியா மக்கள் கட்சி அலுவலகம் – மிதக்கும் கிராமம்**



**பொலிஸ் நிலையம் – மிதக்கும் கிராமம்**

அமிழ்ந்து கொண்டிருக்கும் பொருளைப் பார்த்தவண்ணம் இருந்தன. ஓங்காரத்தின் கெட்ட காலம், அதற்கு நேரே மேலே அந்தப் பொருள் விழுந்து கொண்டிருந்தது. ஓங்காரம் கண்களை மூடி விஷ்ணுவை வழிபடத் தொடங்கியது.

"ஓம் நமோ நாராயணா..."

விழுந்த பொருள் ஓங்காரத்தின் தடித்த (ஆமை) ஓட்டில் வந்து பட்டது. ஒளிந்து நின்று பார்த்துக்கொண்டிருந்தவர்கள் அனைவரும் "ஐயோ" என்று பதறினர். ஆமை ஓங்காரம், தன் தலையை உள்ளே இழுத்துக்கொண்டது.


ஆமை ஓட்டில் விழுந்த அந்தப் பொருள், பட்டுத் தெறித்து வாவியின் அடியில் விழுந்தது. மயான அமைதி அந்த இடத்தைச் சூழ்ந்து கொண்டது.

அசம்பாவிதம் ஒன்றும் நடைபெறாததால் சற்று நேரத்திற்குப் பின்னர் ஒவ்வொருவராக வகுப்பறையில் மீண்டும் கூடத் தொடங்கினர். ஓங்காரமும் தன் தலையை மெதுவாக வெளியே நீட்டியது.

அந்தப் பொருள் அப்சரஸ் உருவத்தில் அமைந்த ஒரு 'கீ ரக்'.

மீண்டும் வகுப்பு களை கட்டியது.

❍ ❍ ❍



**229 கிலோகிராம் எடையுள்ள ஓர் இராட்சத ஆமை**

# 9 நிறைவாக... ‘சியாம் ரீப்’ விமான நிலையத்தில்...

**2011 – ‘சியாம் ரீப்’ விமான நிலையம் (கம்போடியா)**

இலங்கையர் என்றதும் கம்போடியாவுக்குள் வரும்போது கிடைத்த அதே ‘இராஜ மரியாதை’ வெளியேறும்போதும் கிடைத்தது.

விசாரணைக் கேள்விகள்...

கடவுச்சீட்டு அதீத பரிசோதனைகள்...

படப்பிடிப்புகள்...

கைரேகைப் பதிவுகள்....

என்னையும், மனைவியையும், மகளையும் பயங்கரவாதிகள் அல்லர் என்று அவர்கள் ஒருவாறு கண்டுபிடித்திருக்கவேண்டும்! அவர்களின் கிரியைகளை முடித்துக்கொண்டு நாம் கம்போடியாவைவிட்டு வெளியேறிவிட்டதாக முத்திரை குத்தி அனுப்பினார்கள்.

காத்திருக்கும் அறைக்குள் நுழைந்த எம்மை, அங்கோர் கோயில் வாசலில் சந்தித்த இந்தியத் தம்பதிகள் எதிர்கொண்டனர்.

“என்ன பிரச்சினை?” பெரியவர் கேட்டார்.

நான் எமக்கு நடந்தவற்றைக் கூறினேன்.

“இப்போதுதான் இலங்கையில் பிரச்சினை முடிந்துவிட்டதே....?” அம்மையார் கேட்டார்.

“எதை பிரச்சினை என்கிறீர்கள்...? என்ன முடிஞ்சது....?” மனைவி முந்திக்கொண்டு கேட்டாள்.

“.....” மௌனம் அவ்விடத்தை நிரப்பிக்கொண்டது.



**‘சியாம் ரீப்’ விமான நிலையம் – இந்தியத் தம்பதிகள்**

“நீங்களும் மலேசியாவுக்கா போறீங்கள்...?” நான் கதையின் திசையை மாற்றினேன்.

தன் மனைவியின் அறுபதாவது பிறந்தநாளுக்கு கம்போடியா, மலேசியா என்று அவர் அழைத்துச் செல்கிறார். அவர்கள் என் மகனுடன் விளையாடத் தொடங்கினார்கள். சற்று நேரத்தில் விடை பெற்றுக் கொண்டு தூரத்தில் அமர்ந்துகொண்டார்கள்.

“அப்பா...நாங்களும் அறுபதாவது பிறந்தநாளுக்கு அங்கோரிற்கு திரும்பி வரவேண்டும்.”

‘இப்பதானே பார்த்தோம்...திருப்பி ஏன் வரவேண்டும்..?’ என்று என் மனதில் எழும்பிய பதிலை அடக்கிக் கொண்டு “ஓமோம் அதெற்கென்ன கட்டாயம் வருவோம்” என்று கூறி, என் மனைவியை மகிழ்வித்தேன்.

அவளுக்கு அப்போதைய தேவை அந்தப் பதிலே!!

John Grey, 1992இல் எழுதிய உலகப் பிரசித்தி பெற்ற ‘Men Are from Mars, Women Are from Venus’ எனும் நூல் பற்றி பலருக்குத் தெரிந்திருக்கும். ஏழு மில்லியன் பிரதிகளுக்கும் அதிகமாக விற்பனையாகி, அதிகம் விற்பனையாகிய நூல்களின் பட்டியலில் இடம்பெற்ற கணவன்-மனைவி, ஆண்-பெண் உறவுகள் பற்றிய நூல். இலங்கையில் இந்நூலை நிறையக் காலம் தேடித் திரிந்த என்னால் எங்கேயும் கொள்வனவு செய்ய முடியவில்லை. ஒருமுறை மலேசியாவிற்குச் சென்றிருந்தவேளை ‘கோலாலம்பூர்’ விமானநிலையத்தில் புத்தகக் கடையொன்றில் கொள்வனவு செய்திருந்தேன். அதை வாசித்தபின்,

John Grey

கணவன்-மனைவி உறவில் என்னால் ஏற்படக்கூடிய சச்சரவுகளை, பிரச்சினைகளை ஒரு சதவீதமாவது தவிர்த்துள்ளேன் என்றால் அது உண்மையே!

நூலின் சாராம்சம் இதுவே...

"ஆண்கள் செவ்வாய்க் கிரகத்துவாசிகள். பெண்கள் வெள்ளிக் கிர கத்துவாசிகள். அதாவது இருசாராரும் பிரத்தியேக தமக்கேயுரிய குணங் களையும் சிந்தனைப் போக்குகளையும் உடைய வெவ்வேறு கிரகவாசிகள் போன்றவர்கள். இரு சாராரும் பூமியில் வாழத் தொடங்கினார்கள். ஆனால் அவர்கள் பூமியில் ஒன்றாக வாழத் தொடங்கியதும் தாங்கள் வெவ்வேறு கிரகத்திலிருந்து வந்தவர்கள் என்பதை மறந்துவிட்டார்கள். அன்று தொடங்கியதே ஆண்-பெண் உறவில் சண்டைகள். ஒவ்வொரு ஆணும் தன்னைப் போன்றே பெண் சிந்திக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு பெண்ணும் தன்னைப் போன்றே ஆண் சிந்திக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

| year | deaths | accidents |
|---|---|---|
| 2011 | 828 | 117 |
| 2010 | 1,115 | 130 |
| 2009 | 1,103 | 122 |
| 2008 | 884 | 156 |
| 2007 | 971 | 147 |
| 2006 | 1,294 | 166 |
| 2005 | 1,459 | 185 |
| 2004 | 771 | 172 |
| 2003 | 1,230 | 199 |
| 2002 | 1,413 | 185 |
| 2001 | 4,140 | 200 |
| 2000 | 1,582 | 189 |
| 1999 | 1,138 | 211 |

**ACRO வின் விமான விபத்து புள்ளிவிபரம்**

உதாரணமாக பெண்கள் தமக்கேதும் பிரச்சினை என்றால் அதிகமாக பேசத் தொடங்கிவிடுவார்கள். அந்தப் பேச்சிலே அவர்களின் பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிடமாட்டார்கள். அவர்களின் உண்மைப் பிரச்சினையைக் கண்டுபிடிக்கவேண்டியது ஆண்களின் கடமை! இதேதருணம் ஆண்கள் தமக்கேதும் பிரச்சினை என்றால் தனிமையை விரும்பி பேச்சைக் குறைக்க முனைவார்கள். இந்த அடிப்படை வித்தியாசத்தை இருவரும் புரிந்துகொள்ளாவிடில் பூகம்பமே.

John Grey ஆண்-பெண் உறவு சார்ந்து மேலும் பல நூல்களையும் எழுதியுள்ளார்.

நான் 'ஏர் ஏசியா' (Air Asia) எனும் 'பட்ஜெட்' விமானத்தை இணையத்தினூடாகப் பதிவு செய்திருந்தேன். 'பட்ஜெட்' விமான மாகையால் அவர்கள் உணவேதும் தரமாட்டார்கள். கம்போடியாவின் 'சியாம் ரீப்' விமான நிலையத்திலிருந்து மலேசியாவின் 'கோலாலம்பூர்' விமான நிலையத்திற்கு பயணநேரம் ஒரு மணித்தியாலம். 'பட்ஜெட்' விமானமாகையால் நாம் கொண்டு செல்லும் பொதிகளின் நிறையைப் பொறுத்தே பணம் அறவிடுவார்கள். பயணச் செலவுகளை குறைப்பதற்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் இப்பயணத்தில் மேற்கொண்டிருந்தேன். குடும்பத்துடன் தாய்லாந்து, கம்போடியா, மலேசியா, சிங்கப்பூர் என்று நான்கு நாடுகளுக்குச் செல்லவிருப்பதால் செலவில் மிகவும் கவனமாக இருந்தேன்.

விமானம் புறப்பட இன்னும் நேரம் இருப்பதால், மகனுக்கு 'போக்குக் காட்ட' எனது தோற் பையிலிருந்து IPadஐ எடுத்து படம் போட்டேன். National Geographic Channel லில் திரையிட்ட Air Crash Investigation எனும் விமான விபத்துகள் பற்றிய தொடரை IPadல் வைத்திருந்தேன். ஐம்பதிற்கும் மேற்பட்ட விமான விபத்துக்களின் காரண காரியங்களை தொடராகப் படமாக்கியிருந்தார்கள். ஒவ் வொரு விபத்துப் பற்றியும் ஒரு மணித்தியாலத்திற்கு அற்புதமாகப் படமாக்கியிருந்தார்கள். மகன் தன் பிஞ்சு விரல்களால் அவற்றில் ஒன்றைத் தெரிந்தான். அது 1977ல் ஆபிரிக்காவிற்கு 100 கிலோமீற்றர் கிழக்கில் அமைந்துள்ள Canary தீவுகளில் நடைபெற்ற விபத்து. Los Angeles இல் இருந்து புறப்பட்ட விமானமொன்றும் Amsterdam இல் இருந்து புறப்பட்ட விமானமொன்றும் பனிமூட்டக் காலநிலை காரணமாக Canary தீவுகளில் தரையிறங்கும். அவை புறப்படும்போது ஓடுபாதையில் ஒன்றோடொன்று மோதி 583 உயிர்களை அதே இடத்தில் காவு கொண்ட பரிதாப நிகழ்வு. இருபதாம் நூற்றாண்டில் இடம்பெற்ற விமான விபத்துக்களில் அதிக சேதத்தை ஏற்படுத்தியதாக இவ்விபத்து குறிக்கப்பட்டுள்ளது.[09-01]

எங்கள் விமானம் புறப்பட இன்னும் 30 நிமிடங்கள் இருந்தன.

"உதை ஏன் இப்ப பாக்கிறீங்க?" மனைவி கேட்டாள்

"நான் போடவில்லை, உன்ர மோன்தான் போட்டான்" என்று கூறி மகனைப் பார்த்தேன்.

படத்தில் இரண்டு விமானங்கள் மோதி எரிவதைப் பார்த்து மகன் கைதட்டினான். மனைவி முகம் சுழித்தாள். Aircraft Crashes Record Office (ACRO) [09-02] தகவலின்படி ஒருவருடத்திற்கு அண்ணளவாக 100-200 வரையிலான விமானங்கள் விபத்துக்குள்ளாகி 1000-2000 மக்கள்

உயிரிழக்கிறார்கள், என்ற தகவலை அவளுக்கு நான் முன்னொரு தடவை கூறியிருந்தேன். அது அவளுக்கு ஞாபகம் வந்திருக்க வேண்டும்.

விமானத்தில் ஏறத் தொடங்கினோம்.

இறுதிப் படியில் ஏறிய நான் திரும்பிப் பார்த்தேன்.

சூரியவர்மன், ஜெயவர்மன், பண்டிதர் திவாகர் ஆகியோர் என்னைப் பார்த்துக் கையசைத்தனர்.

ஆகாயத்தைப் பார்த்தேன்.

ஆதிசேஷனில் விஷ்ணு பகவான் மகாலக்ஷ்மியுடன் சயனத்தி லிருந்தார்.

விமானத்துக்குள் நுழைந்துவிட்டேன்.

விமானம் கம்போடியா தரையை விட்டுக் கிளம்பிப் பறக்கத் தொடங்கியது.

"இப்போது அங்கோர் கோயில் தெரியுமா..?" மனைவியின் ஆதங்கம்.

"இல்லை.. நாங்கள் எதிர்த் திசையில் பறக்கிறோம்."

"ஐயையோ...! நா(நீ)ங்கள் எந்தக் கோயிலிலும் அர்ச்சனை செய்யவில்லையே!"

"இன்று பின்னேரம் மலேசியாவிலுள்ள **பத்துமலை முருகன்** கோயிலுக்குப் போவோம். அங்கே அர்ச்சனை செய்யலாம்.

"வார்த்தையால் கூறமுடியாதளவு அங்கோர் கோயில் பெரி சப்பா..." கூறிவிட்டு என் வலதுதோளில் சாய்ந்து கொண்டாள். மனைவியின் குரலில் தன்னை அழைத்துச் சென்று 'அங்கோர்' உலகப் பெருங்கோயிலைக் காட்டியதற்கான நன்றிப் பெருக்குத் தெரிந்தது.

அவளை என் வலது கரத்தால் அணைத்துக் கொண்டேன்.

○ ○ ○

இந்தப் பிரபஞ்சம் விரிவடைந்துகொண்டு செல்கிறது. இந்த பிரபஞ்சத்தில் மில்லியன் கணக்கான 'கெலெக்ஸி'கள் (Galaxy) இருக்கின்றன. இந்தப் பிரபஞ்சத்திற்கு வெளியே இன்னமும் பல பிரபஞ்சங்கள் இருக்கலாம் என்று கூட கருத்துக்கள் தற்காலத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன. எமது பிரபஞ்சத்திலுள்ள மில்லியன் கணக்கான 'கெலெக்ஸி'களில் ஒரு சாதாரண 'கெலெக்ஸி'யே பால்வீதி (Milky Way) ஆகும். இந்தப் பால்வீதி 'கெலெக்ஸி'யில் பல நூறு கோடி நட்சத்திரங்கள் உள்ளன. அவற்றில் புறக்கணிக்கத்தக்க ஒரு சிறிய



**‘அங்கோர்’ உலகப் பெருங்கோயிலின் முன்னால் – மனைவி மகனுடன் கட்டுரையாசிரியர்**

*நட்சத்திரமே சூரியனாகும். சூரியனைச் சுற்றிவரும் பல கிரகங்களில் ஒரு கிரகமே எமது பூமியாகும். ஒவ்வொரு மனித உயிரும் பூமியில் வாழும் எழுநூறு கோடி மனித உயிர்களில் ஒன்றாகும்.*

*எம்மால் இந்த உலகத்தைப் புரியமுடியாது. புரிய வேண்டிய தேவையும் இல்லை!*

*உலகம் ஏராளம் ஏராளமான அதிசயங்களை தன்னகத்தே வைத்துக் கொண்டு ஒவ்வொருவனுக்காகவும் காத்துக்கொண்டிருக்கிறது.*

*மனிதன் இந்த உலகத்தில் காணும் ஒவ்வொரு அதிசயமும் அவனுக்கு அனுபவமாகி அவன் சிந்தனையை விரிவாக்குகிறது.*

*நான் பெரு மூச்சுவிட்டேன்.*

*என் உதடுகள் முணுமுணுத்தன..*

*‘அங்கோர்’ உலகப் பெருங்கோயில்...!!!*

❍ ❍ ❍

---

[09-01] - http://www.wired.com/thisdayintech/2009/03/march-27-1977-the-worst-air-disaster-ever/
[09-02] - http://en.wikipedia.org/wiki/Aviation_accidents_and_incidents

**(கம்போடியப் பயணம் முற்றிற்று)**

# வாசகர் கடிதங்கள்...

## ஞானம் 140

பாலச்சந்திரனின் அங்கோர் உலகப் பெருங்கோயில் பற்றி: அழகு தமிழில் அழகழகாய் எழுதி – எங்கோ எல்லாம் எங்களைக் கூட்டிச் சென்று இன்பத்துள் மூழ்க வைத்து விட்டு, இறுதியில் இரங்கவும் வைத்துவிட்டார் திரு.ஞா.பாலச்சந்திரன் அவர்கள். அவரது தமிழ் நடைக்கு எனது பாராட்டுக்கள்!

– *தளங்கிளப்பு வ.சின்னப்பா*

• • •

பாலச்சந்திரனின் "அங்கோர்" கம்போடிய பயணக் கட்டுரை அருமையாக இருக்கிறது. பயனுள்ள விடயங்களை உள்ளடக்கி ஆங்காங்கே நகைச்சுவை ததும்ப அமைந்திருப்பது சுவைத்தின்புற வைக்கிறது.

– *சட்டத்தரணி பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா, அவுஸ்திரேலியா.*

## ஞானம் 141

திரு.ஞா.பாலச்சந்திரனின் 'அங்கோர்' உலகப் பெருங்கோயில் பயண இலக்கியக் கட்டுரைத் தொடர் விறுவிறுப்பாக நகர்கிறது. வாசகர் உள்ளத்தைக் கவரும் விதமாக நகைச்சுவை இழையோட எழுதுவது ரசிக்கத்தக்கது.

– *கண.மகேஸ்வரன், நெல்லியடி.*

• • •

ஞா.பாலச்சந்திரனின் 'கம்போடிய பயண அனுபவம்' நாங்களே நேரில் சென்று பார்த்தது போல இருக்கிறது. அனுபவம் தொடரட்டும்.

– *அந்தனி ஜீவா, கொழுந்து ஆசிரியர்.*

• • •

ஞா. பாலச்சந்திரனின் பயணக்கட்டுரை புத்தனுவத்தைத் தருகிறது. கல்கி, மணியன் என பலரது பயணக்கட்டுரைகளை சிறுவனாகவும் வாலிபனாகவும் படித்தது ஞாபகத்திற்கு வந்தாலும், இது இளைய பரம்பரையினரின் புதிய பார்வை. விஞ்ஞான இணைய அறிவுகளுடன் சரித்திரம், பூகோளவியல், வானியல், போன்ற பல கலந்த தரவுகளுடன் புதிய வடிவில், மாற்று நடையில் இரசிக்கத்தக்கதாக உள்ளது. பல புதிய தகவல்களை அறிந்துகொண்டேன்.

– *எம்.கே.முருகானந்தன்.*

• • •

தகவல் தொழில்நுட்ப நிபுணர் ஞா.பாலச்சந்திரனின் பிரயாணக் கட்டுரை மிகவும் திட்டமிட்ட ஒரு படைப்பு என்பதில் முதலிடத்தைப் பெறுகிறது. தம்பதிகளுக்கிடையில் நான்கு சுவர்களுக்கு மத்தியில் இடம்பெறும் விடயங்களைக் கூட, முதலாவது அத்தியாயத்தில் நாசூக்காக வெளியிட்ட அதேசமயத்தில், 2ம் அத்தியாயத்தில் தாம் ஒரு தகவல் தொழில்நுட்ப நிபுணர் மாத்திரமல்ல இலக்கியத்திலும் – மகாவித்துவான் கணேச ஐயர் மற்றும் மஹாஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள், சமஸ்கிருத பேராசிரியர் ஸ்ரீராமையர் ஆகியோரின் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதையும் அவர் நிரூபித்துள்ளார். புராதன கால வரலாற்றையும், சமகால பிரயாண நிகழ்வுகளையும் சாதுரியமாக அதேசமயத்தில் ருசிகரமாக இணைத்து கட்டுரையை கொண்டு செல்லும் பாங்கு எல்லோருக்கும் வந்துவிடாது. பாலச்சந்திரனுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

– *ஸெ.நடராஜன், அன்டர்சன் மாடிவீடு, கொழும்பு – 05.*

## ஞானம் 142

திரு.ஞா. பாலச்சந்திரன் தமது கம்போடிய பயண அனுபவங்கள் பற்றி ஞானம் சஞ்சிகையில் எழுதிவரும் கட்டுரைகளைப் படித்து வருகிறேன். மிக ஆழமும் அறிவும் நிறைந்த ஓர் அற்புதமான கட்டுரை அது. 'அங்கோர்' உலகப் பெருங்கோயிலின் அமைப்பையும் அழகாகவும் வரலாற்று அடிப்படையில் விஞ்ஞான பூர்வமாகவும் கலாபூர்வமான மொழிநடையுடனும் எழுதிவருகிறார். கோயிலின் கட்டடக்கலை வரலாற்றிலே மிகவும் அதிசயம் நிறைந்த அங்கோர் ஆலயத்திற்கு எங்களையும் அழைத்துச் சென்று காண்பிப்பது போன்ற ஒரு பரவச நிலை எமக்கு இந்தக் கட்டுரை தருகிறது. அறிவியற்கலைகள் பலவற்றின் சங்கமத்தையும் அழகியல் கலைகளின் நேர்த்தியையும் பிரமாண்டத்தையும் தரிசனம் செய்யும் வாய்ப்பினை பாலச்சந்திரன் அவர்கள் எமக்குத் தந்துள்ளார். அவரது ஆழமான தேடலுக்கு எமது பாராட்டுக்கள்.

*– சித்ரா சின்னராசன், அல்வாய்.*

• • •

ஞா.பாலச்சந்திரன் அவர்களால் எழுதப்பட்டுவரும் பயணக் கட்டுரையினைத் தொடர்ந்து வாசித்து வருகிறேன். "அங்கோர் பெருங்கோயிலை" நேரில் தரிசித்தது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. இவரது எழுத்துப் பணி மென்மேலும் சிறக்க நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*– கா. தவபாலச்சந்திரன், பேராதனை*

## ஞானம் 143

'அங்கோர் உலகப்பெருங்கோயில்'– ஞானம் கையில் கிடைத்ததும் முதல் திருப்பிப்பார்ப்பது அந்தப் பக்கம்தானே! பாலச்சந்திரன் தொடர்ந்தும் தந்துகொண்டே இருங்கள். குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டும் இன்றைய சில எழுத்தாளர்களுக்கு நல்ல படிப்பினையாகிறது உங்கள் பயண அனுபவங்கள்.

*–சமரபாகு சீனா உதயகுமார்*

## ஞானம் 144

ஞா.பாலச்சந்திரன் அவர்களின் கட்டுரையாக்கம் விளக்கமான விளம்புதலின் வழி மிக அருமையாக தொடர்செய்கிறார். இந்து சமயம் கம்போடியாவின் உச்ச நிலை கொண்டது முதல் அதன் வீழ்ச்சி வரையான சம்பவ நிகழ்வுகளை மனம் பதியும் வண்ணம் விபரிப்பு செய்கிறார். அத்தோடில்லாமல் "நம்மவர்கள் எல்லாவற்றையும் தொடக்கி வைப்பதில் கெட்டிக்காரர் ஆனால் அவற்றை நிலை நிறுத்தவோ சரிவர செய்து முடிக்கவோ தெரியாதவர்களென்று" நம்மினத்திற்கு சாட்டையடி கொடுத்திருக்கிறார்

*– அல்வாயூர் கலைப்பருதி*

## ஞானம் 145

கம்போடிய பயண அனுபவங்கள் என்ற கட்டுரையில் கங்கை கொண்ட சோழீச்சரம், தஞ்சை பெரியகோயில், முருகதேஸ்வர கோயில் ஆகிய கோயில்களின் புகைப்படங்களை ஒரே பக்கத்திற் பார்த்து ரசிக்கும்போது பிரமிப்பாக இருக்கின்றது. திரு. ஞா. பாலச்சந்திரன் அவர்களின் முயற்சி தொடர எனது வாழ்த்துக்கள்.

*– கா. தவபாலன், கண்டி.*

• • •

ஞா. பாலச்சந்திரனின் கம்போடிய பயண (இலக்கியம்) கட்டுரையைப் படிக்கிறபோது, காலம், வெளி கடந்து மக்கள் வாழ்வியல் சமயமும், பண்பாடும் வகிக்கும் செல்வாக்கைப் பற்றிய சிந்தனை அலைகள் படர்ந்தன. மணியன், சிவசங்கரி, வாஸந்தி வரிசையில், பயண இலக்கிய உலகில் 'பாலா'வும் முத்திரை பதிப்பார் என நம்பிக்கை பிறக்கிறது. புகைப்படங்களுக்கும், நேர், சீரான குறிப்புகட்கும் பின்னாலுள்ள உழைப்பும் புலனாகிறது.

*– சந்திரசேகரன் சசிதரன், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்.*

## ஞானம் 149

ஞா. பாலச்சந்திரன் எழுதிவந்த ‘அங்கோர் உலகப் பெருங்கோயில்’ பயண இலக்கியக் கட்டுரை அற்புதம்... அற்புதம். அவரை இப்படியான இன்னொரு தொடரை எழுதச் செய்யுங்கள்.

– அகளங்கன் வவுனியா

• • •

பாலச்சந்திரனின் பயண இலக்கியம் ஈழத்துப் பயண இலக்கியத் தொடர்களை யெல்லாம் புறந்தள்ளி ஒரு பயண இலக்கியம் எப்படி அமைய வேண்டும் என்பதைக் காட்டிநிற்கிறது.

– செல்லத்துரை சுதர்சன்

## ஞானம் 151

கம்போடிய பயணக்கட்டுரை மிகவும் பயனுள்ளது மட்டுமல்ல நன்றாக எழுதப்பட்டும் உள்ளது – பாராட்டுக்கள் கட்டுரையாளருக்கு. சபாஷ்! ஞா. பாலச்சந்திரன்.

– திருமதி யோகா பாலச்சந்திரன் (கனடா)

## தினகரன் 18-11-2012

‘அங்கோர்’ உலகப் பெருங்கோயில் என்ற பயண இலக்கியத் தொடர், இதழ் 139இல் ஆரம்பித்தது. இளைஞர் ஞானம் பாலச்சந்திரன், ஒன்பது மாதங்கள் வரை இதனைச் சுவைபட எழுதிவந்தார். எழுத்தாளரான அமரர் ‘சாவி’யினுடைய ‘இங்கே போயிருக்கிறீர்களா?’ என்ற பயண இலக்கியம் நெஞ்சைவிட்டு அகலாதது. பாலச்சந்திரனின் எழுத்து நடையும் அவ்வாறானதொன்றே.

– வசந்தி தயாபரன் (தகவம்)

## மின்னஞ்சலில்

அன்புள்ள பாலச்சந்திரன், என் வீட்டுக்கு ஞானம் வருகிறது. ஏற்கனவே உங்கள் கட்டுரைத்தொடரை வாசித்து வருகிறேன். சிறப்பாக எழுதுகிறீர்கள். பாராட்டுக்கள். ஆங்கோர் வாட் என் கனவுப்பூமி. ஒருநாள் செல்ல வேண்டுமென நினைத்திருக்கிறேன்.

– ஜெயமோகன், எழுத்தாளர் (இந்தியா)

### ஞா. பாலச்சந்திரன் பங்குபற்றிய தமிழ் மாநாடுகளும் கருத்தரங்குகளும்

2013 – ‘இலங்கை தமிழ் தகவல் தொழிநுட்ப அமையம்’ நடத்திய “நுட்பம்” மாநாடு – சிறப்புப் பேச்சாளர் (யாழ்ப்பாணம் – இலங்கை)

2013 – ‘உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்’ நடத்திய “அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள்” தேசியக் கருத்தரங்கம் – கட்டுரையாளர் (தரமணி – இந்தியா)

2012 – ‘கொழும்புத் தமிழ்ச் சங்கம்’ நடத்திய “உலகத் தமிழ் இலக்கிய மாநாடு” – அரங்கத் துணைத் தலைவர் (கொழும்பு – இலங்கை)

2011 – “உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாடு” – கட்டுரையாளர் (கொழும்பு – இலங்கை)

2009 – “தமிழ் இணைய மாநாடு” (8ஆவது) – கட்டுரையாளராகவும் அரங்கத் தலைவரா–கவும் (கொலோன் – ஜேர்மனி)

2008 – “தமிழ் யுனிகோட்– தென் ஆசியா கலந்துரையாடல்” – இலங்கை அரசின் பிரதிநிதி (தரமணி – இந்தியா)

2006 – ‘உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்’ நடத்திய “10 ஆவது உலகத் தமிழ் மாநாடு”– கட்டுரையாளர் (கோலாலம்பூர் – மலேசியா)

# ஞானம் பதிப்பக வெளியீடுகள்...

- **2013 - ‘அங்கோர்’ உலகப் பெருங்கோயில்** (பயண இலக்கியம்) – ஞா. பாலச்சந்திரன்
- **2013 - சாஹித்திய ரத்னா செங்கை ஆழியான் நேர்காணல்** – ஞானம்
- **2012 - ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழ்** – ஞானம் 150ஆவது இதழ் (600 பக்)
- **2012 - இன்னுமோர் உலகம்** (சிறுகதைகள்) – கொற்றை பி. கிருஷ்ணானந்தன்
- **2010 - கண்ணின் மணி நீயெனக்கு** (நாவல்) – அகில்
- **2009 - வேரோடி விழுதெறிந்து** (கட்டுரைகள்) – என். செல்வராஜா
- **2009 - கருமுகில் தாண்டும் நிலவு** (சிறுகதைத் தொகுப்பு) - கலாபூஷணம் புலோலியூர் சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2007இல் பரிசு பெற்ற சிறுகதைகள் – தொகுப்பாசிரியர் தி.ஞானசேகரன்
- **2008 - யுத்தத்தின் சாபம்** (போர்க்காலச் சிங்களச் சிறுகதைகள்) – தமிழில் கலாபூஷணம் வ. தங்கவேலாயுதம்
- **2007 - போர்க்காலக் கதைகள்** (தொகுப்பு) – தொகுப்பாசிரியர் தி.ஞானசேகரன் – ‘மித்ர’ பதிப்பகத்துடன் இணைந்த வெளியீடு
- **2007 - பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி** (பவளமலர்) – தொகுப்பாசிரியர் தி.ஞானசேகரன்
- **2007 - ஆயாக் கடவையான் பதிகங்கள்** (புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்தி விநாயகர் மீது பாடப்பெற்றவை) – தொகுப்பாசிரியர் வே. துஷ்யந்தன்
- **2006 - சிறைப்பட்டிருத்தல்** (சிறுகதைத் தொகுப்பு) - கலாபூஷணம் புலோலியூர் சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2006இல் பரிசு பெற்ற சிறுகதைகள் – தொகுப்பாசிரியர் தி.ஞானசேகரன்
- **2005 - கொக்கிளாய் மாமி** (சிறுகதைத் தொகுப்பு) - கலாபூஷணம் புலோலியூர் சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி 2005இல் பரிசு பெற்ற சிறுகதைகள் – தொகுப்பாசிரியர் தி.ஞானசேகரன்
- **2005 - இந்துமதம் என்ன சொல்கிறது?– 2** (மங்கலப் பொருட்களின் மகத்துவம்) – திருமதி ஞானம் ஞானசேகர ஐயர்
- **2005 - தி. ஞானசேகரன் சிறுகதைகள்** (சிறுகதைத் தொகுப்பு) – தி. ஞானசேகரன் (நாவேந்தன் பரிசு பெற்றது)
- **2004 - வரதர் 80** (தொகுப்பு) – என். சோமகாந்தன்
- **2002 - புதிய சிந்தனை** (மலையக சமூக மேடை நாடகங்கள்) – மலையக வாசுதேவன்
- **2002 - காமன் கூத்து ஓர் ஆய்வு** (ஆய்வுக் கட்டுரைகள்) – சந்தனம் சத்தியநாதன்
- **2001 - புள்ளிகளில் சில புள்ளிகள்** (கவிதைத் தொகுதி) – இக்பால் அலி
- **1999 - அக்கினிப் பூக்கள்** (நாடகம்) – அந்தனி ஜீவா (தேசிய மற்றும் மத்திய மாகாண சாகித்திய விருதுகளைப் பெற்றது)
- **1999 - இந்து மதம் என்ன சொல்கிறது?** – திருமதி ஞானம் ஞானசேகர ஐயர் (இந்துக் கலாசார அமைச்சின் பரிசினைப் பெற்றது)
- **1999 - அவுஸ்திரேலியப் பயணக்கதை** (பயண இலக்கியம்) – தி. ஞானசேகரன்
- **1999 - புரிதலும் பகிர்தலும்** (நேர்காணல்கள்) – தி. ஞானசேகரன் (புலம்பெயர்ந்த எழுத்தாளர்களுடனானது)
- **1999 - மலையக அரசியலும் சமூக வரலாறும்** (ஆய்வுக் கட்டுரைகள்) – சந்தனம் சத்தியநாதன்
- **1999 - குறிஞ்சிநாடன் கவிதைகள்** (கவிதைகள்) – தமிழ்மணி க.வெள்ளைச்சாமி (மத்திய மாகாண சாகித்திய விருதைப் பெற்றது)



**A BRILLIANTLY WRITTEN TRAVELOGUE**

*This book by a young researcher and IT specialist G.Balachandran brought me immense pleasure in making a tour with him to a historically important country in South East Asia, Cambodia or Kampuchiya as it was also known. His style of writing enthralled me very much as it combined visual representation in words combining an effortless use of the Thamil language, restrained and yet perceptive, is commendable. He is a new 'find' even in Thamil journalism. He has a great future as an educationist as well.*


***- K.S.Sivakumaran***

**ஆஹா..! அற்புதம்..!**

இதுவரை தமிழில் வெளிவந்த அத்தனை பயண இலக்கியங்களிலும் வேறுபட்டதாக ஞா.பாலச்சந்திரனின் இப்பயண நூல் விளங்குகிறது. 'ஞானம்' சஞ்சிகையில் இப்பயணக்கட்டுரை வெளிவந்துகொண்டிருந்தபோது, இதனை நான் படித்துவந்தேன். படிக்கும்போது வியப்பும், மகிழ்ச்சியும் ஏற்பட்டன. அவர் வாசகர்களை கம்போடியாவுக்கு மட்டுமல்ல, காலங்கடந்த காட்சிகளுக்கும் இழுத்துச் சென்றுவிடுகிறார். பயணக் கட்டுரை ஒன்றின்மூலம் தமது அறிவின் ஆழத்தையும், ஆளுமையையும், ஆற்றலையும் அவர் அனாயாசமாகப் புலப்படுத்திவிடுகிறார். இதனைச் செய்வதற்கு அவரது எழுத்தாற்றல் பெருமளவுக்குக் கைகொடுத்திருக்கிறது. அவரது எழுத்தாற்றல்தான் வாசகர் பலரை வசப்படுத்தியிருக்கிறது. அவரது தகவல் தொழிநுட்ப அறிவு, வரலாற்று அறிவு, இலக்கிய அறிவு, சமய அறிவு, பொது அறிவு, சிறந்த கற்பனையாற்றல், எழுத்தாற்றல் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று கைகோர்த்துச் செல்லும் பாங்கினை இப்பயணக்கட்டுரையில் தரிசிக்கமுடிகிறது. "ஆஹா! அற்புதம்!" என்ற சொற்களுக்கு அர்த்தம் கொடுப்பதாக 'அங்கோர்' உலகப் பெருங்கோயில் நூல் விளங்குகிறது. நூலாசிரியரின் ஆளுமைக்கும், திறமைக்கும் இது ஒரு தக்க சான்று.

— பேராசிரியர் **துரை. மனோகரன்**

ஞானம் பதிப்பகம்



ISBN: 978-955-8354-45-2